50வது ஆண்டை நோக்கி.......

# மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



## வாழைத்தோட்டத்தில் விழைந்து - முற்றிக் கனிந்த பழம்!

டிசம்பர்– 2009

விலை - 40/=

# திருமண சேவை

**எப்படியும் செய்யலாம் என்பது ஒரு வழி-**
**'இப்படித்தான் செய்வது' என்பது வேல்அமுதன் வழி**



வேல் அமுதன் வழி (சுயதெரிவுமுறை) பற்றிய விளக்கத்தைப் பெற 'சுயதெரிவு முறை முன்னோடி', தனிநபர் நிறுவநர் மூத்த புகழ் பூத்த, சர்வதேச, சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் செவ்வாய், வியாழன் தவிர்ந்த நாட்களில் தொடர்பு கொள்ளுங்கள்!

தொலைபேசி: 2360488/2360694/4873929

**சந்திப்பு** திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு
**நாட்களில் முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில்!**

முகவரி:
8-3-3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பாக, நெல்சன்.
33-ஆம் ஒழுங்கை வழி) 55ம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06

**துரிதமான- சுலபமான- விஞ்ஞானபூர்வமான தெரிவுக்குச் சுய தெரிவு முறையே!**
**மகோன்னத- ரம்மியமான- மணவாழ்வுக்குக் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனே!**



## மல்லிகை

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவர்'

உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே, இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம் தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப் பெற்ற பெருமதி மிக்க சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹென்சார்ட் (04. 7. 2001) பதிவு செய்ததுடன் எதிர் காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது- அத்துடன் உலக வரலாற்றில் முதன் முதலில் சலூனுக்குள் இருந்து வெளிவந்த இலக்கியச் சஞ்சிகையும் மல்லிகையே தான்!

**50 - வது ஆண்டை நோக்கி...**
**டிசம்பர்**
**367**

*'Mallikai' Progressive Monthly Magazine*

மல்லிகை அர்ப்பணிப்பு உணர்வுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திரமல்ல - அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.

201/4, Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
mallikaiJeeva@yahoo.com


# புத்தாண்டில் சிலரது கவனத்திற்கு.....

சந்தாவைப் புதுப்பிக்காதவர்கள் விடயத்தில் இனி நாம் வெகு கவனம் செலுத்த விரும்புகின்றோம்.

ஓர் இதழைத் தபாலில் அனுப்ப நாம் 12 ரூபாக்களை முத்திரைச் செலவாகக் செலவிட்டு வருகின்றோம். மற்றும் இரண்டு தடவைகள் மல்லிகை இதழின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. விலை அதிகரிப்பை முன் வைத்துக் கூட, நாம் காலத்தை மட்டுப்படுத்தாமல் ஒவ்வொரு மாத இதழ்களையும் ஒழுங்காகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வந்துள்ளோம்.

சிலர் வேணுமென்றே அலட்சியமாக இருந்து விடுகின்றனர். 'எப்படியும் எமக்கு மல்லிகை வந்தே தீரும்!' என்ற அதீத நம்பிக்கையையும் தமக்குள்ளே வளர்த்துக் கொண்டும் வந்துள்ளனர்.

நீண்ட நெடுங்கால இலக்கிய நேசர்களை வற்புறுத்தக் கூடாது என்ற நமது இயல்பான இலக்கிய நெஞ்சத்தின் உணர்வுகளைச் சிலர் வேண்டுமென்றே புறக்கணிக்கின்றனர் போலத் தோன்றுகின்றது.

இலக்கிய நண்பர்கள் அனைவரிடமும் நாம் கடந்த காலங்களில் ஆழமான நேசத்தையும் ஆழ்ந்த மரியாதையையும் கொண்டிருந்தோம். என்பது அனைவருக்குமே தெரியும். இது துலாம்பரம்.

நாம் நமக்காக வரித்துக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளையும் கருத்துக்களையும் எந்தக் காலகட்டங்களிலும் மற்றவர்கள் மீது வற்புறுத்தித் திணிக்க முற்பட்டதுமில்லை. அதையே காரணம் காட்டி, யாரையுமே இருட்டடிப்புச் செய்ய முனைந்ததுமில்லை! அட்டைப் படப் பதிவுகள் இதை மெய்யாகவே நிரூபிக்கும்!

எமக்கென்றொரு கொள்கையும் அடிப்படைக் கோட்பாடும் இருப்பதைப் போலவே, ஏனையோருக்கும் அவர்களுக்குகந்த கருத்தாழங்களும் எண்ணச் சிந்தனைகளும் இயல்பாகவே இருக்கும் என்ற ஜனநாயகக் கோட்பாட்டை நாம் நடைமுறையில் வெகுவாகவே கனம் பண்ணி வந்திருக்கின்றோம்.

ஆரம்ப கால கட்டங்களிலிருந்தே நமது அடிப்படை இலக்கியக் கருத்துக்களை நாம் மூடி மறைத்தவர்களேயல்ல. எமக்கென்றொரு பார்வை- நோக்கு நிரந்தரமாகவே இருந்து வந்துள்ளது.

அதற்காக நாம் மற்றவர்கள் மீது எமது கருத்துக்களைத் திணிக்க எந்தக் கால கட்டத்திலும் முனைந்து செயல்பட்டதும் கிடையாது.

திறந்த மனதுடன் தான் இலக்கிய உலகில் நாம் ஆரம்பத்திலிருந்தே செயல்பட்டு வந்துள்ளோம்.

மல்லிகை இன்று இந்த மண்ணைக் கடந்து பல நாடுகளில் மணம் பரப்பி வருவது எதார்த்தமானது. புதிய புதிய பிரதேசங்களுக்குச் சென்றடைகின்றது. எனவே, தேவை கருதி நாம் அலட்சியம் செய்து பாராமுகமாக இருக்கும் சகல சந்தாதாரர்களின் முகவரிகளையும் மறுபரிசீலனை செய்ய வேண்டியது கட்டாய தேவையாகியுள்ளது.

சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டோம். அப்புறம் 'மல்லிகை ஏன் எங்களுக்கு வருவதில்லை?' எனக் கேட்கக் கூடாது.

அடுத்து வெளிவர இருப்பது ஆண்டு மலர். 45- வது ஆண்டு மலர்.

இந்த மலரைத் தயாரிப்பதில் வெகு கண்ணும் கருத்துமாக இயங்கிக் கொண்டு வருகின்றோம்.

மலருக்கு எழுதுகின்றவர்கள் நாட்களைத் தள்ளிப் போட்டு விடக் கூடாது. முன் கூட்டியே எழுதி, மலரின் பக்கங்களில் இடம் பிடித்துக் கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம்.

மல்லிகையின் வளர்ச்சியின் மீது கடந்த காலத்தில் தனி அபிமானமும் அக்கறையும் கொண்டு இயங்கி வந்த ஆர்வலர்கள், விளம்பரம் சேகரிப்பதிலும் எமக்கு ஒத்தாசை வழங்கி, ஒத்துழைப்புத் தர வேண்டும்.

மல்லிகை கடந்த காலங்களில் சந்தாதாரர்களின் பூரண ஒத்துழைப்புடனும் நல்லெண்ணத்தின் பங்களிப்புடனும் தான் இத்தனை ஆண்டு காலமாக வெளி வந்து கொண்டிருப்பதை இலக்கிய உலகமே நன்கறியும். அதே சமயம் அவர்களில் சிலர் மீது நாம் அதீத நம்பிக்கை கொண்டு சந்தாக் கால கட்டத்தையும் மீறி, இதழ்கள் அனுப்பி வந்துள்ளதையும் அன்னாரது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

-ஆசிரியர்

PUBLIC LIBRARY
JAFFNA

# தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது



இனிமேல் தான் இந்த நாட்டுச் சிறுபான்மை இன மக்களினது ஆழ்ந்தகன்ற அரசியல் நுட்பம் செயல்பட வேண்டும். தந்திரோபாயம் காண்பிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் தேர்தல் காலங்களில் 'சிறுபான்மை இன மக்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்போம்!' என வாக்குறுதி கூறப்பட்டு வருவது தேர்தல் வாக்குறுதியாகவே இறுதியில் காணாமலே போய் விடுவது வழக்கம். இது அரசியல்வாதி களின் வாய்ச் சாதுரியப் பழக்கம்.

இந்தத் தடவையும் இவ் வாக்குறுதிகள் புதிப்பிக்கப்படலாம். நம்மில் பலரும் ஒத்தூதலாம். இதைப் பாமரத் தமிழ் பேசும் மக்கள் நம்பி, ஏமாறிவிடக் கூடாது.

காலங் காலமாக- கட்டம் கட்டமாக- இந்த நாட்டுச் சிறுபான்மை இனம் இந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்வதற்குக் கொடுத்து வந்த விலை, கற்பனைக்கும் எட்டாதது. சொல்லிமாளாது. உலக வரலாற்றில் பதியப்படத் தக்கது.

எனவே தான் தமிழ் பேசும் மக்களினது உண்மையான தலைவர்கள் கடந்த காலங்களில் பாஸிசக் கோரிக்கைகளுடனும், அடாவடித்தனங்களுடனும் ஒத்துழைக்காமல் நிமிர்ந்து நின்றவர்கள். மிகப் பொறுப்புணர்ச்சியுடனும் எதிர்கால நம்பிக்கையுடனும் இந்தத் தேர்தலில் தீர்க்கமான ஒரு நல்ல முடிவைக் கண்டடைய வேண்டுமென மனதார ஆசிக்கின்றோம்.

இனக் குழுக்களின் தலைவர்கள் எனப் பட்டம் சூட்டப்பட்டவர்கள் தங்கள் தங்களது குறுகிய சுயநலத் திட்டத்திற்காக விலை போய் விடக் கூடிய ஆபத்தான சூழ்நிலையும் இந்தக் கால கட்டத்தில் தோன்றக் கூடிய சில அசுகைகளும் பத்திரிகைச் செய்திகளில் அடிக்கடி தென்படுகின்றன. பாமர மக்கள் இந்தக் கூற்றை நம்பி விடக் கூடாது.

சிறுபான்மை இனத் தலைவர்களை விட, நம் மக்கள் மிக மிகப் பொறுப்புணர்ச்சியுடனும் ஆழ்ந்த எதிர்காலச் சுபீட்ச நோக்குடனும், பல நேரடி அநுபவ முதிர்ச்சியுடனும் வருங்காலத்தில் செயல் படத் தயாராகவுள்ளனர் என்பதை, அவர்களது செயற்பாடுகளின் மூலமே நிரூபிக்கக் காத்திருக்கின்றனர் என்பதை இப்போதே முன் கூட்டியே சொல்லி வைக்க விரும்புகின்றோம்! இது தேர்தலில் எதிரொலிக்கும்!

முற்று முழுதாகத் தெரியாதவர்களின் வாக்குறுதிகளை விட, ஏற்கனவே தெரிந்து வைத்துள்ளவர்களின் வாக்குறுதிகளை ஓரளவு நம்பலாம். இது ஓர் அநுபவ உண்மை!

தமிழ் பேசும் மக்கள் யாரையுமே நம்ப வேண்டும் என்ற கட்டாயமில்லை. உங்கள் உங்களது சொந்த வாழ்க்கை அநுபவங்களே உங்களுக்கு வழிகாட்டியாக அமைந்தால் அதுவே போதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைநகரில் தமிழ்ப் பணி புரிந்து வரும் சமுதாயப் போராளி

—ஜே. ஏ. எம். இர்ஷாத் ஹுஸைன்

**த**லைநகர் கொழும்பு முற்று முழுதுமாகத் தமிழ் பேசும் மக்கள் மட்டும் வாழும் ஒரு பிரதேசமல்ல. இங்கே சிங்களவர்கள் உட்பட, தமிழ் பேசுவோரும், பிறந் இனத்தவர்களும் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். பல மொழிகள் பேசப்படுவதோடு, பல கலாசாரங்கள்- பல நாகரிகங்கள் இங்கே கைகோர்த்துக் களிப்புறுகின்றன. இந்தக் கலவைச் சூழலின் நடுவே- வண்ணத் தமிழின் சின்னங்கள் சிதறிக் கிடக்கும்- வரலாற்றுப் புகழ் மணக்கும் கொழும்பு நகரின் இதய இடமான எங்கள் வாழைத்தோட்டது வாரிசாக, கடந்த 45 வருடங்களாகப் பன்முக எழுத்தாளனாக- கவிஞனாக- பத்திரிகையாளனாக- நாடகாசிரியனாக எழுத்தாக்கப் பணி புரிந்து வருவதன் மூலம் தமிழ்ப் பணி ஆற்றி வருகிறார், ஒரு சமுதாயப் போராளி!

யார் இந்தச் சமுதாயப் போராளி? சத்திய எழுத்தாளன் (காதிபுல் ஹக்)- கலாபூஷணம் எஸ். ஐ. **நாகூர்கனி** என்ற எழுத்துலகிற்கு நன்கு பரிச்சயமான பேனா மன்னரே, அந்தச் சமுதாயப் போராளியாவார்.

ஒரு நதியின் நீர்மட்டம் இருகரைகளையும் ஒரே அளவு உயரத்தில் தொடும். அது மாதிரி இந்த ஆக்கத்தின் பாட்டுடைத் தலைவனாகிய சத்திய எழுத்தாளர் நாகூர்கனியின் கடந்த வருடகால (1963.4.7 முதல் ஆக்கம் மரபுக் கவிதை. தினகரன் பாலர் கழகம் என்னும் சிறுவர் பகுதியின் பிரசுரமானது குறிப்பிடத்தக்கது) எழுத்துப் பணிகளைக் ஒட்டுமொத்தமாக நோக்கினால், சமூக உணர்வு முனைப்புக் காட்ட, அவர் சார்ந்த முஸ்லிம் சமூகம்- குறிப்பாகத் தலைநகரத்து முஸ்லிம்கள்- விடியல் வெளிச்சம் காண பேனா பிடித்திருப்பதையும், எழுத்துக்கள் இவரை ஆள இடம் விடாமல், இவர் எழுத்துக்களை 'அளந்து' பார்த்து ஆண்டிருப்பதையும் உய்த்துணரலாம்.

-இதற்குக் காரணம் என்ன?

தாரம் அமைவது போல தக்க குரு இவருக்கு அமைந்ததும், அதனை இவர் தக்கபடி பயன்படுத்திக் கொண்டதுமே இவரது எழுத்தின் வெற்றிக்கும் அழகான தமிழ் இவரிடம் பளிச்சிட்டதற்கும் காரணம் எனலாம். இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களிலும் சரி, பத்திரிகையுலகிலும் சரி மறக்க முடியாத, மறக்கக் கூடாத ஒரு ஜாம்பவான் தான் மறைந்த ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அவர்கள் (இந்தச் சிவநாயகத்தாருக்குத் தலைநகரில் ஒரு 'மறவாமை விழா' எடுக்க வேண்டும் என்ற சிந்தனையின் சொந்தக்காரராக மல்லிகை ஆசிரியர் திரு டொமினிக் ஜீவாவும், அதன் செயற்பாட்டு செயலாளராகச் சகோதரர் நாகூர்கனியும் முனைப்புடன் முகாமைத்து வம் செய்து வருவது மேலதிகத் தகவல்) இந்த சிவநாயகத்தா ரின் பாசறையில் பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக ஜொலிப்பவரிடையே இந்தக் கலாபூஷணம் நாகூர்கனி விஷே டமானவராவார்.

"இன்று இலங்கையில் முஸ்லிம் எழுத் தாளர் உலகில் எந்தன் பத்திரி கைத்துறை சிஷ்யர்களில் ஒருவரான 'முஸாபிர்' என்ற எஸ். ஐ. நாகூர்கனி புதுடில்லியில் தலை நிமிர்ந்து நிற்கும் குதுப் மினார் என்ற வானுயர் கோபுரத்தைப் போல ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராக உயர்ந்து நிற்கிறார்......'' என, சகோதரர் எஸ். ஐ. நாகூர்கனியின் **'காலத்தின் சுவடுகள்'** நூலுக்குத் தான் எழுதிய முன்னுரையில் ஆசிரியர் சிவநாயகம் மேற்கண்டவாறு பாராட்டி எழுதிய வரிகள் நம் கவனத்திற் குரியன.

சமீபத்தில் சகோதரர் நாகூர்கனியின் அபிமானிகள் சிலர் அவருக்குக் 'கலாபூஷ ணம்' விருது கிடைத்ததையொட்டித் தலைநகரில் ஒரு விழா (30.08.2008) எடுத் தனர். அக்குழுவில் நான் செயலாளராகப் பணியாற்றும் பாக்கியம் கிடைத்தது. அவ் விழாவில் சிறப்பம்சமாக, விழா நாயகர் நாகூர்கனி தனக்குப் படிப்பித்த ஆசிரயர் களை மேடையில் வைத்துப் பொன் னாடை போர்த்திக் கௌரவித்த நிகழ்வு அமைந்தது. அதில் தனக்குப் படிப்பித்துத் தந்த தமிழாசிரியர்களான தெல்லிப்ப ளைப் பண்டிதர் த. தர்மலிங்கம்- கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் க. பொ. த. உயர் தரம் பயின்ற போது, தமிழ் படிப்பித்துத் தந்த மறைந்த வை. கா. சிவப்பிரகாசம் ஆகிய இருவரையும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க முடியாமற் போனது குறித்து வருத்தம் தெரிவித்ததை நானறிவேன்.

அதே வேளை-

'சுவாமி விபுலானந்தர் என் தமிழில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதாவது சுவாமி விபுலானந்தரின் தமிழ் என்னில் வாழ்ந்து கொண்டிருக்கிறது' என்று சகோ தரர் நாகூர்கனி பெருமையாகக் கூறி மகிழ்வார்.

''எப்படி?'' எனக் கேட்டால், ''சுவாமி விபுலானந்தரிடம் தமிழ் படித்த மாணவர் புலவர்மணி ஆ.மு. ஷெரிப்தீன். புலவர் மணியிடம் தமிழ் படித்த மாணவர் கல் முனையைச் சேர்ந்த அல்ஹாஜ் அபுசாலி ஆசிரியர். இந்த அபுசாலி ஆசிரியர் நம் சத் திய எழுத்தாளருக்குத் தமிழ் படிப்பித்த ஆசிரியர்களில் ஒருவர். ஆக...... வாழை யடி வாழையாகச் சுவாமி விபுலானந்தரின் தமிழ் என்னிடம் வாழ்ந்து கொண்டிருக் கிறது. அதனால் தான் என்னால் சுத்தமா கத் தமிழ் எழுத முடிகிறது. அழகு தமிழ் என்னிடம் பழகிப் பளிச்சிடுகிறது'' என்பார்.

சத்திய எழுத்தாளர் நாகூர்கனியின் எல்லா ஆக்கங்களுமே, அது கட்டுரையா கவோ, கவிதையாகவோ, சிறுகதையா கவோ எதுவாக இருந்தாலும், அதில் சமு தாய உணர்வு இழையோடவே செய்யும். '' எனது 46 வருட எழுத்துப் பயணத்தில் இரண்டேயிரண்டு காதல் கதைகளை மட்டுமே எழுதியிருக்கிறேன். மற்றவை யாவும் சமூகத்தைப் பற்றியதாகவும், சுற்றியதாகவும், தொற்றியதாகவும் இருக் கும்'' எனக் கூறும் சத்திய எழுத்தாளர் 'சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ்' அரங் கேற்றவென இரு மேடை நாடகங்களை எழுதிக் கொடுத்தார். அவை இரண்டுமே இதுவரை எந்த நாடகாசிரியரும் தொட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத புதிய கோணத்தைப் புதிய கோணத்திலான, சிந்தனையைத் தூண்டும் சமூக உணர்வு தழுவிய கருக்களாகவேயிருந்தன என்பதை விமர்சகர்கள் விதந்துரைத்துள்ளனர்.

சமூகப் போராளி என இவரை விளிப்பதால், இவர்- இவர் சார்ந்த முஸ்லிம் சமூக வட்டத்தில் பயணிக்கும் முஸாபிராகவே (வழிப் போக்கனாகவே) இருப்பார் என நினைத்து விடக் கூடாது. 'தமிழே என் தாய்மொழி' எனத் துணிந்துரைக்கும் இந்தச் சத்திய எழுத்தாளர், முஸ்லிம் என்ற சமூக வட்டாரத்தையும் தாண்டி, தான் பேசும் தாய் மொழி தமிழின்- தமிழ் சமூகத்திற்கும் உறவுப் பாலமாகத் தன் எழுத்துப் பணிகளை மேற் கொண்டிருந்தார். எப்படி? மூதறிஞரும் பேராசிரியருமான கா. சிவதம்பிக்குத் தமிழக அரசு வி. க. விருது வழங்கிக் கௌரவித்ததை நாம் அறிவோம். பேராசிரியர் விருது பெற்று வந்த காலக் கட்டத்தில் நம் சத்திய எழுத்தாளர் நாகூர் கனி 'வி. க. விருது பெற்ற கா. சிவத்தம்பியை ஸாகிராக் கல்லூரி கண்ணியப் படுத்த வேண்டும்' என்ற தலைப்பில் வீரகேசரியில் ஓர் ஆக்கம் எழுதியிருந்தார். இந்த ஆக்கத்தைப் படித்தவுடன் பேராசிரியர் சிவத்தம்பி மறைந்த முன்னாள் தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதனுக்குப் போன் பண்ணி "யாரிந்த நாகூர்கனி?" எனக் கேட்டுள்ளார். அதற்குத் தினகரன் ஆசிரி யர் "நம்ம எச்செம்பியின் ஒன்றுவிட்ட சகோதரன்" என்றாராம். உடனே சிவத்தம்பி அவர்கள் "அதுதானே இப்படியொரு சிந்தனை வந்திருக்கு" என்றாராம்.

இதுபோன்றே கிரிக்கெட்டில் நம் முரளிதரன் உலக சாதனை படைத்திருந்த போது, நம் கலாபூஷணம் நாகூர்கனி, 'முரளிதரனை முஸ்லிம் சமூகம் ஊர்வலமாக அழைத்து வந்து, கொழும்புச் ஸாகிரா முன்றலில் ஒரு பாராட்டு விழா நடத்தி கௌரவிக்க வேண்டும்' என்ற கருத்தை முன்வைத்து எழுதி, வீரகேசரி- தினகரனில் பிரசுரித்து, பலரினது பாராட்டையும் பெற்றுள்ளார் என்பதை இலக்கியத் தெருக்களில் உரத்துச் சொல்லவே வேண்டும். இதன் விளைவாக முரளியின் மண விழாவுக்கு விசேஷ அழைப்பில் நம் எழுத்தாளர் பங்குபற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி இரு கட்டுரைகளும் சத்திய எழுத்தாளரின் புதுநோக்கைப் புரிய வைக்கின்றன அல்லவா? தனது எழுத்துப் பணிகள் மூலம் பல சாதனைகளைப் படைத்த சகோதரர் நாகூர்கனி கடந்த 24.05.2009 தினகரனில் தகவல் களஞ்சியமாக 50 வருடகாலமாக உலக சாதனை படைத்து வரும் அட்டுளுகமையைச் சேர்ந்த- 72 வயதுடைய மன்சூர் பைஸல் என்பவர் பற்றி எழுதிய கட்டுரையை வாசித்த புரவலர் ஹாசிம் உமர், உடனே நம் எழுத்தாளர் நாகூர்கனியுடன் தொடர்பு கொண்டு, அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்ற புரவலர் புத்தகப் பூங்கா வெளியீட்டு விழாவில் வைத்து, சாதனையாளர் மன்சூர் பைஸலை வரவழைத்து. விஷயத்தை வெளிச்சமிட்டுக் காட்டிய எழுத்தாளர் நாகூர்கனி முன்னிலையில் பொன்னாடை போர்த்தி, 25,000 ரூபா பொற்கிழி வழங்கி, உற்சாகப் படுத்தினார். இது கலாபூஷணம் நாகூர்கனியின் எழுத்துக்குக் கிடைத்த வெற்றியை விளம்பரம் செய்கிறதல்லவா?

இத்தகைய சிறப்பான படைப்பாளி- பத்திரிகையாளன் நம்மத்தியில் வாழ்வது நமக்கெல்லாம் பெருமை. இந்தப் பேனா மன்னன் நாகூர்கனி மேலும் பெருஞ் சாதனை படைக்க நாமும் பிரார்த்திப் போமாக!



மேல் மாகாண இலக்கிய வரலாற்றிலேயே முதன் முதலில் தமிழ்ச் சாஹித்திய விழா 24.11.09 அன்று மாலை மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்கில் மிகக் கோலாகலமாக நடந்தேறி முடிந்தது. ஏராளமான கலைஞர்களுக்கு விருதுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த விழா ஞாபகார்த்தமாகச் சிறப்பு மலரொன்றும் அமைப்பாளர் திரு. எஸ். ராஜேந்திரன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த விழாவை வாழ்த்திப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அந்த நூலில் எழுதியுள்ள கட்டுரையை மல்லிகை மறு பிரசுரம் செய்து மகிழ்கின்றது.

-ஆசிரியர்

# மேல் மாகாணத் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி- வேண்டுதல்கள் சிலவற்றுடன்

**—பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி**

மாகாண சபைகள் தோற்றுவிக்கப் பெற்றதன் பின்னர் மேல் மாகாணம் என்னும் பெரும் பரப்பிற்கான முதலாவது தமிழ் சாகித்திய விழா மேல் மாகாணசபையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளதென்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மேல் மாகாணம் என்பது கொழும்பு களுத்துறை, கம்பஹா, தெஹிவல, கல்கிசை, ஹோமகம, மகறகம, மொறட்டுவ, நீர்கொழும்பு, பாணந்துறை, ஜா- எல ஆகிய மாவட்டங்களை அடக்கியுள்ளது. இப்பிரதேசங்களுள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லீம்களும், இந்திய வம்சாவழித் தமிழரும், இலங்கைத் தமிழரும் உள்ளனர். சனத் தொகை பற்றிய சரித்திட்டமான விபரங்கள் இல்லை. எனினும், கல்வி நிலையில் இம்மாகாணத்தில் தமிழ் பெறும் இடத்திற்கான புள்ளி விபரங்கள் பின்வருமாறு:

தமிழ் மொழி வழிப் பாடசாலைகள் 148 என்ற விபரம் தரப்பட்டுள்ளது. தமிழ் மொழி வழிக் கல்வியையும் உள்ளடக்கிய உயர் கல்வி நிறுவனங்களான பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள், தேசியக் கல்வி நிறுவகம், தேசியப் பாடசாலைகள் பல மேல் மாகாணத்திலுள்ளன.

மேல் மாகாணத்தின் முக்கியத்துவம் நாட்டின் தலைநகராகிய கொழும்பை உள்ளடக்கியுள்ளமை ஆகும். கொழும்பு வடக்கிலுள்ள முகத்துவாரம், பாலத்துறை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளிலே தமிழ் மக்கள் உள்ளனர். கொழும்பின் புறக்கோட் டையில் கணிசமான முஸ்லீம், இந்திய வம்சாவழித் தமிழர், இலங்கைத் தமிழர், இலங்கைத் தமிழர் குழுமங்களைச் சார்ந்த வணிக நிறுவனங்கள் (முதலாளிகளும், தொழிலாளிகளும்) பல உள்ளன.

கொழும்பின் தமிழ் நிலைப்பட்ட மிகப் பெரிய முக்கியத்துவம் இலங்கையின் முக்கிய தமிழ் புதினப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், தினக்குரல், சுடரொளி ஆகியன வெளிவருவதேயாகும். தினகரன், வீரகேசரிப் பத்திரிகைகளிலே தமிழ் பத்திரிகையியல் வரலாற்றிலேயே முக்கியத்துவம் பெறுபவர்களான வே.க.ப. நாதன், கே. பி. ஹரன், கே. வி. எஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ், எஸ். டி. சிவநாயகம், க. கைலாச பதி, இ. சிவகுருநாதன், முகமது கியாஸ், செயினுள் குசெயின் போன்ற பலர் தம் ஆளுமை வலுவினைப் பதித்துள்ளனர். இப்பத்திரிகையாளர் பட்டியலில் எச். எம். பி. முகிதீனுக்கு மிக முக்கிய இடம் உண்டு. ஞாயிறு வீரகேசரி, ஞாயிறு தினகரன் ஆகிய பத்திரிகைகள் ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுவன வாகும்.

இவற்றுடன் மல்லிகை போன்ற முக்கிய சஞ்சிகைகளும் கொழும்பிலிருந்தே வெளிவருகின்றன. இத்தகைய ஒரு பின்புலத்திலேயே இச்சாகித்திய விழா ஒழுங்கு செய்யப்படுகிறது. நீண்டதொரு பாரம்பரியம் செழிப்புடன் தொடர்வதற்கும், வளர்வதற்கும் இச்சாகித்திய விழா பெரிதும் உதவும், உதவ வேண்டும்.

இதனை ஒரு தொடக்கமாகக் கொண்டு மேல் மாகாணச் சபையின் உதவியுடன் மேல் மாகாணத்துக்குத் தமிழிலக்கிய முயற்சிகள் பற்றிய ஒரு கையேடு கொண்டு வரப்படல் வேண்டும். இன்னுமொரு மிக முக்கியமான தேவை மேல் மாகாணப் பிரதேசத்தில் நிலவும் சிங்கள, தமிழ், முஸ்லீம் நல்லுறவுகளை எடுத்துக் காட்டும் வகையிலும், வலுப்படுத்தும் வகையிலும் இலக்கியத்தைப் பயன்படுத்தும் இயக்கங்கள் மீளத் தொழிற்படல் வேண்டும் என்பதாகும். இலங்கை முற்போக்கெழுத்தாளர் சங்கம், ஜனத்தா லேக்க பெறமுன ஆகியன இவ் விடயத்தில் நிறைந்த பங்காற்றியுள்ளன.

தமிழ் பேசும் மக்களினதும், சிங்கள மக்களினதும் உறவுகளை உன்னிப்பாக நோக்குமிடத்து தமிழ் பேசும் மக்களின் கலை, இலக்கியம், பண்பாடு ஆகியன பற்றி சிங்கள மாணவர்களுக்கு எதுவுமே தெரியாத நிலை உள்ளது. இலங்கைத் தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்கள இலக்கியத்திலும் பணிபுரிந்துள்ளனர். இவை யாவற்றையும் வெளிக் கொண்டு வர வேண்டும். இந்த வரலாற்றினைச் சிங்களத்திலும் தமிழிலும் பதிவு செய்தல் வேண்டும். இலங்கையின் சுதந்திர கால வரலாற்றைப் பார்க்கும் பொழுது மிக முக்கியமான, ஆனால் துன்பகரமான உண்மையொன்று மேற்கிளம்புகின்றது.

அதாவது இந்நாட்டில் தேசிய ஒருமைப் பாட்டிற்கான (National Integration) எந்தவொரு திட்டவட்டமான அரச நிலை முயற்சியையும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய இன ஒதுக்கலுக்கான மதில்களை உடைத்து உண்மையான தேசிய ஒருமைப்பாட்டுக்கான வழி வகைகளை மேல் மாகாண சபை பண்பாட்டுத்துறை செய்ய வேண்டும்.

சிங்களத்திலுள்ள கலை, இலக்கிய வளர்ச்சிகள் பற்றித் தமிழிலும், தமிழிலுள்ள கலை, இலக்கிய வளர்ச்சிகள் பற்றிச் சிங்களத்திலும் செய்திட்டங்கள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேல் மாகாணத் தமிழ் சாகித்திய விழா பல எதிர்பார்ப்புகளை நம்மிடத்தே கிளப்புகின்றது. இந்நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் தத்தம் பண்பாட்டு வளங்களைப் பேணுகின்ற அதே வேளையில் மற்றைய இனக் குழுமத்தினருக்கும் இவ்வளங்களை எடுத்துரைத்தல் வேண்டும்.

அரசியல் காரணமாக ஏற்பட்ட பிளவுகளைப் பண்பாட்டுப் பாரம்பரியம் காட்டும் ஒற்றுமை மூலம் வளர்த்துக் கொள்ளுவோமாக.

நன்றி: மேல் மாகாணச் சாகித்திய விழா மலர்.



குறுங்கதை

# சாமர்த்தியம்

—வேல் அமுதன்

''தம்பி வரதன்! செளந்தரியை உங்களுக்குப் பிடித்திருக்குத் தானே? எங்களுக்குப் பிடித்திருக்கு. வடிவு- அடக்க ஒடுக்கம் தெரியுது; நல்ல சீதனமும் தருகினம். ஓமெண்டு சொல்லலாம் தானே?'' வரதனின் அப்பா அழகரட்ணம் நேற்றைய தினம் பார்த்த மணப் பெண் செளந்தரி பற்றி மகனின் கருத்தைக் கேட்டார்.

“இல்லை அப்பா!” மகனின் மறுப்பு அழகரட்ணத்தைத் தூக்கிவாரிப் போட்டது. மகன் செளந்தரியை நிராகரிப்பதை விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை.

''தம்பி பிள்ளைக்கு என்ன குறை? வடிவில்லையா? படிப்பில்லையா? சீதனம் ஏதும் போதாதா?''

''வடிவழகுதான் பிரச்சினை அப்பா! அழகுக்கு வேலி போட வேணும். ஏன் தேவையில்லாத பொறுப்பு''

மகன் சொல்வது நொண்டிச் சாக்கு என்பது அழகரட்ணத்திற்கு விளங்கியது. இருந்தும், வற்புறத்தல் நல்லதல்ல என்பதற்காகப் பேச்சை அவ்வளவோடு இன்று முடித்துக் கொண்டார்.

நொண்டிச் சாக்கு என்பதே உண்மை! ஆனால், அதற்கு வலுவான நியாயம் இருந்தது என்பது வரதனுக்கு மாத்திரம் தான் வெளிச்சம்.....

வரதன் பெண்ணைத் தனிமையிற் சந்தித்த போது, செளந்தரிக்கு ஒரு வாக்குறுதியை வழங்கி விட்டான்.

செளந்தரி வரதனிடம் உருக்கமாக வேண்டிக் கொண்டது;

''நீங்கள் தயவு செய்து மறுக்காது ஒரு உதவி செய்ய வேணும். நான் ஒருத்தரை உயிருக்கு உயிராகக் காதலிக்கிறன். ஆனால், அவர் இன்னும் தொழில் தேடிக் கொள்ளயில்லை. இன்றைய நிலையில் நான் எனது உண்மை நிலையை வீட்டில் வெளிப்படுத்தவேலா. எனவே, நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை எனச் சொல்லி என்னைக் காப்பாற்ற வேணும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பலாம் என்பதையாவது நம்பு

-வை. சாரங்கன்

எனது
இயங்கு தளத்தில் இருந்து,
இரத்தம் கசிகிறது.

அடித்தளத்தை சமைத்த
கைகள்,
வருடுவதற்கு பதிலாக
பிறாண்டுகின்றன.

தேவதைகள் பேய்களாகவும்,
பேய்கள் தேவதைகளாகவும்,
மாறிக் கொண்டிருப்பதை
என்னால்
சீரணிக்கவே முடியவில்லை.
மின்சார நிலவுகளின்,
செயற்கை ஒளியில்
இருவரும் பேசிக் கொள்கிறோம்
எதை எதையோ.....?

பனிக்காற்றும் பரிமாறிய
பாதரசக் குளம்புகளில்,
தேடிக் கொண்டிருந்த- ஒரு முகம்
தென்பட்டது.

எதிர்பாராத உறவு,
எங்கள் இருவருக்கும்
இயல்பொப்பும்,
இடைவெட்டும்,
குறுக்கீடும்- எதுவென்று
வரையறுக்க முடியாத ஒன்றால்
நிகழ்ந்திருக்க வேண்டும்.

நான் நம்புகிறேன்.
தயவு செய்து- நீயும் நம்பு-
என்னை நம்பலாம்
என்பதையாவது.





# கற்கண்டும்- சர்க்கரையும்!

-செங்கை ஆழியன்

சிறுவயதுச் சிந்தனைகளில் பெரிய அக்காவினால் நான் அதிகம் போஷிக்கப்பட்டவை நினைவு வருகிறது. குடும்பத்தின் கடைக்குட்டியான என்னை அக்கா காவித் திரிந்தார். நிலத்தில் இடப்பட்ட தடுக்கில் நான் கிடந்த காலத்திலும்பார்க்க பெரியஅக்காவின் மடியில் சிரித்துக் கும்மாளமிட்ட காலம் தான் அதிகம் என்று அம்மா கூறுவார். ஏணையில் துாங்கிய காலவத்திலும் பார்க்க உன் தோள்களில் உறங்கிய காலம் அதிகம்.அப்படி ஒரு பாசத்தை அக்கா என் மீது சொரிந்தார்.

“நான் பெத்தது தான். உன்னை வளர்த்தவள் உன் பெரியக்கா தான். காலத்துக்கக் காலம் நேரம் அறிந்து குளிக்க வார்த்து அலங்கரித்து உணவூட்டி சீராட்டி வளரித்தவள் அவள். உன்னை எப்போதும் தன் அரையணைப்பில் வைத்திருப்பாள். செம்பருத்திப பூக்களைப் பறித்து ஏதோவெல்லாம் சேர்த்துக் காய்ச்சி தும்பு செதுக்கிய சிரட்டையில ஊற்றிக் காய வைத்து அதனை உரைத்து உன் நெற்றியில் பெரியதொரு பொட்டும் உன கன்னத்தில் சிறியதொரு பொட்டு கண்படாதிருக்க வைத்திருப்பாள். என் மற்ற அக்காமார் அவற்றினைச் செய்தால் அவள் முகம் வாடிவிடும். உன்னைத் தன் மகனாகப் பாவித்தாள்.” என்பாள் அடிக்கடி அம்மா. நான் கடைசி வரை குட்டித் தம்பியாகத் தான் இருந்திருக்கிறேன்.

என் அத்தான் பெரிய உத்தியோகத்தன் அல்லர். ஒரு பாயினுடைய கடையில வேலையாளாக இருந்தார். அத்தானின் சொற்ப வருமானத்தில் சீராகக் குடும்பம் நடத்த அக்காவால் முடிந்தது. வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தார். ஏழு பிள்ளைகளையும் பெத்து வளர்த்து ஆளாக்குவதில் செலுத்திய அக்கறையையும் விடாமுயற்சியையும் நானறியாதல்ல.

அக்காவின் வீட்டில் அக்காலத்தில் அற்புதமான ஒரு புகைப்படம் பிறேமிட்டு சுவரில் தொங்கியது. திருமணக் கோலத்தில் அக்கா ஒரு கதிரையில் அமர்ந்திருக்க அருகில் உலகத்தினை வெற்றி கொண்ட பெருமிதத்துடன் அத்தான் வேட்டி சால்வை நாசனலுடன் ஒரு பக்கத்தில் நிற்க மறுபக்கத்தில் ஆசையண்ணர் அரைக் காற்சட்டையுடன் அதே கறுத்த பொட்டுடன் நிற்கிறார். அக்காலத்திற்கேயுரிய விதத்தில் கொய்யம். வைத்து சேலை அணிந்திருக்கிறார். மூக்கில் இடுப்பில் காதுகளில் முறையே நத்து. ஒட்டியானம், தொங்கட்டான். அது ஒரு அற்புதமான கறுப்பு வெள்ளைப் புகைப்படம்.:.

பெரியக்காவின் பெருமைகளை நான் இன்றும் எண்ணி வியக்கின்ற நான்கு நிகழ்ச்சிகள் நினைவில் அழியாது இருக்கின்றன. அக்கா எவ்வளவு பெரியவள் என்று நிருபித்த சம்பவங்கள் அவை. ஒன்று மணவறையில் மணப் பெண்ணாக அக்கா தலைகுனிந்து அமர்ந்திருக்கிறார். உன்னை அத்தானுக்குத் தத்தம் பண்ணிக் கொடுக்கின்ற வேளை. மணவறையில் உன் பக்கம் அம்மாவும் ஐயாவும் அமர்ந்திருக்கிறார்கள். எனக்கு அப்போது மூன்று வயது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அம்மாவிடம் பால் குடிக்க ஒடிவந்தேனாம். நான் அம்மாவின் சேலையைப் பற்றிக் கொண்டு அழத்தொடங்கினேனாம். 'தம்பிக்குப் பசி. போய் பால் கொடுத்திட்டு வா அம்மா' என்றாயாம்.

"என் கலியாணத்தைக் குழப்பப் பார்த்தான் சற்குணம்.." என்று அத்தான் சிரிப்பார்.

பெரியத்தான் ஓர் அற்புதமான மனிசன். சராசரி உயரமும் அரையில் கட்டிய வேட்டியும் வெண்மை மாறாத சேர்ட்டும் அவருக்கு எப்போதும் ஒரு தனிக் கம்பீரத்தைக் கொடுக்கும். நெற்றியில் எப்போதும் விளங்கும திருநீறு அவரின் சாந்த குணத்தை எப்போதும் பறை சாற்றிக் கொண்டிருக்கும். அவா காலையில் எழுந்து வேலைக்குப் போனால மாலையில் வீட்டுக்கு வருவார். அவர் வீட்டில இருப்பது பக்கத்து வீட்டாருக்குத் தெரியாது. அவர் உரக்கப் பேசி ஒருபோதும் நான கேட்டதில்லை. யாருடனாவது சச்சரவுப்பட்டிரக்கிறாரா எனப் பெரியக்காவிடம் கேட்டிருக்கிறேன்.

"ஒருத்தருடனும் சண்டைக்குப் போக மாட்டார். ஆனால் சரியான பிடிவாதக்காரர். ஒருத்தரைப் பிடிக்கவில்லையென்றால ஒதுங்கிப் போய்விடுவார். தான் எடுத்தத முடிவை லேசில் மாற்றிக்கொள்ள மாட்டார். அததோடு சரியான கண்டிப்புக்காரர்.'' என்றார் அக்கா.

பெரியத்தான் என் மீது மிகுந்த வாரப்பாடு கொண்டிருந்தா் என்பது எனக்குத தெரியும். பொறுத்தவிடத்தில் என்னை வெட்கமடைய வைக்கும் சங்கதி ஒன்றினை அவர் வைத்திருந்தார்.

"எனது கலியாணத்தை மூன்று வயசில் குழப்பப்பார்த்தான்'' என்று மணவறையில் அம்மாவிடம் பால் கேட்ட கதையை அவிழ்த்து விடுவார்.

பெரியத்தானுக்குச் சீதனமாக நாங்கள் குடியிருந்த வீட்டைக் கொடுத்திருந்தோம். இரண்டறைகள், விறாந்தை, தலைவாசல் என்பன கொண்ட ஓலைக் கூரை வீடு. மண் சுவர்கள். தலைவாசல் சீமேந்துத்தரை. திருமணமாகி ஐந்து மாதங்கள் வரை பெரியக்காவின் குடும்பத்துடன் நாங்கள் ஏழுபேர் சேர்ந்து வாழ்ந்தோம். எல்லாருக்கும் அச்சிறிய வீடு போதுமானதாகவில்லை. பெரியக்காவுக்கும் சின்ன அக்காவுக்கும் சிறுசிறு சண்டைகள் ஏனோ ஏற்பட்டன.

ஒருநாள் மாலைப்பொழுதில் அடிவளவுப் புளியமரத்தடியில் நண்பர்களோடு விளையாடிக் கொண்டிருக்கும் போது வீட்டில் பெரும் அலறல் எழுந்தது. விடயம் அறிய ஊடி வந்தேன். அக்காமார் அழுது கொண்டிருந்தார்கள். அம்மா தன் கரத்தால் தலையிலடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்தார். என்ன நடந்ததென்று புரியவில்லை.

அந்த சம்பவத்தின் பின்னர் நாங்கள் வேறொரு வீட்டினை வாடகைக்கு எடுத்துக் கொண்டு குடியேறிவிட்டோம். ஏன் அத்தானையும் பெரியக்காவையும் அந்த வீட்டில் தனியாக இருக்கவிட்டுவிட்டு வெளியேறினோம் என்பதற்கான காரணம் எனக்குப் பிற்காலத்தில் அம்மா சொல்லித் தெரிய வந்தது. பெரியக்காவுக்கும் சின்ன அக்காவுக்கும் ஏற்பட்ட சிறிய சண்டை அன்று உச்சமடைந்ததாம். சின்னக்கா அம்மியில் செத்தல் மிளகாய்ச் சம்பல் அரைத்துக் கொண்டிருந்தார். அக்காமார் இருவருக்கும் வார்த்தைகள் வலுத்துக் கொண்டன. தீடீரென சின்ன அக்கா அம்மியிலிருந்த சம்பலைத் தனது வலக்கரத்தால் அள்ளி எடுத்துப் பெரியக்காவின் முகத்தில் அப்பி விட்டாவாம்.

இச்சம்பவத்தின் பின்னர் பெரியத்தான் இடிந்து போனார்.

"நாங்கள் இனி இங்கிருப்பது சரியல்ல. வேறை வீடு பார்ாக்கிறம்...'' என்று ஐயாவிடம் கூறினார்.



"இது உங்க சீதன வீடு தம்பி நாங்க வேறை வீடு பார்க்கிறம். இனி ஒண்டா இருக்க முடியாது. உங்க குடும்பமும பெருக்குது.. இனி தனியா இருங்கோ. உங்கட சம்பளத்தில வாடகை கொடுக்க முடியாது கண்டியளோ?'' என்றாராம் ஐயா.

பெரியத்தான் எனக்கும் என் சின்ன அண்ணாவுக்கும் பட்டப் பெயர்கள் வைத்துச் செல்லமாக அழைத்து வந்தார். சின்ன அண்ணரை அவர் விரும்பி நித்தம் சாப்பிடும் கற்கண்டு என்றும் என்னைச் சக்கரை என்றும் அழைப்பார். அவர் அழைப்பில் அன்பும் பாசமும் நிறைந்திருக்கும். அக்கா சிறிய ஹொர்லிக்ஸ் போத்தலில் சக்கரை வெல்லக்கட்டியைப் போட்டு வைத்திருப்பார். நான் ஒரு தடவை அதனைத் திறந்து கையை அதனுள் நுழைத்து சக்கரையை எடுத்தேனாம். கையை எடுக்க முடியவில்லை. பயந்து போய் அலறியபோது பிடிபட்டேனாம் அதற்குப் பிறகு சர்க்கரை ஆனேன்.

இரண்டு அறைகள் கொண்ட சிறிய வீடு. பிள்ளைகளோடு வாழப் போதாது தான் ஆனால், அக்காவின் திருப்தி யாருக்கும் வராது. ஒரு நாள் தூரத்து உறவான இராசையா அண்ணரும் சின்னம்மா அக்காவும் கைக்குழந்தை ஈஸ்வரியுடன் கையில் ஒரு றங்குப் பெட்டியுடன் வந்து முற்றத்தில் நின்றனர். அவர்கள் நின்ற கோலத்திலிருந்து நிகழ்ந்துவிட்ட அவலம் புரிந்தது. வீட்டின் ஓர் அறையை ஒதுக்கிக் கொடுத்ததுடன் அவர்களுக்கு அடுக்களையுடன் ஒரு பத்தி இறக்கி குசினியாக்கிக் கொடுத்தார். உயர் மனப்பாங்கு அக்காவிடம் இருந்தது. அக்காவின் வீட்டுப் படலை எல்லாருக்கும் திறந்திருந்தது.

அதனால் தான் எங்களது பெரியய்யா தனது கடைசி காலத்தில் அக்காவைத் தேடி வந்தார். அவருக்கு மனைவி பிள்ளைகள் எவருமில்லை. பெரியய்யா உடல் தளர்ந்து தன்னால் இனி எதுவும் ஆற்ற முடியாது என்ற நிலையில் அக்காவிடம தஞ்சமாக வந்தார். அவ்வளவு கஞ்டத்திலும் பெரியய்யாவை அவர் மரணம் அடையும் வரை அக்கா மகளாக இருந்து பணிவிடை செய்து அனுப்பி வைத்தார். அந்த மனப்பாங்கு எவரிடமுமில்லை.

மழை பொழிந்து கொண்டிருந்த ஒரு நாள் மதிய வேளையில் சிவியா தெருவிலிருந்து ஒரு சிறிய உமலுடன் வயிரவன் வந்து முற்றத்தில் நின்றிருந்தான். அத்தான் குடும்பத்தின் குடிமை அவன். தொண்டு துரவுகள் செய்து கொடுத்ததை வாங்கி உணபான். வயிரவன் தலை குனிந்தபடி அழுதபடி நின்றிருந்தான். "ஏன்ராப்பா நாங்கள் இலலையா? நீ இங்கேயே இரு. கொடுத்ததைச் சாப்பிடு. தலைவாசலோடு ஒரு பத்தி இறக்கி அதில் வசிக்கத் தொடங்கினான். அக்காவின் பெருந்தன்மையை எண்ணிக் கொள்வேன்.

பெரியக்காவின் பிள்ளைகள் திக்கிற்கொன்றாக உலகம் எங்கும் சிதறிப் போனார்கள். பெரியக்காவும் கனடாவுக்குச் சிலகாலம் மக்களுடன் சென்று இருந்து விட்டு கனடா பிடிக்காததால் யாழ்ப்பாணம் திரும்பி வந்தார்கள். மூத்தமகளுடன் அவர் வீட்டில் வாழ்ந்து முடித்தார்கள்.

பெரியக்காவின் வளவு 'ட'வடிவினது. எனக்குத் தெரியத் தக்கதாகஅந்த வளவின் ஓர் அந்த மூலையில் புளியமரம் ஒன்று சடைத்து, அம்மா எனக்குச் சொல்லிய கதைகளில் வருகின்ற இராச்சதன் மாதிரி வளர்ந்திருந்தது. ஆறடிச் சுற்றும் முப்பது அடிகளுக்கு மேற்பட்ட உயரமும் கொண்டிருந்தது. அந்த மரத்தை நல்லெண்ணெய் வார்க்கிற செக்கிற்கு வாங்கிவிட வேண்டும் என்பது எங்கள் வீட்டிற்கு எண்ணெய் தருகிற நல்லையாவின் நினைவு. அக்காவின் வீட்டு வளவில் பலவகை மாங்கன்றுகள் வளர்ந்திருக்கும் புளியமரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தவிர அவர் வீட்டு வேலை மரங்களிலும் ஏறிப்பறித்திருக்கிறேன்.

[illegible] மரத்தின் கீழ் சொரிந்து கிடக்கும் [illegible] செகளித்து வைத்துக் கொண்டு [illegible] தெரிந்திருந்தது. [illegible] ஒரு [illegible] இருந்த [illegible] பாலும் நானாக இருக்கும்.

பனிமரத்தின் கிளைகள் பக்கத்து வீட்டு வளவுக்குள் சென்றது [illegible] கள் [illegible] அந்த [illegible] வீட்டுக்கு [illegible] அவர்கள் [illegible] பொறுக்கிக் கொள் [illegible]

[illegible] இருந்தாலும் நானும் சீனா முன்னேறு எழுந்து ஓடிப்போய் பொறுக்கிக் கொள்வோம். மரத்தில் பழுத்த கனிந்த பழங்கள். அப்படியொரு போட்டி.

### வருந்துகின்றோம்



இலக்கிய அபிமானியும், மல்லிகையின் ஆரம்ப காலம் தொட்டே அதன் அபிமானியாக விளங்கிய திரு. செ. குணரத்தினம் அவர்களினது மறைவையிட்டு மல்லிகை ஆழ்ந்த துயரமடைகின்றது.

- ஆசிரியர்



# மன்னார் பிரதேசத்திலிருந்து ஒரு மனம் கவரும் நாவல் எஸ். ஏ. உதயனின்

# லோமியா

–தெளிவத்தை ஜோசப்

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னாப் பிரதேசத்தின் கூலித் தொழிலாளர்களின் துயரம் மிகுந்த வாழ்வியல் அநுபவங்களைப் பதிவதற்கான முயற்சியில் இன்னுமொரு அதிகம் அறியப்படாத வரலாற்றினைடம் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றார் லோமியா நாவலாசிரியர் எஸ். ஏ. உதயன் அவர்கள்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மலையகத்தில் தேயிலைத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவின் தென்புறக் கிராமங்களில் இருந்து மக்கள் பெருவாரியாக இலங்கை வர ஆரம்பித்தனர்.

கடல் தாண்டுவதற்காக இரண்டு மூன்று வழிகள் இருந்தன என்றாலும், பெருவாரி மக்கள் மன்னார் வழியையே பாவித்தனர். பாம்பன்- மன்னார் வழி அரச கப்பல் சேவைக்குத் தலைக்கு ஒரு ரூபாய் கட்டணம்.

தூத்துக்குடி- கொழும்பு- தொண்டி- கொழும்பு வழிகளில் கப்பல் கட்டணம் ஆளுக்கு 5 ரூபாவுக்கு மேல்.

ஆகவே, ஏராளமான இலங்கை வருகை மன்னார் வழிதான். அங்கிருந்து காட்டு வழியாக மாத்தளை, டன்பாபம் வரை 150 மைல்களை நடந்து நடந்து கடந்தார்கள் என்பது வரலாறு.

இதே இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் தென்னிந்தியாவில் காலராவுடன் இந்தியாவில் பிளேக் நோயும் பரவியது. மக்கள் ஆயிரக் கணக்கில் செத்து மடிந்தார்கள்.

மன்னாரில் கூட்டம் கூட்டமாக வந்திறங்கியவர்கள், இந்த ஆட்கொல்லி நோயையும் கொண்டு வந்தனர்.

இலங்கைக்குள் அந்த நோய்களைப் பரவ விடாமல் தடுக்கப் பிரிட்டிஷ் அரசு 'பிளேக் கம்ப்' அமைத்தது. நோய்த் தடுப்புத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

மன்னாரில் வந்திறங்கி மலை நாட்டுக்கு அவர்கள் நடந்துவிட்டாலும், காலரா என்கின்ற கொடிய நோயை மன்னார் பகுதிகளில் பரப்பிவிட்டே சென்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார்ப் பிரதேசத்தின் பேசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ். ஏ. உதயன் அவர்கள் இந்தக் காலரா என்கின்ற சுழிக்காற்று மன்னார் மீனவர்களைக் கூட்டம் கூட்டமாக வாரிக் கொண்டு போன வரலாற்று உண்மைகளிலிருந்து தனது லோமியா நாவலை ஆரம்பிக்கின்றார்.

இவர் ஒரு ஓவியத்துறை ஆசிரியர் என்பதையும், அரங்கியல் துறைக் கலைஞர்- ஆளுமையாளர்- என்பதையும் இந்த நாவல் பல இடங்களில் பதிவு செய்கின்றது.

'ஆடி முடித்த கூத்துப் போல் நினைவுகள் இன்னும் மிஞ்சியிருக்கின்றன. 1926, 1927 காலங்களில் பேசாலை வெற்றி மாங்குடியிருப்புப் பட்டினத்தைச் சீரழித்த காலரா கொள்ளை நோயும் 1931ல் மன்னார் தீவைப் பலமாகத் தாக்கிய சூறாவளியும் இக்கதையின் பின்புலமாகியிருக்கிறது......' என்று அவரே தனதுரையில் குறிக்கின்றார்.

'இன்னும் அந்தப் பெண்டுகளும் பிள்ளைகளும் வைச்ச ஒப்பாரி பச்சை பச்சையாய் மனசுலயிருந்தது.

"ஐயோ! ஈந்தியாக்காரன் வந்து வயித்தால போற வருத்தத்தை இறைச்சுட்டுப் போய்ட்டானே....... பொத்துப் பொத்துன்னு செத்து செத்து விழுகுதுகளே......"

காட்டாஸ்பத்திரியில, காலராத் தடுப்புப் போட்டுத்தான் மலை நாட்டுக்கு அனுப்பியது அரசாங்கம்..... போகிற போக்கில் பாழாய்ப் போன காலரா இங்கிருந்த சாமிகளையும் தின்னுட்டுத்தான் மலையேறுச்சு......' என்று பேசுகிறது நாவல்.

கடற்றொழிலால் செழித்துக் கிடந்த மன்னாரின் கடலோரக் கிராமங்கள் களையிழந்து கிடந்தன. மீன் பிடிக்க ஆளில்லாமல் சம்மாட்டிமார் குந்தவச்சு உட்கார்ந்துட்டாங்க. வலைகளெல்லாம் குவிந்து கிடக்கின்றன.

எத்தனை நாள் தான் இப்படியே இருக்க முடியும்?

தொபியாசுச் சம்மாட்டி கொஞ்சம் விபரமானவர். யோசேப்பு அவருடைய நம்பிக்கைக்குரிய கையாள்- நாவலின் படி வில்லன்கள்.

"டேய் யோசேப்பு இந்தியாவிலிருந்து கொண்டாற ஆக்கள் எங்கேடா போறானுக?"

"சம்மாட்டி மலைநாட்டுக்கு..... தேயிலைத் தோட்டத்துக்கு...."

"ஏண்டா! அவனுக மீன் பிடிக்க வர மாட்டானுகளா.....?"

"இல்ல. அதுக்கு ராமேஸ்வரம் பக்கம் மீன் பிடிக்கிற பயல்களைக் கேட்டுப் பாக்கணும்....."

"கேளு...." என்கின்றார் சம்மாட்டி.

அடுத்த நாளே ஈபோர்ம் எழுதி, கச்சேரியில் அனுமதி பெற்று, பதினைந்து பேருக்கான அனுமதியுடன் யோசேப்பையும் கூட்டிக் கொண்டு யாருக்கும் தெரியாமல் இந்தியாவுக்கு வள்ளம் தள்ளி ஏழாவது நாள் பத்துப் பதினைந்து ஆட்களுடன் வந்து இறங்கினார், தோபியாசு சம்மாட்டி.

இந்தியாவின் ஒப்பிலான் ஊரிலிருந்து வந்த இந்த பதினைந்து பேருக்கும் பொறுப்பாக இருந்தவன் தான் சாகுல் ஹமீது. அனுமதிப் பத்திரப்படி ஆறு மாதம் முடிய அவர்கள் திரும்பிப் போய் விட



வேண்டும். இல்லாவிட்டால், ஈபோர்மில் மறு உத்தரவு பெற வேண்டும்.

"இந்தியாக்காரன் பேசாலையான் மாதிரி இல்லை. சம்மாட்டிக்கு முன் கூழைக் கும்பிடு என்ன..! தலையில் இருக்கும் துண்டு கம்கட்டுக்கு வரும் சுருக்கு என்ன...! தொப்பியாசு சம்மாட்டி இந்தியாக்காரனை வச்சுப் படுத்தின பாடு..."

இந்தியாக்காரன் சொல்லியதைச் செய்து காட்டினான். புதுப்புது வழிமுறைகள் கையாளப்பட்டு மீன் பிடித்துறைத் தொழில் விருத்தியடைந்தது. கையில் காசு புரளத் தொடங்கியது.

தொபியாசு சம்மாட்டியும் கையாள் யோசேப்பும் ராச நடையும் திமிரும் தான்.

ஊருக்குள்ளே எட்டுச் சம்மாட்டிமார். முப்பத்தேழு கரவலை.

மற்ற மற்ற சம்மாட்டிமார்கள் சும்மா இருப்பார்களா? அவரவர் பங்குக்கு அவர்களும் அக்கரையிலிருந்து ஆள் கூட்டி வந்தார்கள்.

ஒரு புதுக் குடியேற்றம் மன்னார்ப் பகுதியில் தொடங்கிய வரலாறு லோமியாவின் மூலக் கருவாக அமைகிறது.

'அதுக்குப் பிறகு பேசாலையில் செல்வம் கொழிக்க ஆரம்பித்தது. சம்மாட்டிமார்களுக்கு மதிப்பும் மரியாதையும் கூடிப் போய்ச்சுது....

அரைக் கை ஜிப்பா, வேஷ்டி இடுப்பில தடித்த பை வைச்ச பட்டி, ஜிப்பாவுல மூணு தங்கப் பொத்தான், தோளில சவுக்கம். காதுல கடுக்கன். எண்ணெய் வச்சு வாரி கழுத்துப் பின்னால் கட்டின குடுமி. கையில் குடை. காலில் வானம் பார்த்து முன் வளைந்த தோல் செருப்பு. வில் வண்டி பூண்டி வார மிடுக்கு.........'

இது எஸ். ஏ. உதயன் என்கின்ற ஆளுமை மிகுந்த ஒரு படைப்பாளனின் முதல் நாவல் என்பதுடன், வரலாற்றுப் பெருமைகள் பல கொண்ட மன்னார் பிரதேசத்து மீனவர் சமூகம் குறித்த முதல் நாவல் என்பதாலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

'லோமியா' ஒரு வித்தியாசமான பெயர்! கடலில் வீசும் காற்றுக்கு அணைந்துவிடாமல் வெளிச்சம் கொடுக்கின்ற விளக்கு என்று இரண்டாம் அத்தியாய அடிக்குறிப்பு விளக்கம் தருகின்றது. (பக்கம் 23)

கடலில் மாத்திரமல்ல, கரையிலும் வெளிச்சத்துக்காகப் பாவிக்கப்படுகிற விளக்கு இது என்பதைக் கீழ்க்காணும் வரிகள் காட்டுகின்றன.

'ஞாயிற்றுக்கிழமை. கிழமைக் காசு வாங்குகிற நாள். மோசே சம்மாட்டிட வீட்டு முத்தம் பெரிதாக இருந்தது.....

முத்தத்தில் நட்டு மரத்தில் கொளுவியிருந்த லோமியா வெளிச்சம் இருட்டை விரட்டிக் கொண்டிருந்தது.....'

கடற்கரையின் நீண்ட தூரத்துக்கு, கண்ணுக்கெட்டிய கானல் வயல். பூமி வெப்பத்தில் அனல் பறக்கும் முன்கோடை. அந்த மனிதர்கள் வெய்யிலில் குளித்துப் பழகியதால் கறுத்துப் போயிருந்தனர். நார்பூட்டி சாய்ந்து அம்பாவுக்கு ஏற்ற மாதிரி தாளத்துக்கு இழுக்க கொஞ்சம் கொஞ்சமாக வலை கரையேறிக் கொண்டிருந்தது. இரண்டு பக்கமும் பத்துப் பத்து ஆட்களாக..... சீவனத்துக்காக மாய்கின்ற பொழப்பு இது......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்தல் நில வாழ்வின் நெளிவு சுழிவு களை, அவர்களின் துன்ப துயரங்களை, சம்மாட்டிமார்களின் போட்டி, பொறாமை களை, கடற்றொழில் வாழ்க்கை முறை களை, பண்பாட்டுக் கூறுகளை நுணுக் கமாகவும், அற்புதமாகவும் அந்தப் பகுதி க்கே உரித்தான பேச்சுத் தமிழ் உரை யாடல்கள் மூலம் வெகு இயல்பாக இந்த நாவல் மூலம் பதிந்து வைக்கின்றார், ஆசிரியர்.

மீனவக் களங்கள் வெகு இயல்பாகப் பரிவு செய்யப்பட்ட நாவல்கள் நம்மிடையே இருக்கின்றன. கைலாசநாதனின், 'கடற் காற்று', செங்கை ஆழியானின் 'வாடைக் காற்று', கே. டானியலின் 'போராளிகள் காத்திருக்கின்றனர்' போன்றவைகள் ஒரு சில.

இவைகள் யாழ்ப்பாணப் பிரதேசக் கடற்கரைப் பகுதிகளைக் களங்களாகக் கொண்டவை.

மன்னார்ப் பிரதேசக் கடற்றொழில் மக்களின் பல்வேறு வாழ்க்கைப் பரிமா ணங்களை வெகு நுணுக்கமாகப் பதிவு செய்யும் இந்த லோமியாவும் மீனவச் சமூ கங்களைச் சார்ந்து எழுதப்பட்ட ஒரு முக்கியமான வரலாற்று நாவலாகத் திகழ்கின்றது.

கத்தோலிக்க மதம் இலங்கைத் தமிழரி டையே காலுன்றியதில் மன்னார் முதலி டம் கொள்ளும் ஒரு பகுதி.

இந்த நாவலிலும் அது கோடிட்டு கோடிட்டு வருகிறது. நாவலின் நாயகன் பேதுரு. கதை முழுக்க சடையன் என்றே வருகின்றான். பேதுரு சடையனானதை நாவலாசிரியர் இப்படி விபரிக்கின்றார்.

பதினாலு வயசுல படிப்பேறவில்லை யென்று சாமிநாதன் மாஸ்டர் பாம்பு வடலி மட்டையால் குண்டிப் பக்கம் இழுத்த இழுப்பில், அவன் ஓடி வந்த இடம் கடற் கரை. தொம்மை நாவிதன் கத்திரி படாமல் வளர்ந்த சடையோடு திரிஞ்ச படியால், பேது ருவை சடையன் என்று கூப்பிடப் போய் அதுவே நிலைத்து விட்டது. சடையனுக்கு இண்டைக்குக் கடலும் கரையும் அத்துப் படி. அவனுடைய கடல் ஞானம் ஆச்சர்ய மானது. இப்போது அவன் பெரிய மண்டாடி.

மண்டாடி என்றால் படகு மீன்பிடித் தொழிலுக்குத் தலைமைப் பொறுப்பாளன் என்கிறது இன்னுமொரு அடிக் குறிப்பு.

ஈழத்துப் படைப்புக்களுக்கு அடிக்குறி ப்பு வேண்டு என்று கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜ. அறுபதுகளில் கூறப் போய், அது ஒரு பெரிய இலக்கிய சர்ச்சையாகக் கிளம் பியதை நாமறிவோம்.

லோமியாவுக்கான உதயனின் அடிக் குறிப்புகள் அவசியமானவைகளாகவே எனக்குப் பட்டது, அலுப்பூட்டிய ஒரு சிலதைத் தவிர.

சடையனின் அம்மா சேமாலை- சகோதரிகள் சவுந்தரி, மேரி. நண்பர்கள் அந்தோனி- ஏசு. ஆரைக்கம் சம்மாட்டிக ளான மோசே, தொப்பியாசு, லம்பேட், கோயில் குத்தகைக்காரர் குருசு- அவர் மனைவி ஜசிந்தா என்று கிறீஸ்தவப் பெயர் களதும், வெற்றிமாதா கோயில், கொடி ஏற்றம், திருவிழா பாஸ்கா என்று கிறீஸ்தவ மத நிகழ்வுகளும் நாவல் முழுக்கவும் விரவி நின்று, மன்னாரின் கத்தோலிக்க மத வருகையின் முதன்மை நிலை வரலாற்றையும் சுட்டி நிற்கின்றது.



பேசாலைக்காரரான பேதுரு என்கின்ற சடையனுக்கும் இந்தியாவிலிருந்து வந் தேறு குடி வாரிசான செல்விக்கும் காதல் பிறக்கிறது.

ஊர்க்காரன் வடக்கத்தியாளைக் காத லிக்கலாமா? கல்யாணம் செய்யலாமா? உன் சாதி என்ன... அந்தச் சிறுக்கியின் சாதி என்ன? என்று ஊர் கொதித்து எழுகிறது.

ஊர்க் கட்டளைக்காரர் 'விட்டுறு சடையா அவளை...... நாம யாரு அவளுக யாரு கல்யாணம் கட்டுனா உப்பும் தண் ணியும் குடுத்துப் புழங்க ஏலுமா சொல்லு...? சாமியப் பகைச்சாலும் சாதியப் பகைக்கக் கூடாது. விட்டுறு......' என்று கோபமாகக் கூறுகின்றார்.

வீட்டில் ஆத்தாக்காரி எதிர்க்கின்றாள். ஊர்ப் பெரியவர்கள் எதிர்க்கின்றார்கள். ஊரே சடையன்- செல்வி கதையை அவலாகப் போட்டு மெல்கிறது. சடை யனோ விட்டுக் கொடுப்பதாக இல்லை.

இந்தியாவிலிருந்து பஞ்சம் பிழைக்க வந்த சீனிப் பரிகாரியிட பிள்ளைகள் தான் செல்வியும் அவள் அண்ணன் ராசனும்.

ஊர்ப் பெரியவர்கள் ராசனைக் கூப்பிட்டு 'உன் தங்கச்சியை ஒழுங்காக இருக்கச் சொல்லு..... இல்லாட்டி ஊரை விட்டே வெரட்டிப்புடுவோம்......' என்று ஏவி விட, அவன் வெகுண்டெழுந்து தங்கையை அடித்துதைத்து 'இனி ஒருக்கால் சடைய னோட பேசுனியென்றால் வெட்டிக் கொன்னு கடல்ல வீசிறுவேன்' என்று கத்துகின் றான்.

எதிர்ப்புக் கூடக் கூடக் காதல் இறுக்க மடைகின்றது.

நாவல் என்றால் காதல் வேண்டும் தானே!

உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர் முல்க்ராஜ் ஆனந்த் தனது 'Untouch-ables' நாவலை- அது தீண்டத்தகாதவர் கள்- ஹரி ஜனர்கள் பற்றிய கதை என்பதால் அதை மகாத்மா காந்தியிடம் வாசித்துக் காட்டி ஆலோசனை கேட்க ஆசைப்பட்டு, சந்திப்புக்காக விண்ணப் பித்து நீண்ட காலம் காத்திருந்து, சந்தித்த போது, காந்தியின் முதற்கேள்வி 'ஏன் என்னைச் சந்திக்க விரும்பினாய்?' என்பது தான்.

'என்னுடைய நாவலொன்றை உங்களி டம் வாசித்துக் காட்டி ஆலோசனை பெற.....' என்று பணிவுடன் கூறவும், காந்தி கூறினாராம் 'ஓ...... நாவல்..... ஒரு ஆண் பையனும் பெண் பிள்ளையும் காதல் செய் வது பற்றி எழுதுகின்றாய்.....' என்று.

அந்த அளவுக்கு காதலால் நாவல்க ளும் நாவல்களால் காதலும் சீரழிந்து கிடந்த காலம் ஒன்றிருந்தது.

எஸ். ஏ. உதயனின் லோமியாவில் வரும் காதல் நாவலை வளர்க்க மட்டுமல்லாமல், வளம் பெறவும் துணை நிற்கின்றது. நாவ லின் உயிர்ப்பாகவும் திகழ்கின்றது.

செல்வியும் சடையனும் சந்தித்துக் கொண்டதை- முதல் சந்திப்பை- நாவல் இப்படி விவரிக்கின்றது.

''அண்ணே சட்டையண்ணே! இராச னுக்கு முள்ளுப் பட்டிட்டுது கிடந்த அவதிப் படுறான். சோதிச்சு மருந்து வச்சுக் கட்ட கூட்டி வரச் சொல்லி விட்டுது.''

''யாரு....?''

''செல்வியக்கா''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி போ! ந்தா வாறன்''

கடற்கரையிலிருந்து ஓட்டமும் நடையுமாக அவன் ஊர் வந்து சேர, பதினைந்து இருபது நிமிடம் ஆகிவிட்டது.

படலையடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த செல்வி ''வாங்க சரியாக் கிடந்து அவதிப்படுது பாருங்க....'' என்றாள்.

சடையன் பார்த்தான். கால் குதிப் பக்கம் மேலேறிக் கறுப்புத் தோலில் முள்ளுப் பட்டிருந்தது. செந்திருக்கை தான் ஆங்காரமா அடிச்சிருக்கு. கடலில் இறங்கித் தொழில் செய்யுறவனுக்குத் திருக்கை முள் அடிக்கிறது பயங்கரம் தான். களத்தில கிடக்கிற சேத்துல கால் வைக்கும் போதெல்லாம் மனசுல பயம் வந்து ஒட்டிக் கொள்ளும். வேறு ஆபத்துக்களிலிருந்து தப்புறதுக்கு உபாயம் சொல்லலாம். ஆனாத் திருக்கை அடிக்கணுமின்னு இருந்தா என்ன செய்யுறது.....? பயங்கரம் தான்.

''வலி எடுத்த பொம்பளைக்கு பிரசவம் பார்க்குற மாதிரி தான் முள்ளுப்பட்டவனச் சோதித்துப் பார்வை பார்க்கிறது....''

இராசன் அரைக்கண் போட்டு முனகிக் கிட்டிருக்கான்.....

இந்த முள்ளெடுத்து மருந்து வைக்கும் காட்சியை வெகு அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார், உதயன்.

முள் பட்டவனின் துடிப்பு; ஆரைக்கம், ஏசு, அந்தோனி ஆகிய நண்பர்கள் அவனை அமுத்திப் பிடித்துக் கொள்ள சடையனின் மருத்துவ நுட்பம், ஒரு பதட்டத்துடன் பார்த்துக் கொண்டிருந்த செல்வி அவனுடைய மருத்துவ செயற்பாட்டு மகத்துவத்தால் ஆட் கொள்ளப் படுகின்றாள்.

நம்மையும் தான் ஆட் கொண்டு விடுகின்றார், நாவலாசிரியர் உதயன்.

இங்கே தான் அந்தக் காதல்- ஊருலகம் ஏற்காத காதல் உதயமாகிறது.

''மிக்கேல் சம்மனசு மந்திரத்தை ஓதி முள்ளு வாயில மருந்தை வச்சுக் கட்டி, முட்டையடிச்சுக் கோப்பி குடு, செல்வி. மயக்கம் போட்டுக் கிடக்கிறான்.'' என்றபடி அவன் எழும்பும் வரை பார்த்துக் கொண்டே இருந்த செல்வி, கிணற்றடிக்குப் போனவனை ''நில்லுங்க, தண்ணி கொண்டு வாறன்'' என்று நிறுத்தி வாளியில் தண்ணீர், டவல், சவர்க்காரம் கொண்டு வந்தாள். சடையன் கையை நீட்ட அவள் தண்ணீர் ஊற்றினாள்.

ஊற்றிய கைக்கும் நீட்டிய கைக்கும் எத்தனை வித்தியாசம். அந்த முரட்டுக் கைக்கிட்ட முல்லைப் பூ மாதிரி செல்வியோட கை. மஞ்சள் பூசின தங்கம் மாதிரி. குனிஞ்சு ஊத்தும் போது தலை முடி கத்தையாக முன்னுக்கு விழுந்து அவனுக்கு அழகு காட்டியது. அவள் ஊற்றிக் கொண்டே இருந்தாள். அவன் தேய்த்துக் கொண்டே இருந்தான். செம்புல தண்ணி இல்லாமல் போனது தெரியாமல் இருவரும் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

மின்னல் குடி வந்த மாதிரி மனசுக்குள் ஏதோ சுளீர் சுளீர் என்று இழுத்தது.

'வாறன்' என்று கிளம்பியவனை 'தேத்தண்ணி குடிச்சிட்டுப் போங்க' என்றவள், அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். அந்தக் கண்ணுக்குள் காதல் இருந்தது....

எதை, எப்படி, எந்த இடத்தில் சொல்ல வேண்டும் என்கின்ற எழுத்து ரகஸ்யம் உதயனுக்கு இலாவகமாகவே வருகின்றது.



தொப்பியாசு சம்மாட்டியின் மண்டாடி சரீபு. இந்தியாக்காரன். இப்போது கள்ளத் தோணி. ஈபோம் நடைமுறை இல்லாமல் போன பிறகு கூலிக்காக வந்தவர்கள், நிரந்தரமாகத் தங்கிவிட்டார்கள்.

சரீபு நல்லவன். ஆனால், தொப்பியாசின் கையாள் யோசேப்பு லேசுப்பட்டவன் இல்லை. அவன் சங்கு முள் மாதிரி.

நாடற்ற, கூப்பன் இல்லாத, சம்மாட்டி மார் தயவில் வாழும் உஞ்ச விருத்தி, சோனகர் என்ற அடையாளத்தை இழந்து நிற்கும் சரீபை யோசேப்புக் கேலி செய்கின்றான்.

''டேய் சரீபு... சோனவன் என்டு சொல்றா தொப்பியுமில்ல தொழுகையுமில்ல......''

''சும்மாருங்க தம்பி பேருதான் சரீபு...... வெற்றிமாதா தான் நமக்கு எல்லாம்.....''

அவன் இப்படிச் சொல்லும் போது பாவமாயிருக்கும். இலங்கைச் சோனகரும் அங்கீகரிக்காமல் தகப்பன் வழி இந்தியாவும் ஏற்றுக் கொள்ளாமல் தொங்கி நிற்கிற வேதனை அனுபவிப்பவனுக்குத் தான் தெரியும், என்றெழுதுகின்றார் உதயன்.

சமுதாய அவலங்கள், துயரங்களும் கண்டு குமுறும்; வேதனைப்படும் மனம் கொண்டவராகத் திகழ்கின்றார் உதயன். இவருடைய திறமைகள், ஆற்றல்கள், செயற்பாடுகள் பற்றித் திறந்த மனதுடன் குறிப்பிடுகின்றார் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். டேவிட் அவர்கள். இந்த நூலுக்கான தனது அணிந்துரையில்-

'ஒரு பயிற்றப்பட்ட ஓவியத்துறை ஆசிரியரான உதயன் தான் கல்வி கற்ற பேசாலை மத்திய மகா வித்தியாலயத்திலேயே ஒரு ஓவியத்துறை ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். நாடக அரங்கியல் துறையிலேயே இவரது நாட்டமும் நாமமும் பிரகாசமாக வெளித் தெரிகின்றது. நவீன நாடகம், நாட்டுக் கூத்து, தெருக்கூத்து, சிறுவர் நாடகம், வானொலி நாடகம் என்று நிறையவே படைத்துள்ளவர்' என்று குறிக்கிறது அணிந்துரை.

இந்த நாடகத்துறை அநுபவமும் ஆற்றலும் லோமியாவுக்குள்ளும் இழையோடுகிறது.

'அம்பா' என்று அடிக்குறிப்புக் காட்டுகின்ற மீனவர்களின் உற்சாகப் பாட்டுக் களும், பாவைக் கூத்துப் பற்றிய செய்திகளும், ஏசுநாதரின் மரணத்தைப் பக்தியோடு ஆடிக்காட்டுகிற பாஸ்கா நாடகச் சடங்குகளும் பொருத்தமான இடங்களில் நாவல் மூலம் வெளிக் கொண்டு வரப்படுகின்றன.

பேசாலைக்கு மார்கழி என்றால் மூன்று திருவிழா. கோயில் திருவிழா- நத்தார்- புது வருசம். இதுக்குள்ள வசாப்பு படிச்சா நாலாவது திருவிழா! பெருந் திருவிழா அதுதான்.

ஊர் நல்லதுக்காக மூன்று ராசாக்களுக்குப் பொங்கலிட்டுச் செய்யும் நேர்த்திக் கடன்.

இண்டைக்கு வசாப்புக் கூட்டம்.

அண்ணாவியார் குருசுப் புலவர் ஏடு கொண்டு வந்திருந்தாரு. கட்டளைக்காரர்; மத்தளக்காரர்; மூப்பர்; மற்ற வெள்ளை வேட்டிக்காரவுக எல்லாரும் வந்திருந்தார்கள். சுவாமியும் இருந்தார்.

கட்டளைக் காரர் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அண்ணாவியார் ஏட விழ்த்துக் காப்பு வெண்பா படிச்சாரு. இனி வசாப்பில் நடிக்குறவங்களுக்கு வரவு குடுக்கணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையா நடிக்குறவங்க எல்லாரும் வந்திருந்தாங்கள். மொத்தமாக அம்பத்து ஆறு பேர்.

அண்ணாவியார் வாசிக்கின்றார். 'எப்போது சடையன் இருக்கானா?' அண்ணாவியார் கூப்பிட முன்னால் போய் அவர் காலை கும்பிட்டு உரை எடுக்கணும்.

சடையன் போனான்.

இந்தியாக்காரிய கல்யாணம் பாக்குற சடையனுக்கு உரம் குடுக்காதீங்க..... குடுத்தாப் பிரச்சினை வரும்...' சொல்லிக் கொடுத்தது போல் நாலைந்து விதம் கம்பும் குரல்கள். கட்டளைக்காரரும் கூட்டத்தின் அமளியை அடக்கி, நியாயம் கூறுவது போல் சொல்லிக்கு எதிராகக் கதைக்கின்றார்.

சடையனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மெதுவாகக் கூட்டத்தை விட்டு நடந்து வெளியேறினான்.

"சடையா நில்லு!....." ஓங்கிக் கேட்டது ஆரைக்கத்தின் குரல். "யாருடா சடையனைப் பாத்துக் கேள்வி கேட்டது....? நீங்கள்ளாம் பெரிய மனுசங்களாடா......? வாங்க கோவில் திருவிழாக் கூட்டத்துல ஒரு குமரப் பிள்ளையைப் பத்திக் கதைக்கலாமா.....?" ஆரைக்கத்தின் சத்தம் கூட்டத்தை அடக்கி வைத்தது.

"இந்தியாக்காரப் பொம்பளயக் கல்யாணம் வச்ச விபச்சாரம் செய்யுற சம்மாட்டிமார் இங்க இல்லியா.....? அவங்களுக்கு மானை மரியாதை! காதலித்து முறைப்படிக் கல்யாணம் முடிக்க ஆசைப்படுறவனுக்குச் செருப்படியா......? இது என்னடா உங்க ஞாயம்.....?" சனம் வாயடைத்து நிற்கிறது. கூட்டம் குழம்புகிறது. சில நாடகங்களை, நாவல் வளர்ச்சியில் நல்ல ஏற்பட்ட மன்னார் மண்ணின் பொருத்தமான இடங்களில் நாடகக் கலையின் மேன்மைகளைப் பொருத்தி வைக்கும் பாங்கும், விதந்து கூறத்தக்கது.

வாசித்து முடிக்கும் மனதுக்குள் கிளர்ந்தெழும் பல்விதமான உணர்வலைகள் அனுபவங்களைத் தேடி அடங்க அலைகிறது! மறுபடியும் வாசிக்கக் கோருகின்றது. நானாவிதமான புதுப்புது அர்த்தங்கள் கற்பித்து நிற்கின்றது. அடையாளப் பதிவுகள் செய்கின்றது. பக்கம் புரட்டிப் பக்கம் புரட்டி, இடம் தேடி வாசித்து ரசிக்கச் செய்கின்றது. சிந்திக்கத் தூண்டுகின்றது.

'வாசித்தோம் மூடி வைத்தோம்' என்றில்லாமல் அதுபற்றி நினைக்கவும், அசைக் கழிக்கவும், பேசவும் எழுதவும் வைக்கின்றது இந்நூல். அதுவே ஒரு படைப்பின் வெற்றிதானே!

'வாசித்துப் பாருங்கள்' என்று லோமியானை என்னிடம் கையளித்துச் சென்ற எனது நண்பர் ஓ. கே. குணநாதனுக்கு எனது நன்றிகள்.

மன்னார் தீவின் நீண்ட கடற்கரையோரங்களில் கூடி கட்டி வாழும் ஒரு தொன்மைக் கலாசாரத்தினை, இந்தியக் கரையோரப் பட்டினங்களில் இருந்து மீன் பிடிப்பதற்காக, சிலாபத்தை சம்மாட்டிமார்களால் கூலித் தொழிலாளர்களாகக் கூட்டி வரப்பட்டு இன்றும் அடையாளம் தொலைத்தவர்களாக வாழ்ந்து வரும் ஒரு மக்கள் கூட்டத்தின் வரலாற்றினை அடையாளப் பதிவு செய்துள்ள லோமியா படைப்பாளர் உதயன் என்கின்ற எஸ். ஆரோக்கியநாதர் ஜோஜுக்கு எனது பாராட்டுக்கள்.

அவரது எழுத்துப் பணிகள் மேலும் மேலும் விரிவடைய எனது வாழ்த்துக்கள்.



# நூல் நுகர்வு

–தருமபீலன்

## மார்டின் விக்கிரமசிங்க – க. முரளிதரன்




இலங்கை அலுவல்கள் திணைக்களத்தின் பிரசித்தப் படைப்பாளர் அறிமுக நூல் வரிசையில், நவீன சிங்கள இலக்கிய முன்னோடி மார்டின் விக்கிரமசிங்க பற்றிய தமிழ் நூல் 136 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இதனைப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் இலக்கியவாதியுமான க. முரளிதரன் தொகுத்துள்ளார்.

அவருடைய வாழ்க்கை வரலாறு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளதுடன், அவரது இலக்கியக் காலம் மூன்று கட்டங்களாக வகுக்கப்பட்டு நிகழ்வுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

'சிறுகதை வளம்' என்ற பகுதியில் அடிமைகள், கமறாளவின் கதை, விதைத்த விடு, வளர்ப்புப் பிள்ளை ஆகிய சிறுகதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அல்லாறே 'நாவல் திறம்' என்ற பகுதியில் கிராமப் பிறழ்வு, பற்றற்ற வாழ்க்கை, மடோல் தீவு போன்ற நாவல்களின் சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இம்மூன்று நாவல்களும் ஏற்கனவே தமிழில் வந்துள்ளன. தமிழில் வெளிவராத அவரது வேறு நாவல்களிலிருந்து சில பகுதிகளைச் சேர்த்திருந்தால் இன்னும் பெருமதிப்படைந்திருக்கும்.

இந்நூலின் இன்னொரு சிறப்பம்சம் அவரது சகல நூல்களையும் வகைப்படுத்தி ஒரு பாடியல் தந்திருப்பது தான்.

ஒரு படைப்பாளியாக மட்டுமல்ல, ஒரு அறிஞராகவும் செயற்பட்டுள்ள மார்டின் விக்கிரமசிங்க பற்றி, ஒரே பார்வையில் நிறைவான விடயங்களை உள்ளடக்கிய இம்முயற்சி வரவேற்கத்தக்கதே.



## விட்டு விடுதலை காண் – மன்னார் அமுதன்

இளைய படைப்பாளரான மன்னார் அமுதனின் முதல் கவிதைத் தொகுதியான 'விட்டு விடுதலை காண்' முட்கம்பி வாழ்க்கையின் பிந்திய முகங்களை அட்டைப் படமாகக் கொண்டது. இது எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் இருபத்தோராம் வெளியீடு.

இந்த இளைஞனின் நல்ல முயற்சியை அருட்திரு தமிழ்நேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜகனார், கலைவாதி கலீல், ஓ.கே. குணநாதன் போன்றோர் வாழ்த்தி வரவேற்றுள்ளார்கள்.

குடும்பப் பாசம், தோழமை, இயற்கை, காதல், யுத்தம், இடப் பெயர்வு, சமூகப் பிரச்சினைகள் என்று எல்லாப் பக்கமும் தனது புலமைக் கண்ணோட்டத்தைச் செலுத்தியுள்ளார்.


உணர்ச்சியின் உதிரப் பெருக்கான கவிதை, எந்நாளும் அழியாத மகா கவிதையாக நிலைக்க வேண்டுமாயின் அதற்கு எவ்வளவு நிதானம் தேவை?

இவர்களின் காலையின்/ வெறிபோதான்/ என் கிராமத்தில்/ ஜனநாயகம் நடைபோடுகிறது/ என்று மிக நிதானமாகப் பாடும் கவிஞர், இன்னொரு சந்தர்ப்பத்தில், மறுக்கப்பட்ட உரிமைகளை/ பறித்தெடுப்போம்/ சுயத்தோடு வாழ/ உரிமைதர மறுப்போரை/ இம்மண்ணுக்கே பலிகொடுப்போம்/ என்று உணர்ச்சி வசப்படுவது கவிஞரது வளர்ச்சிக்கு நல்லதா என்று கேட்கத் தோன்றுகிறது.

கவிஞரின் சின்னச் சின்ன ஆசைகள் வித்தியாசமாக இருந்தாலும், வாசகரை அது சிரிப்புப் பாடலை நோக்கியே இட்டுச் செல்லுமென்பதைச் சற்று சிந்திப்பது நல்லது.

குளத்தடியில் நீரெடுத்து/ காலையெல்லாம் மலையேறி/ நிலத்தடியில் குழாய் விட்டு/ நீர் தேடி அலைகின்றோம்/...... என்றும்..... எழும்போது/ அரவணைத்த ஆயிரம் கைகள்/ எங்கு சென்றன?/ நீ விழும்போது..... என்றும், சமூகப் பெறுமானம் மிக்க விடயங்களை அழகாகவும் எளிமையாகவும் சொல்லும் கலை கைவரப் பெற்றுள்ள அமுதனிடமிருந்து எதிர்காலத்தில் இதைவிட உயர்ந்த படைப்புக்கள் நிச்சயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

## தொலையும் பொக்கிஷங்கள்– வதிரி. சி. இராஜேஸ்கண்ணன்



மீரா பதிப்பகத்தின் வெளியீடாக 'தொலையும் பொக்கிஷங்கள்' என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. இதில் பத்துக் கதைகள் இடம் பெற்றுள்ளன. ஏற்கனவே 'முதுசொமாக' என்ற சிறுகதைத் தொகுதியை இராஜேஸ்கண்ணன் வெளிக் கொணர்ந்துள்ளார். பல சிறுகதைப் போட்டிகளிலே பரிசு பெற்று, அடிக்கடி தனது படைப்பாற்றலை உறுதிப்படுத்திக் கொள்பவர்.

பல நல்ல படைப்பாளிகளைத் தந்த வடமராட்சி மண்ணின் புதிய படைப்பாளி இவர். எல்லாக் கதைகளுமே அந்த மண்ணில் வேர்விட்டு, மண் மணத்தை நுகரச் செய்கின்றன.

யுத்தச் சூழலால் யதார்த்த வாழ்வு சிதுலைதல், புலம் பெயர்வு அவலங்கள், பாதை அடைப்பின் அவதிகள், சமூக ஏற்றத் தாழ்வின் கொடுமை, தமிழ்– முஸ்லிம் உறவின் அடையாளங்கள், மனித உறவின் மேம்பாடு.... இப்படியான கருப்பொருட்களைச் சுற்றியே கதைகள் சுழல்கின்றன. உளவியல் பாங்கான சில கதைகளும் இடம்பெறத் தவறவில்லை.

'தொலையும் பொக்கிஷங்கள்' எனும் மகுடக்கதை வெறும் 'பனங்கொட்டைச் சமாச்சாரமல்ல'. யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றான பனைதான். முப்பதாண்டு கால பனையிழப்பை ஈடுசெய்ய மீள நடுகை செய்யும் பொறுப்பு ஒவ்வொரு குடும்பத்திற்கும் உண்டென்ற செய்தி அக்கதையினூடாக வெளிப்படுகிறது. மிகவும் நுட்பமாகக் கதாசிரியர் அதனைக் கையாண்டுள்ளார்.

இப்படி ஒவ்வொரு கதையுமே மண்ணில் காலூன்றி மக்களில் ஒருவராய் நின்று அவதானித்து சிருஷ்டிக்கப்பட்டவையே. அநாவசியமாக எதுவும் வந்து புகுந்து விடாது மிகவும் அவதானமாகக் கதை நகர்த்திச் செல்லப்படும் பாங்கு தெரிகிறது.

அருமையானதொரு அணிந்துரை வழங்கியுள்ள, ஞானம் ஆசிரியர் குறிப்பிடுவது போல, இராஜேஸ்கண்ணனுக்கு சிறுகதைத் துறையில் மேலும் பல வெற்றிகள் காத்திருக்கின்றன.

## திறந்த கதவு– கமல் பெரேரா



கொடகே வெளியீட்டு நிறுவனத்தின் அண்மைக் காலத் தமிழ் வெளியீடாக 'திறந்த கதவு' வெளிவந்துள்ளது. எண்பதுகளில் முகிழ்த்த குறிப்பிடத்தக்க எழுத்தாளரான கமல் பெரேராவின் சிறுகதைத் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஏழு சிறுகதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. இக்கதைகளைத் திக்குவல்லை கமால் தமிழாக்கம் செய்துள்ளார்.

**சந்தாதாரர்களுக்கான ஒரு முக்கிய அறிவிப்பு**

புத்தாண்டு பிறக்கப் போகின்றது. சந்தாதாரர்களில் பலரது ஆண்டுச் சந்தாக்கள் இந்த 2009 டிசம்பருடன் முடிவடைகின்றன. இந்தத் தகவலை உங்களுக்கு முன் கூட்டியே அறிவிக்கின்றோம். தயவு செய்து புத்தாண்டுக்கான ஆண்டுச் சந்தாவைச் செலுத்தி, தங்கள் தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ளும் வண்ணம் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

–ஆசிரியர்

தெற்கில் இடம் பெற்ற இளைஞர் கிளர்ச்சி நடவடிக்கைகளையும் இராணுவச் செயற்பாடுகளையும் சித்திரிக்கும் கதைகள் இடம் பெற்றுள்ளது போலவே, எண்பத்திமூன்று கலவரத்தைப் பின்னணியாகக் கொண்ட கதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. யுத்தம், இடப் பெயர்வு போன்ற விடயங்களும் அலசப்படுகின்றன. பொதுவாக வன்முறைகளுக்கு எதிராகவும் மனித உறவுகளுக்கும் ஐக்கியத்திற்கும் ஆதரவான குரல் வலுவாகத் தெரிகிறது.

பிரச்சினைகள் நடந்து கொண்டிருக்கும் காலகட்டங்களிலேயே சிங்கள எழுத்தாளர்கள் எவ்வாறெல்லாம் சிந்தித்திருக்கின்றார்கள், எழுதியிருக்கிறார்கள் என்பதை இப்படைப்புக் கூடாகப் பார்க்கும் போது, உண்மையிலேயே பிரமித்துத் தான் போகிறோம்.

இன்றைய சூழலில் இத்தகைய ஆக்க இலக்கியங்கள் தெரிவு செய்யப்பட்டு பரஸ்பரம் மொழி பெயர்க்கப்படுவது மிக மிக அவசியம். இதற்கொரு நல்ல ஆரம்பமாக 'திறந்த கதவு' அமைகிறது. அது என்றுமே திறந்த கதவாகவே இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைத்தோட்டம்– இலங்கையில் அதிக (தமிழ்) பத்திரிகைகள் மலர்ந்த இடம்

—எஸ். ஐ. நாகூர்கனி

**கொ**ழும்பு மாநகரின் இதய இடமாக- நீதிமன்றத்தின் நேர்வாசலாக- வளமார் தமிழால் வழங்கப்படும் ஒரு பகுதியே வாழைத்தோட்டம் ஆகும். இங்கே தமிழ்ப் பேசும் முஸ்லிம் ஏறத்தாழ ஐநூறு வருடங்களுக்கு மேலாக- பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். தமிழ் பேசும் இந்து- கிறிஸ்தவ குடும்பங்கள் விரல் விட்டு எண்ணத்தகும் விதத்திலே வாழ்கின்றனர். இரண்டாவது சமூகத்தினராக சிங்களச் சகோதரர்களும் வாழ்ந்து வருகின்றனர். கடந்த ஓரிரு தசாப்த காலங்களாக மேற் கொள்ளப்பட்டு வந்த நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக, குடியகல்வும்- குடிவரவும் நிகழ்ந்ததும் உண்டு. எனினும், பெரும்பான்மையாக முஸ்லிம்களே இப்போதும் திகழ்கின்றனர்.

வாழைத்தோட்டத்து 'பிரைஸ் பார்க்' பிட்டனியில் (மைதானத்தில்) இந்தியத் தலைவர்கள் பலர் வருகை தந்து கூட்டங்கள் போட்டுப் பேசியது, திராவிட முன்னேற்றக் கழகங்களின் தந்தையான 'வெண்தாடி வேந்தர்' ஈ. வே. ராமசாமி பெரியார் வருகை தந்தது- தமிழக இலக்கிய ஜாம்பவான்கள், கலைஞர்கள் எனப் பலர் வந்து போனது, சாமானியரான ஆர். பிரேமதாஸ நாட்டின் ஜனாதிபதியாக உருவாகி அரசோச்சியது எனப் பல்வேறு நிகழ்வுகள், வாழைத்தோட்ட மண்ணுக்கு வரலாற்று வாடையை வீசச் செய்து கொண்டேயிருக்கின்றன.

இவை அனைத்திற்கும் மேலாக, 'வண்ணத் தமிழின் சின்னங்கள் சிதறிக் கிடக்கும் சிங்காரப் பூமி' எனச் சிலாகித்துக் கூறுமளவிற்கு, தமிழ் அரங்கேறிய திண்ணையாக- தமிழ் வளர்த்த பண்ணையாக வாழைத்தோட்டம் திகழ்ந்திருக்கிறது; வண்தமிழ் வாசம் கமழ்ந்திருக்கிறது. 1935ல் இலங்கையின் முதல் தமிழ்ச் சிறுகதைத் தொகுதியாக ஐதுருஸ் லெப்பை என்பார் எழுதிய 'ஐதர்ஷா கதைகள்' வாழைத்தோட்ட மண்ணிலிருந்து வெளியானது முதல், முத்தமிழின் முன்னோடி நிகழ்வுகள் பல, இலங்கையின் தமிழிலக்கிய வரலாற்றுக்குச் சுகமான சுமைகளைத் தந்துள்ளன.

இலங்கையில் தமிழ் வளர்த்த இன்னொரு மதுரையாக- உச்சி மீது வைத்து மெச்சத்தகும் இந்த வாழை மண்ணுக்கு, இன்னொரு சீர்வரிசையும் உண்டு. அதுதான்- இலங்கையில் அதிக பத்திரிகைகளை- அதுவும் தமிழ்ப் பத்திரிகைகளைப் பிரசவித்த 'தாய்மை' தகுதியும் உண்டு என்பது தான். இதற்குத் தேசிய பழஞ் சுவடி கூடத் திணைக்களம் சான்று பகரும் 'சங்கப் பலகை'யாக நம்மிடையே இருப்பதை சொல்லவும் வேண்டுமோ?



வண்ணத் தமிழின் சின்னங்கள் அதுவும், பத்திரிகைகள் பற்றிய தகவல்கள் சிதறிக் கிடக்கும் இம்மண்ணின் மைந்தர்களில் ஒருவனாகிய எனக்கு, என்றன் ஆறாவது விரலாகிய பேனா முனையால் கிண்டிக் கிளறவும், கண்டு களித்ததை விண்டுரைக்கும் உரிமை உண்டல்லவா? தகவல் முத்துக்களைத் தரிசிக்க, என் வார்த்தை ஊர்வலத்தோடு வலம் வரும்படி வாஞ்சையோடு வரவேற்கின்றேன்.

இலக்கிய இதயங்களே நம் நாட்டில் தேமதுரத் தமிழில் 'உதய தாரகை', 'தேச பக்தன்', 'இஸ்லாமிய மித்திரன்' என்றெல்லாம் பத்திரிகைகள் ஆரம்ப காலத்தில் வெளி வந்தேயிருக்கின்றன என்ற கூற்றினை மறுப்பதற்கில்லை. நம் நாட்டின் இன்றைய ஊடகத்துறை உயர்ச்சிக்கு செய்திப் பத்திரிகைகளின் சேவையே அடிப்படை எனலாம். ஒரு செய்திப் பத்திரிகைக்குரிய இலக்கணத்துடன் முதலில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை அதுவும், தினசரி இதழாக மலர்ந்த பத்திரிகை வாழைத்தோட்டத்திலிருந்து 1928ல் வெளிவந்த 'தினத் தபால்' என்பதேயாகும். மர்ஹூம் மீரான் மொஹிதீன் என்ற மூத்த பேனா மன்னர் இதன் ஆசிரியராகவும், பதிப்பாளராகவும் பணியாற்றிச் சிறந்தார். கொழும்பில் ஒரு சதமாகவும், வெளியூர்களில் இரண்டு சதமாகவும் இரண்டு வருடங்கள் தொடர்ந்து வெளி வந்தமை நம் கவனிப்புக்குரியது. ஆசிரியரின் பேரனாகிய அல்ஹாஜ் ஏ. இக்பால் (159/15 கண்டி வீதி- கம்பளை) என்பாரிடம் 'தினத் தபால்' பத்திரிகைக் கட்டு இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. விரும்பியவர்கள் நேரில் சென்று பார்வையிடலாம்.

ஏரிக்கரை வீட்டிலிருந்து வெளி வந்து கொண்டிருக்கும் 'தினகரன்' நாளிதழில் ஒப்புநோக்காளராகவும், அவ்வப்போது எழுதும் எழுத்தாளராகவும் திகழ்ந்த வாழை வாரிசான மர்ஹூம் கே. எம். எம். சாலிஹ் என்பவர், 'இஸ்லாமிய தாரகை' என்ற வார இதழை 1946ல் ஆரம்பித்து, அதன் ஆசிரியராகப் பணியாற்றி நடத்தி வந்தார். இந்திய முஸ்லிம்கள் தங்களுக்கெனத் தனிநாடு வேண்டுமென உணர்ந்து 'பாகிஸ்தான்' கருக்கட்டிய காலம் முதல், அதற்கு ஆதரவான ஆக்கங்களைப் பிரசுரிக்கும் பிரசார ஏடாக 'இஸ்லாமிய தாரகை' வெளி வரவே, இந்திய அரசினால் 'இஸ்லாமிய தாரகை' தடை செய்யப்பட்டது. இந்திய அரசினால் தடை செய்யப்பட்ட முதல்- ஒரே இலங்கைப் பத்திரிகை இந்த 'இஸ்லாமிய தாரகை'யேயாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்திய- குறிப்பாகத் தமிழக முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து 'இஸ்லாமிய தாரகை' வெளிவந்து கொண்டிருந்த போதே, சரிவான பார்வை சமூகத்தின் மீது விழுந்து விடக் கூடாது என்ற சமூக உணர்வில், மர்ஹூம் எம். எம். அப்துல் காதர் என்பவர், 'முஸ்லிம் லங்கா' எனும் ஏட்டை 1947ல் வாழைத்தோட்டத்திலிருந்து வெளியிட்டார். இன்று நம் 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா செய்வது போல, இந்த ஆசிரியர் அப்துல் காதர் 'முஸ்லிம் லங்கா' இதழை ஒரு பையில் நிறைத்துக் கொண்டு போகுமிடமெல்லாம் விற்பனை செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தோழன்' என்ற பெயரில் 1948-49 காலப் பிரிவில் இன்னொரு பத்திரிகை வாழை மண்ணிலிருந்து மலர்ந்து மணம் வீசியது. ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுக ரான கொழும்பு மாநகர சபைப் புதுக்கடை தெற்குத் தொகுதியின் முன்னாள் உறுப்பி னரான மர்ஹூம் எஸ். எம். எம். முஹிதீன் 'தோழன்' ஏட்டுக்குத் தோள் கொடுக்கும் ஆசிரியராகப் பணியாற்றினார். முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் ஆரம்ப கால அரசியல் மேடைப் பேச்சு தமிழ் மொழி பெயர்ப்பாளராக இந்தத் 'தோழன்' ஆசிரியர் முஹிதீன் மேடை தோறும் முழங் கினார் என்பது நோக்கற்பாலது.

வாழைத்தோட்டத்தில் அடுத்து முழங்கி யது 'இனமுழக்கம்' என்ற பத்திரிகையா கும். இதற்கு மர்ஹூம் எஸ்.எச். ஃபக்ருதீன் ஆசிரியராகவும், மர்ஹூம்களான கே. எம். எம். ஏ. காதர், எம். சம்சுதீன் ஆகிய இருவ ரும் துணையாசிரியர்களாகவும் பங்களிப் புச் செய்ய, 1954 ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த 'இன முழக்கம்' எழுச்சிக் கட்டுரைகளை ஏந்தி வந்தமை மேலதிக தகவலாகும்.

இந்திய அரசினால் தடை செய்யப்பட்டி ருந்த 'இஸ்லாமிய தாரகை' பெற்றிருந்த செல்வாக்கையும், மதிப்பையும் மனதில் உன்னி, அதன் ஆசிரியர் மர்ஹூம் கே. எம். எம். சாலிஹ் அவர்களின் அனுமதியுட னும், ஆசியுடனும் 'இஸ்லாமிய' என்ற சொல்லை நீக்கிவிட்டு, 'தாரகை' என்ற பெயரில் 1960ல் மர்ஹூம் எச். எம். பி. முஹிதீன் ஒரு வாராந்திரியை ஆரம்பித்து, பரபரப்பான தலைப்புக்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தி வந்தார்.

படிக்கின்ற காலத்திலேயே கம்யூனிஷ சித்தாந்தத்தில் ஊறிப் போன இந்த எச். எம்.பி என முற்போக்கு வட்டாரத்தினரால் அழைக்கப்பட்டு வந்த இவர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான 'தேசாபி மானி', அடுத்து சீனச் சார்பு ஏடான 'தொழி லாளி' பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் முஸ்லிம் பிரிவாக, முன்னாள் கல்வி யமைச்சர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் தலைமையின் கீழ் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட 'இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி'யின் கொள்கைப் பரப்பு ஏடுக ளான 'உம்மத்', 'நாளை நமதே' ஆகிய வற்றுக்கும் ஆசிரியராகப் பணியாற்றிச் சிறந்தார் என்பது கவனிப்புக்குரியது.

திராவிட இயக்கத்தின் சிந்தனைகளில் மனம் கவரப்பட்ட தங்கையா எனும் இயற்பெயர் கொண்ட மறைந்த டி. கலை தாசன் என்ற வாழை வாரிசு 'தேசபக்தன்' எனும் பெயரில் ஒரு பத்திரிகையை வாழைத் தோட்ட முஹாந்திரம் ரோட்டிலி ருந்து 1967ல் வெளியிட்டார் என்பது இன் னொரு தகவலாகும். தமிழ் நாடகத்துறை யிலும் அக்காலப் பிரிவில் பிரபல்யம் பெற் றுத் திகழ்ந்த கலைஞர் டி. கலைதாசன், பேரறிஞர் அண்ணாவின் 'இன்பக் கனவு', 'பரப்பிரம்மம்' போன்ற நாடகங்களைக் கொழும்பில் அரங்கேற்றிப் புகழ் குவித்தார். நாளடைவில் கலைதாசன் தமிழக சினி உலகில் அடியெடுத்து வைத்து, கம்யூனிஷ சிந்தனைகளைத் தழுவி எடுக்கப்பட்ட 'பாதை தெரியுது பார்' படத்தில் ஒளிப்பதி வாளராகப் பணியாற்றினார் என்பது குறித்து வைக்க வேண்டிய தகவலாகும்.

வாழைத்தோட்ட மண்ணிலிருந்து வாழை வாரிசுகளால் வெளியிடப்பட்ட பத்திரிகைகளின் விபரங்களை இதுவரை



அறிந்தோம். இனி வாழை மண்ணில் வெளியான பிற பத்திரிகைகளின் தகவல்க ளைத் தொடர்ந்து அறிமுகஞ் செய்வோம். இதுவும் அதிக பத்திரிகைகளை வெளி யிட்ட மண் வாழைத்தோட்டம் என்ற கருத்தினை மேலும் உறுதி செய்யும்.

ஒரு காலத்தில் கிழக்காசியாவின் மிகப் பெரிய பத்திரிகை ஸ்தாபனங்களில் ஒன்றெனப் புகழப்பட்ட சுயாதீனப் பத்திரிகா சமாஜம் என்ற தவஸ பத்திரிகை நிறு வனம் எங்கள் (1966ல்) வாழைத் தோட்டத்திலேயே நிலை கொண்டிருந்தது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சாஸ்திரம்- கவிதை- சிறுகதை- சினிமா- பெண்கள் இதழ் என வாரத்தின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பத்திரிகையைச் சகோதரச் சிங்கள மொழியில் வெளியிட்டு, தன்னை ஒரு பென்னாம் பெரிய நிறுவன மாகத் தகுதி பெற்றுத் திகழந்தமை, வாழை மண்ணுக்கும் பெருமையல்லவா?

இந்த தவஸ நிறுவனம் சிங்கள- ஆங்கில மொழிகளில் பத்திரிகைகளை வெளியிட்டது போலவே, நம் தாய்த் தமிழிலும் பத்திரிகைகளை வெளியிட் டமை, வாழைத்தோட்டப் பத்திரிகை பாரம் பரியத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பது போலாயிற்று. தவஸ காரியாலயம் வெளி யிட்ட தமிழ்ப் பத்திரிகைகளின் விபரங்க ளைத் தொடர்ந்து அறிவோமாக!

'தினகரன்' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர்களில் ஒருவரான மறைந்த எம். நாதன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு, தவஸ நிறுவனம் ஆரம்பமான (1966ல்) புதிதில், முதன் முதல் 'ராதா' என்னும் சினிமா வாராந்திரியை வெளியிட்டது. 'ராதா' சினிமா இதழாக வெளி வந்தாலும், ஏனைய கலை- கலாசார- இலக்கிய விட யங்களுக்கும் இடம் ஒதுக்கி, வாசகரி டையே பெரும் வரவேற்பைப் பெற்றது என் பதைத் தமிழ் நெஞ்சங்களால் மறக்க முடியாது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரன் நம் இலங்கையில்- கண்டி நகரில் பிறந்து, குழந்தைப் பருவத்திலேயே தமிழகம் சென்று, சினிமாக உலகில் கொடி கட்டிப் பறந்து, புகழின் உச்சியில் திகழ்ந்த போதும், ஒரேயொரு முறையே தன் தாயகமான இலங்கைக்கு வந்து, புகழ் குவித்துச் சென்றார். எம்ஜியாரை ஒரு முறையேனும் நேரில் சந்திக்கும் பாக்கியம் கிட்டாதா? என இலங்கை ரசிகர்கள் ஏங் கித் தவித்ததைப் புரிந்து கொண்ட 'ராதா' இதழே 'லட்சுமி' எனும் அழகுராணிப் போட்டியை ஒழுங்கு செய்து, அவ்விழாவை யொட்டி எம்ஜியாரையும்- சரோஜாதேவி யையும் இலங்கைக்கு வரவழைத்துப் பெருஞ் சேவை புரிந்து, ஏங்கிய இதயங் களை எல்லாம் நிம்மதியுறச் செய்தது.

மக்கள் திலகம் எம்ஜியாரின் இலங்கை விஜயத்தின் மூலம் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பேராதரவைப் பெற்றுக் கொண்ட தவஸ நிறுவனம், தன்னில் ஒரு தமிழ்ப் பிரிவை உருவாக்கி, முன்னாள் 'வீரகேசரி'யின் ஆசிரியராகத் (அப்போது) திகழ்ந்த இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறை ஜாம்பவனாகிய மறைந்த எஸ். டி. சிவநாயகம் அவர்களை தவஸ தமிழ்ப் பிரிவுக்குத் தலைவராகவும், கம்பெனியின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் உள்வாங் கிக் கொண்டது. அதன் பின் திரு. எஸ்.டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநாயகம் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு 'தினபதி' என்ற நாளிதழையும், அதன் வார இறுதிப் பதிப்பாக 'சிந்தாமணி'யையும் 1967 முதல் 1990 வரை மிகச் சிறப்பாக நடத்தியது. 'சிந்தாமணி' ஞாயிறு காலை வேளை ஒரு லட்சம் பிரதிகள் வரை விற்பனையானது. ஊடக மன்னனின் மகிமையல்லவா?

இடையில் ஆசிரியர் சிவநாயகத்தாரின் ஆலோசனையை அடியொட்டி, 'தந்தி' எனும் மாலை தினசரியை (5 சதம்)யும், பின்னர் 'சுந்தரி' எனும் சஞ்சிகை இதழையும் தவை நிறுவனம் துவக்கியது. இறுதியில் குடும்பத்தாரின் சொத்து விவகாரம் தொடர்பில் தவை நிறுவனம் ஆரம்பித்து நடத்தி, வாழைத்தோட்ட வளைப்புக்கு மேலும் வசீகரத்தைத் தந்தது நெஞ்சிலிருக்கும் தேன் செய்தியாகும்.

ஆக, 12 தமிழ் பத்திரிகைகளையும்- 3 சிங்கள- 2 ஆங்கிலப் பத்திரிகைகளையும் (மொத்தம் 23) வெளியிட்ட ஒரே மண், இந்த வாழைத்தோட்டம் தான். இலங்கையிலே அதிக (தமிழ்) பத்திரிகைகளை வெளியிட்ட ஒரே தோட்டம் எனச் சொன்னால், அதை மறுக்கவோ- மறக்கவோ- மறைக்கவோ முடியாது அல்லவா?


மல்லிகை ஆண்டுச் சந்தாதாரராகச் சேருபவர்கள் கவனத்திற்கு....



ஆண்டுச் சந்தா 600/-
தனிப்பிரதி 40/-
ஆண்டு மலர் 200/-

ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

வங்கித் தொடர்புகளுக்கு:

Dominic Jeeva 072010004231.- Hatton National Bank, Sea Street, Colombo - 11.

45வது ஆண்டு மலர் தரமான தயாரிப்பு. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும். காசோலை அனுப்புபவர்கள் Dominic Jeeva எனக் குறிப்பிடவும். காசோலை அனுப்புவோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, **Dominic Jeeva** என எழுதுவோர் இந்தப் பெயருக்கு முன்னாலோ பின்னாலோ வேறெதுவும் கண்டிப்பாக எழுதக் கூடாது. காசுக்கட்டளை அனுப்புபவர்கள் Dominic Jeeva, Kotahena, P.O. எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

பலர் தனித் தனி இதழ்கள் பெற்று எம்முடன் தொடர்பு கொள்ளுகின்றனர். தனி இதழ் தேவைப்படுவோர் தபால் முத்திரைகள் அனுப்பி மல்லிகையின் தனி இதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721




# ஓர் ஆரம்பமும் அதன் முடிவும்

-ச. முருகானந்தன்

காதல்-

ஆம்! காதல் சுமையான சுகமானது என்பார்கள். என்னைப் பொறுத்த வரையில் இன்று வரை அது சுமையானதாகவே இருந்து வந்துள்ளது. எல்லாக் காதலர்களும் தமது காதலியைத் தேவதை என்பார்கள். ஆனால், இவள் உண்மையிலேயே தேவதைதான். அழகு, அறிவு, மென்மையான சுபாவம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் தன்மை என அவள் நிறைவான காதலியாக வலம் வந்தாள். ஒரு நாளாவது ஊடல், மோதல் என்று வராதா? என்று ஏங்கியதும் உண்டு. அது கிட்டவே இல்லை!

எனினும், என் காதலில் என்றோ ஒரு நாள் பூகம்பம் வெடிக்கும் என்பது எனக்குத் தெரிந்தே இருந்தது. எனவே, நான் மனதுக்குப் பிடித்த அவளிடமிருந்து கண்டிப்பாக ஒதுங்க வந்த ஆரம்ப நாட்களிலேயே, மனதுள் ஆயிரமாயிரம் ஆசைகள் இருந்தும் மறுத்தேன். ஆனால், அவள் விடுவதாயில்லை. துரத்தித் துரத்திக் காதலித்தாள். மனதிலே கொள்ளை கொள்ளையாக ஆசையை வைத்துக் கொண்டு மறுப்புச் சொல்வது என்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. ஆசை ஒரு புறம், சரிப்பட்டு வராது என்ற அச்சம் மறுபுறமாக நான் குழம்பித் தவித்தேன்.

பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் சக மாணவர்கள் மத்தியில் மிகவும் செல்வாக்கு மிக்கவனாக, அனைவராலும் நட்புப் பாராட்டப் படுபவனாக இருந்தேன். இன்னொரு புறம் படிப்பில் முன்னணி. கிரிக்கெட், கால் பந்தாட்டம் என்பவற்றில் சூரத்தனம் என்பனவும் என்னைப் பிரபலமாக்கியது. குறிப்பாக, சக மாணவிகள் மத்தியில் நான் ஒரு கதாநாயகனாக இருந்தேன். என் கடைக்கண் பார்வைக்காகப் பலர் காத்திருந்தனர். இருந்தும் நான், என் கண் அவள் பக்கம் காதல் பேசியதைக் குறிப்பால் உணர்ந்த அவள் அதை அழுங்குப் பிடியாகப் பற்றிக் கொண்டாள். சுற்றிச் சுற்றி வலம் வந்தாள். தினமும் வசந்தப் புகைகளால் வதைத்தெடுத்தாள். அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பார்கள். நான் மட்டும் அசையாமல் இருக்க முடியுமா? ஒரு பெண்ணுக்கே இவ்வளவு உறுதி இருக்கும் போது, நான் அதன் தவிடு பொடியாகிப் போனேன்.

இதற்கிடையில் பல்கலைக்கழகச் சக மாணவர்களின் கூளிப்பாட்டம்! காதலர்கள் என்று முத்திரை வேறு குத்தப்பட்டது.

எம் இணைப்பில் இளவேனில் தளிர்த்தது. எத்தனை தடவை சந்தித்துப் பேசினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்காத ஆர்வம். நிஜத்திலும் அவள்; நினைவிலும் அவள்; கனவிலும் அவள்.

சுந்தரி!

எவ்வளவு பொருத்தமான பெயர்!

அவளது அழகுக்கும், துடுக்குத் தனத்திற்கும், இளமைக்கும் பொருத்த மான பெயர்!

அவள் ஒரு இனிய காதலியாக இருந் தாள். ஒரு காதலனின் அபிலாசைகளைப் புரிந்து நடந்தாள். முதலில் தயங்கிய நான், இப்போது காதலின் இனிமையைச் சுக மான சுமையை உணர்ந்தேன். ஒரு பெண் ணின் அன்பினால் புதுக்கி எடுக்கப்பட்ட நான் இன்னொரு படி முழுமையானவனாக மாறினேன். எப்பொழுதும் உற்சாகம்!

சுந்தரி இல்லாத ஒரு வாழ்க்கையை இனி ஒரு போதும் என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. சுந்தரியும் தினமும் எமது எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைகளில் பலதையும் கதைப்பாள். எனினும், என் மனதிலே ஒரு பிரளயம் துளிர்த்துக் கொண் டுதானிருந்தது. 'இந்தக் காதல் வெற்றி பெறுமா?'

நான் ஆழமாக யோசிப்பதிலும் ஒரு அர்த்தம் இல்லாமலில்லை. இன்று உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டா லும், அண்டவெளியெங்கும், ஆழ்கடலிலும் விஞ்ஞான வளர்ச்சி ஏற்றம் கண்ட பின்னரும், எமது சமுதாயத்தில் இன்னும் அழியாமல் நீறு பூத்த நெருப்பாக இருக்கும் ஒரு விடயம் தான் எனது மனக் குழப்பத் திற்குக் காரணம். எமது மக்கள் புலம் பெய ர்ந்து உலகெங்கும் பரவிவிட்ட பின்னரும் இன்னமும் கைவிடாமல் அழுங்குப் பிடியா கப் பிடித்துக் கொண்டிருக்கும் விடயம் தான் இந்த அர்த்தமற்ற விவகாரம், சாதிப் பாகுபாடு!

ஆம்! எனது பிறப்பை நிச்சயித்தவன் நானில்லை. அது இயல்பாகவே நிகழ்ந்த விடயம். நான் வந்து பிறந்தது மரமேறும் சாதியில். எனது பாட்டனின் தொழில் அது வாக இருந்தது. அப்பா வைத்தியசாலை யில் சிற்றூழியராகப் பணி புரிகிறார். மாமா மார் இருவரும் படித்து ஒருவர் முகாமைத் துவ உதவியாளராகவும், இன்னொருவர் மருந்தாளராகவும் பணியாற்றுகிறார்கள். அவர்களின் வழிகாட்டலில் கல்வி கற்றுத் தான் பல்கலைக்கழகத்திற்கு வந்திருக்கி றேன். எனது சாதி அவளுக்குத் தெரிந்தி ருக்கவில்லை. ஆனால், அவளை என் மனது விரும்ப ஆரம்பித்த போதே அவளைப் பற்றிய விபரங்களை அறிந்தேன். அவள் மேல்குடி வெள்ளாளர் குடும்பத்தில் பிறந்த வள் என்பதை அறிந்த போது, நான் பொசு ங்கிப் போனேன். இந்தச் சமூகத்தில் இவ் வாறான காதலை நிறைவேற விட மாட் டார்கள் என்பதனாலேயே தயங்கினேன். எனது சாதியைப் பற்றி அவளிடம் சொல்லி விடலாமா? என அப்போது நான் நினைத்த போதும், தாழ்வுச் சிக்கல் அதைத் தடுத் தது. காதலிக்க ஆரம்பித்த பின்னரும் சில சந்தர்ப்பங்களில் சொல்ல நினைத்த போதும் ஏதோ ஒன்று அதைத் தடுத்தது.

ஒரு நாள் நாம் உரையாடிக் கொண்டி ருந்த போது சுந்தரி சொன்னது என் மனதைக் குத்தியது. "சிவா, என்னுடைய ஒன்றவிட்ட அக்கா ஒரு சலவைத் தொழி லாளியை விரும்புகிறாவாம். அந்தப் பெடிய னும் அவவுடன் படிப்பிக்கிறானாம். அதால பெரிய பிரச்சினையாய்ப் போச்சு. எங்கட



பெரியப்பா அக்காவுக்கு அடிச்சு, படிப்பிக் கிறதையும் நிற்பாட்டிப் போட்டாராம்...."

அவளது கதையில் என் மனமும் இருண்டது. எனினும், என்னைச் சுதாகரித் துக் கொண்டு, "சலவைத் தொழிலாளி என்கிறாய்..... ஆசிரியர் என்கிறாய்.... எது சரியானது?"

"முன்னையது சாதி..... பின்னையது தொழில். என்ன இருந்தாலும், குறைஞ்ச சாதியிலை செய்து வைக்கப் பெற்றவை உடன் பட மாட்டினம் தானே?"

என் முகம் ஒடிக் கறுத்ததை அவள் கவனிக்கவில்லை. எவ்வளவோ கெட்டிக் காரியாக இருக்கும் சுந்தரி எனது சாதி பற்றி விசாரணையை ஏன் மேற் கொள்ள வில்லை? குறைந்த பட்சம் என்னிடமே இப்போதாவது கேட்டிருக்கலாமே? ஒருவேளை, எனது எடுப்பான தோற்றமும், நடையுடை பாவனையும் அவளைச் சிந் திக்க விடாமல் தடுத்திருக்கலாம். ஆனா லும், எனது சாதி பற்றி அன்றும் நான் அவளோடு கதைக்கவில்லை.

எமது பல்கலைக்கழகக் கல்வியின் இறுதிக் காலம் நெருங்கி வந்தபோது, அவள் கேட்டாள், "சிவா, எங்கட காதலைப் பற்றி உங்கட வீட்டில் கதைச்சிட்டியளே?"

"இல்லை..... நீர் கதைச்சிட்டீரோ?"

"நேற்றுத் தான் அம்மவோட கதைச்ச னான். அவ அப்பாவிடம் சொல்லுவா..... அப்பா என்னில சரியான பாசம்.... என்ர விருப்பத்தை மறுக்கமாட்டார் எண்டு நினைக்கிறன்..... நீங்களும் கதையுங்கோ உங்கட வீட்டில...."

எனக்குக் குழப்பமாக இருந்தது. இன்று எப்படியும் எனது சாதி பற்றிச் சொல்லி விட வேண்டும் என நினைத்தேன்.

"சுந்தரி..... எங்கட கலியாணம் பெற் றோரின்ர சம்மதத்தோட நடக்கும் என்று நான் நினைக்கேல்லை....."

"ஏன் சிவா?"

"ம்..... நாங்களாக முடிவெடுத்து இரக சியமாகப் பதிவுத் திருமணம் தான் செய்ய வேணும்...."

"ஏன் சிவா, உங்கட வீட்டிலை சம்ம திக்க மாட்டினமோ......? ஆரையாவது பேசி வைச்சிருக்கினமே?"

"இல்லை சுந்தரி.... நீர் இன்று வரை யிலை ஏன் என்னுடைய சாதியைப் பற்றிக் கேட்கவில்லை..... விசாரிச்சும் பார்க்கவில் லையே?"

"இதென்ன புதுக் கேள்வி? உங்க ளைப் பார்க்கவே தெரியுது...." சுந்தரி குழப் பத்துடன் என்னை நோக்கினாள்.

"என்ன தெரியுது...? நான் கள்ளிறக்கிற சாதிக்காரன் எண்டா?"

"என்ன....? என்ன...? விளையாடுறி யளே.....? என்னை ஏமாற்றிப் பார்க்கிற திலை உங்களுக்கு என்ன லாபம்.....?"

"இல்லை சுந்தரி..... உண்மையாகத் தான் சொல்லுறன்..... என்ர சாதி அது தான்......"

சுந்தரி இதைச் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. அவளது முகம் சட்டென்று வாடிப் போனது. எதுவுமே பேசாமல் நம்ப முடியாதவள் போல குழப்பத்துடன் என்னை நோக்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சுந்தரி..... பயப்படாமல் தைரியமாக இரும்.... எந்த எதிர்ப்பு வந்தாலும் நாம் உறுதியாக நிண்டால் நாம் ஒன்று சேரலாம்.....''

அவள் எதுவுமே பேசவில்லை. கண்களில் நீர் துளிர்த்து நின்றது.

''சுந்தரி ஏன் மௌனமாக இருக்கிறீர்....? கதையும்.....''

''சிவா..... இதை நீங்கள் முன்னரே சொல்லியிருக்கலாம்.....''

''சொல்லியிருந்தால்......?''

''.........''

''இப்போ ஏன் யோசிக்கிறீர்? வீட்டிலை சொல்லும்.... மறுத்தால் நாம் பதிவுத் திருமணம் செய்து கொள்வோம். பின்னாலை எல்லாம் சரிவரும்.''

''.............''

''சிவா என்னாலை நம்ப முடியேல்லை..... நீங்கள் பொய் சொல்லி என்னுடைய காதலின் ஆழத்தைச் சோதிச்சுப் பார்க்கிறியளே?''

''இல்லை சுந்தரி..... இது விளையாடுகிற நேரமில்லை.... நான் சொல்லுறது உண்மை''

அவள் நம்பாததால், எனது குடும்ப விபரம் முழுவதையும் விபரமாக அவளிடம் கூறினேன். அவள் விக்கித்துப் போய்ச் செயலற்று நின்றாள். அவளது கண்களில் நீரோட்டத்தை அன்று தான் கண்டேன்.

நெருடல்களுடன் அன்று விடை பெற்றுச் சென்றவள், மறுநாள் மிகுந்த சோர்வுடன் வந்தாள். முகம் அமாவாசை வானம் போலிருந்தது.

''என்ன சுந்தரி, வீட்டில கதைச்சனீரே?''

''.............''

''சொல்லும்..... என்ன சொன்னவை?''

அவள் விம்மி விம்மிக் கதைத்தாள். ''சிவா..... அம்மாவுடன் கதைத்தேன். அவ பத்திரகாளியாக மாறி என்னைத் திட்டினா...... அப்பா அறிஞ்சால் வெட்டிக் கொன்று போட்டுத் தானும் நஞ்சு குடிச்சிடுவாராம்.....'' சொல்லும் போதே அவளது கண்கள் ஊற்றெடுத்த வண்ணமிருந்தது.

என் மனதிலும் கலக்கம். நான் எதிர் பார்த்த பூகம்பம் இதோ வெடித்து விட்டது. இந்த எரிமலையில் எமது காதலும் பொசுங்கிப் போய்விடுமா?

சிறிது நேரம் நிலவிய மௌனத்தை முடிவுக்குக் கொண்டு வந்தேன். ''சுந்தரி..... இப்போ நீர் என்ன சொல்கிறீர்....? எனது வீட்டிலும், எமது உறவுப் பெண்ணையே செய்ய வேண்டும் என வற்புறுத்துகிறார்கள்.... ஆனாலும், நான் எனது நிலைப்பாட்டைத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். பெற்றோர் என்றுமே இவ்வாறான காதலை அங்கீகரிப்பதில்லை. நாம் தான் துணிவாக முடிவெடுக்க வேண்டும்......''

''சிவா..... இரண்டு பேருமாக நஞ்சைக் குடித்துச் சாவமே?'' அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''என்ன சுந்தரி? நீர் படிச்ச பெண்...... படித்தவள் போலவா பேசுகிறீர்....? தற்கொலை செய்தால் யாருக்கு என்ன லாபம்....? அது முட்டாள்தனம்.... தற்கொலை மூலம் யாரையும் தண்டிக்க முடியாது.... சில நாட்கள் அது செய்தியாக



இருக்கும்...... பிறகு எல்லோருமே மறந்து போய் விடுவினம்.... காதலிக்கும் போது இருந்த துணிவு கலியாணம் செய்வதிலும் இருக்க வேண்டும்..... எதற்கும் ஆறுதலாக யோசியும். சோதினை முடிஞ்சதும் துணிச்சலான முடிவு எடுப்பம்.... இப்போ கவனமா கப் படியும்.....''

அதற்குப் பின்னர் சுந்தரி மிகவும் கவலையும் சோர்வுமாக இருந்தாள். முன்னைய கலகலப்போ, என்னைச் சந்திப்பதில் அதிக ஆர்வமோ காட்டவில்லை.

சுமையாக அழுத்திக் கொண்டிருந்த பரீட்சையும் முடிந்தது. முதலாம் வகுப்பில் சித்தி பெறுவேன் என்ற நம்பிக்கையும் இருந்தது. நம்பிக்கையோடு சுந்தரியைச் சந்தித்தேன்.

''சோதினை எப்பிடி சுந்தரி?''

''ஏதோ செய்திருக்கிறேன்.... பாஸ் பண்ணியிட்டால் போதும்.....''

''சுந்தரி..... நாம இப்பொழுதே பதிவுத் திருமணம் செய்வோம். வேலை கிடைத்ததும் ஒன்று சேருவோம்..... அதுவரை பெற்றோருடன் இருக்கலாம்......''

அவள் அவசரமாகத் தலையாட்டினாள். ''வேண்டாம் சிவா..... பெற்றோருக்குத் தெரியாமல் பதிவுத் திருமணம் செய்ய முடியாது. எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கியவர்கள் அவர்களல்லவா?''

''இப்போ என்ன சொல்ல வருகிறீர்.....?''

''சிவா, பதற்றப்படாமல் சிந்தியுங்கோ.... நானும் ஆழமாக யோசித்துப் பார்த்தனான். இந்தச் சமூகத்தை எதிர்த்து எம்மால் வாழ முடியுமா.....? பெற்றோரை, உறவுகளைப் பிரிந்து, அவர்களைத் துன்பப்படுத்தி நாம் மட்டும் வாழ வேண்டுமா? நான் உங்களைத் கலியாணம் செய்வதனால் எனது சகோதரங்களின் வாழ்வும் பாதிக்கப்படும் எல்லோ?''

''முடிவாக என்ன சொல்கிறீர்?''

''நாம் பிரிந்து விடுவோம்.... அது தான் நல்லது, சிவா.....''

''சுந்தரி..... பல்கலைக்கழகக் காதல் படலை வரை என்பதைக் காட்டி விட்டீர்..... அப்படியானால் நீர் என்னைத் துரத்தித் துரத்திக் காதலித்தது எல்லாம் பொய்யா?''

''இல்லைச் சிவா... என்னைப் புரிஞ்சு கொள்ளுங்க. நான் உயிருக்கு உயிராக உங்களைக் காதலிக்கிறது உண்மை. உங்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறன். கலியாணம் ஒன்றைத் தவிர...''

''.......... '' எனக்குப் பேச்சு வரவில்லை.

''நாங்கள் பிரிகிற காலம் வந்திட்டுது சிவா. உங்களை நான் ஏமாற்றினதாக நினைக்காதீங்க..... நாம இரண்டு பேரும் ஒருமுறை ஒண்டு சேருவோம்..... நான் என்னை முழுசாக உங்களுக்குத் தந்திடுகிறன்......''

''சீ.....! நிற்பாட்டும் சுந்தரி..... வெறும் உடல் தான் தேவையென்று நினைச்சிருந்தா எப்பவோ உம்மை அடைஞ்சிருப்பன்..... எனக்குத் தேவை உம்முடைய காதல்.... உம்முடனான கூடல் மட்டுமல்ல......'' ஆவேசமாகக் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றேன்.

யாரோ சொன்னார்கள் சாதி செத்து விட்ட தென்று.....? காதல் தான் செத்து விட்டதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்துப் போனது - மனிதம்!

-ந. ஆதவன்

(கரவெட்டிப் பிரதேசச் செயலகம் நடத்திய பொதுப் போட்டியில் இரண்டாவது பரிசினைப் பெற்றுக் கொண்ட சிறுகதை)

''அப்பா, நிறையக் காகங்கள் கத்துதப்பா! எழும்புங்கோ!''

நான் கட்டிலில் புரண்டு படுக்கின்றேன்.

''எழும்புங்க அப்பா......! எழும்புங்கோவன்.....!''

அவள் விட்டுவிடுவதாக இல்லை. தோளில் பிடித்து அசைத்து அசைத்து, எழுப்புகின்றாள். இருள் முற்றாகக் கலைய முன்னர் தினமும் கண் விழித்து விடுவது அவள் வழக்கம். அவளுக்கு உறக்கம் கலைந்துவிட்டால் நான் படுக்கையில் கிடக்க இயலாது. அவளின் அன்பான துயில் எழுப்புதல் எனது சோர்வைப் போக்கிவிடும். தனது விருப்பம் போல என்னைப் ஆட்டி வைக்கும் சக்தி அவள்.

''காகம் காலையில் கரையும்'' பாடப் புத்தகத்தில் இருப்பதை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள். வைகறையில் காகம் கரைய ஆரம்பித்ததும் அதையே சொல்லிக் கொண்டிருப்பாள்.

இப்பொழுது காகங்கள் பல ஒன்றாகக் கூடிக் கரைகின்றன. இல்லை, அவைகள் அழுகின்றன போலத் தோன்றுகின்றது. ''காகம் காலையில் கரையும்'' என வழமை போல் மகள் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. காகங்களைப் போய்ப் பார்க்க வேண்டுமென அந்தரப்படுகிறாள். அவளுக்கும் வித்தியாசம் புரிந்திருக்க வேண்டும்.

நான் மெல்ல எழுந்து மகளை அணைத்த வண்ணம் வீட்டுக்கு வெளியே முற்றத்துக்கு வருகின்றேன். வீட்டு வளவுக்கு வெளியே நிற்கும் பரந்த வேப்பமரம் காகக் கூட்டத்தினால் கறுத்துக் கிடக்கிறது. காகங்கள் அழுத வண்ணம் மரத்திலிருந்து மேலே எழுவதும், மீண்டும் வந்து அமருவதும், நிலத்தில் வந்து குந்திக் கத்துவதுமாக அமர்க்களப்படுகின்றன. ''எத்தனை காகங்கள்..... எவ்வளவு நேரமாக அழுது கொண்டிருக்கின்றன?'' மகளுக்கு மனங் கொள்ளாத வியப்பாக இருக்கின்றது.

நான் அவளை அணைத்த வண்ணம் வீட்டு வளவுக்கு வெளியே வருகின்றேன். நான் எதிர்பார்த்தது போல, காகம் ஒன்று வேப்பமரத்தின் கீழே செத்துக் கிடக்கின்றது. அதைச் சுற்றி இந்தப் பெருங் கூட்டம் கதறி அழுது கொண்டிருக்கின்றது.

''ஏனப்பா, காகங்கள் சுத்திச் சுத்திப் பறந்து பெரிய கூட்டமாக நிண்டு கத்துதுகள்?''



''அது அம்மா, ஒரு காகம் செத்துப் போய்க் கிடக்குது...... தெரியுதெல்லே?''

''ஒரு காகம் செத்ததுக்கு.....?''

''எல்லாக் காகங்களும் அழுகுதுகள். காகங்கள் அப்பிடித்தான். சாப்பாட்டைக் கண்டாலும் அப்பிடித்தான். கத்தி எல்லாக் காகங்களையும் கூப்பிடும்''

''நல்ல பழக்கம்! இல்லையா அப்பா?''

''ஓமம்மா!''

''அப்ப இண்டைக்கு முழுவதும் இந்தக் காகங்கள் இங்கே அழுது கொண்டேயப்பா இருக்கும்?''

காகங்கள் அழுது கொண்டிருப்பது அவள் மனதுக்குக் கஷ்டமாக இருப்பதை உணர்ந்து கொண்டு, ''இப்படியே விட்டு வைத்தால் நெடுக அழுது கொண்டிருக்கும்'' என்கின்றேன்.

''எனக்கும் கவலையாக இருக்கப்பா''

''இதிலை நில் கிட்டப் போனால் காகங்கள் வந்து உனக்கும் குட்டிப் போடும். நான் மம்பட்டி எடுத்துக் கொண்டு வாறன்'' சொல்லிக் கொண்டு உள்ளே சென்று மண் வெட்டியும் கையுமாகத் திரும்பி வருகின்றேன். வேம்புக்குக் கீழே கிடங்கொன்றைத் தோண்டுகின்றேன். காகங்கள் நிலத்தில் என்னைச் சூழ்ந்து கத்துகின்றன. குழி தோண்டி முடிந்ததும், மண்வெட்டி அலகினால் இறந்து கிடக்கும் காகத்தைக் கோலி எடுத்துக் குழிக்குள் போடுகின்றேன்.

காகங்கள் அடித்துப் புரண்டு உச்சத் தொனியில் கத்துகின்றன.

நான் மண் போட்டு மூடிவிட்டு மகளை அழைத்துக் கொண்டு திரும்புகின்றேன்.

இறந்த காகத்தின் புதைகுழியைச் சுற்றி அழுது கொண்டிருக்கின்றன.

எனக்குப் பரபரப்பான நேரம். நான் குளித்து மகளைக் குளிக்க வைத்து, காலை உணவு உண்டு, மகளையும் உடன் அழைத்துக் கொண்டு அவசரமாக அலுவலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் போகின்றேன். இடையில், மகளைப் பாடசாலையில் இறக்கிவிட்டுப் போக வேண்டும். போய்க் கொண்டிருக்கும் போது, மகள் கேட்கின்றாள். ''செத்த காகத்தைக் கிடங்குக்குள்ளே போட்டுத் தாட்டாப் பிறகும், மற்றக் காகங்கள் அழுது கொண்டிருக்குது, ஏனப்பா?''

''காகங்கள் அப்பிடித்தான் பிள்ளை!''

மகளின் பிஞ்சு மனம் காகத்தினால் உண்டான சோகத்திலிருந்து இன்னும் விடுபடவில்லை என்பதை விளங்கிக் கொண்டு விரைவாக அலுவலகம் போய்ச் சேருகின்றேன்.

அலுவலகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் மறந்து வேலையில் மூழ்கிப் போகின்றேன்.

தேநீர் இடைவேளையின் போது, செய்தித் தாள்களைப் போட்டு வைக்கும் சிறிய மாநாட்டு மண்டபத்துள் நுழைந்து இன்றைய செய்தித்தாள் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருக்கின்றேன்.

''மச்சான், பேப்பரில இன்டைக்கு எத்தனை தலை விழுந்து கிடக்கு?'' வேடிக்கையாகக் கேட்டுக் கொண்டு, ஒரு நண்பன் உள்ளே வருகின்றான். ''பார்த்துத் தான் சொல்ல வேணும்'' அக்கறை இல்லாமல் கூறுகின்றேன்.

''நீ என்ன புதுக்கதை கதைக்கிறாய்? அதுக்கெண்டு ஒரு தனிக் கொலம் ஒதுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறாங்கள், வடிவாப் பார்!'' என்கிறான், அவன்.

''எங்கேயடாப்பா இருக்கு?'' நான் அலட்சியமாகக் கேட்கின்றேன்.

"இஞ்சை விடு" சொல்லிக் கொண்டு செய்தித் தாளைக் கையில் எடுத்து அந்தக் கொலத்தினைத் தொட்டுக் காட்டி, எண்ணிப் பார்த்து, ''பதினைந்துக்கு மேலை தலைகள் நேற்று விழுந்திருக்கு'' என்கிறான் சாதாரணமாக.

நான் பெருமூச்சு விட்டுக் கொண்டு எழுந்து என் மேசைக்கு வந்துவிடுகின்றேன்.

அலுவலகக் கடமைகள் அன்று முடிந்து எல்லோரும் கையொப்பமிட்டு விரைவாக வீட்டுக்குச் செல்லப் புறப்படுகின்றோம்.

இருந்தாற் போல திடீரென வீதியிலே வேட்டுச் சத்தம்.

அலுவலகம் அதிர்ந்து உறைந்து போகின்றது.

அலுவலகத்திற்கு முன்னுள்ள பிரதான வீதியில் போக்குவரத்து ஸ்தம்பித்துப் போகின்றது. வீதி வெறிச் சோடிக் கிடக்கிறது. மனித நடமாட்டமே இல்லை!

நான் எனது கதிரையில், உள்ளே கலங்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கின்றேன்.

அரை மணிநேரம் கழிந்திருக்கும்.

மீண்டும் வீதி உயிர்க்கின்றது.

வீதியில் வாகனங்கள், மனித நடமாட்டம் ஒன்றிரண்டாக ஆரம்பித்து, வீதி சாதாரண நிலைக்கு வருகின்றது. அலுவலகத்தில் தங்கியிருந்த எல்லோரும் இங்கிருந்து புறப்பட்டு வீதிக்கு வந்து விரைந்து செல்கின்றார்கள்.

நான் எனது மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு வீதிக்கு வந்து வீடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றேன்.

அலுவலகத்தில் இருந்து சுமார் இருநூறு மீற்றர் தூரத்தில், வீதி ஓரத்தில், ஒரு மனித உடல் அனாதையாக இரத்த வெள்ளத்தில் தோய்ந்து கிடக்கின்றது.

A. R. R. HAIR DRESSERS
89, Church Road,
Mattakuliya,
Colombo - 15.
Tel : 0112527219
முற்றிலும் குளிரூட்டப் பெற்ற சலூன்



# காலத்தின் மீது சத்தியமாக...

-உ. நிசார்

ஆதி..... அந்தம்.... இன்றி
சீரான கதியில் சுழலும்
ஒரு சக்கரம்.

அடி..... முடி.... இன்றி
நிகழ்வுகளை எரிக்கும்
ஒரு மெழுகுவர்த்தி

வெள்ளமாய்.... பிரவாகமாய்
நினைவு எச்சங்களை- சொச்சங்களை
சுமந்த ஒரு காட்டாறு

சான்றுகள் வைத்தும் வைக்காமலும்
சரித்திரங்களும்... சாம்ராஜ்ஜியங்களும்
அழிந்தொழிந்த போது
அவற்றுக்கெல்லாம்,
பரிகாரம் பார்க்காத பாவி.

இவையெல்லாம்
ஊழி..... ஊழி காலங்கள்
என்னைக் கண்டு..... கேட்டு
உணர்ந்தவர்களின் அனுபவக் கூற்றுகள்
பாவம்..... அவர்கள்.

அவர்களின் கற்பனைக்களுக்கெல்லாம்
அப்பாற் பட்டவன்.... நான்!
எனக்கு எல்லைகள் இல்லை
என்னை..... இதுவரை
வெற்றி கொண்டவர்களும் இல்லை!


சூரிய சந்திரர்களும்
நட்சத்திரங்களும்
எனது பயண வேகத்தில்
உடைந்து.... பறந்த.... துகள்கள்!

ஆறாத நோய்களுக்கு
நான்... ஒரு மருந்து
தீராத புதிர்களுக்கு
நான்..... ஒரு விடை
உதிர்ந்த இலை போல,
இழந்த உயிர் போல.
நானும்
ஓர் இழப்பை அடையாளமிடுபவன்.

வானம்... பூமி.... மட்டுமல்ல,
அண்டம் எங்கும் வியாபித்தது
எனது ஆட்சி
நான்.... காலம்!
இறைவன் கூட,
என் மீது சத்தியம் செய்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீற்று இணையத் தள கவிதைகள்

**http://www.keetru.com/index.php**

கீற்று இணையத்தளம் நல்ல பல கவிதைகளை தருகிறது. இலங்கை கவிஞர்களின் கவிதைகளுக்கும் கணிசமான முறையில் களம் அமைத்து தருகிறது. உங்கள் ரசனைக்காக சில கவிதைகள்

## தாத்தா....

ஆகி விட்டது
ஆறு ஆண்டுகள்
தாத்தா இறந்து

விட்டுச் சென்ற
நிலங்கள்
வீட்டு மனைகளாகி விட
வங்கிச் சேமிப்புகள்
வாரிசுகளின்
கடனடைத்து வி



நிர்வகித்த
நிர்வாணம்
அவர் பெயர்
சொல்வதை

நிறுத்தி விட
அவ்வப்போது
பிள்ளையிடம்
அம்மா காணும்
அடையாளமாய்
"அப்படியே
தாத்தா போல"

- க. ஆனந்த்

## கதை வியாபாரிகளின் தெரு

உடலெல்லாம் பூசப்பட்ட
மலர் நறுமணப் பொடிகள்
நாறத்தொடங்கிய பின்
எந்தக் கூச்சமோ
அருவருப்போமின்றி
கதைகள்
வாசிக்கப்படுகின்றன
தெருக்களில்

கதைகளில் பிறப்புடலின் தேகத்தில்
அச்சிடப்பட்டிருக்கின்றன எண்ணற்ற
கதைகள்
உடல் பொதியும் மனத்துடன்
அலையும் கதைகளின் வியாபாரி
"புதியவை" என்ற அட்டையைத்
தூக்கிக் கொண்டு திரிகிறான்
வாசிக்கப்படாத பக்கங்களுக்காய்

வாசித்தவற்றை மறந்துபோன மனிதர்கள்
மிதக்கும் ஒரு உரையாடல்களையும்
கதையென நம்பிக் கல்லாக்கிக் கொள்கிறார்கள்
களம் பிந்தி வந்த புதிய வியாபாரி
கதைகளை அவிழ்க்கிறான்
முண்டியடிக்கும் மனிதர்களிடையே
தன் குறியை உயர்த்திக் காட்டுகின்றான்

வழியும் சிதறும் அழியப் புழுக்கள் நெளியும்
அவன் குறி வழி பெருகும் கதைகளை
அவசர அவசரமாக அள்ளிக் கொண்டு
கலைகின்றனர் மனிதர்

மேலும் ஒருவன் கதைகளைக் கூவி
விற்றபடி
தெருவில் வருகின்றான்

-சித்தாந்தன்

## தூக்கமற்றிருப்பவனின் இரவு

அந்தரத்தில் உடலை தக்கையென
மிதக்கவிட்டு
இருளைப் பிழிந்து கண்களில் ஊற்றி
தூக்கத்தின் பாதையில் அலைந்து திரியும்
நினைவுகளையெல்லாம் அடக்கிவிட்டு
தூக்கத்தை கெஞ்சுகையில்
பின்னிருந்து அழைப்பு வருகிறது
அதிகாலைகள் தொடங்கலாயின

## சுழற்சி!

கீ கீ யென சுற்றி வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யந்திர கிரியின் தலையில்
தட்டிவிட்டு நிமிர்ந்த
குழந்தையின் கண்களில்
படபடத்தது பச்சைக்கிளியொன்று!
வலையில் மாட்டிக்கொண்ட
பச்சைக்கிளியின் படபடப்பில்
அடியோடு பிடுங்கி விழுந்தது
அத்திமரம் ஒன்று!
சரிந்த மரத்தின் அதிர்வில்
மூங்கில்கள் உரசி பற்றிக்கொண்டது
அடர்ந்த வனமொன்று
தீயின் நாக்குகள்
இட்ட சாபங்கள்
கொன்று குவித்தது
தேசமொன்றை
ஆளில்லா நகரத்தின் மேல்
எப்போதும் போல்
நகர்ந்துகொண்டிருந்தது
கிழட்டு சூரியன்!

## அறை தங்கா கடவுள்

உடைந்த முகப்பறவின்
கருஞ்சிவப்புக் குழந்தை
கழுவிச்செல்கிறது
கருப்புமை கண்ணீர்
சாலைச்சுழற்சியில்
45 ஆம் நாளில்

## கருவறையை நீக்குதல்!

கடவுள் ஒன்று குடியிருந்த அறை
பறையொலிப்போட்ட கரையான்கள்
புற்றெடுத்தது
கோவிலையே இடிக்கவேண்டி வருமென
கருவறையை பெயர்த்தெடுத்து
வெளியில் வைத்தார்கள்
கையில் கருவறையை ஏந்தியவாறு
கடவுள் கும்பிட்டுக்கொண்டிருக்கிறது
தான் முன்பு குடியிருந்த கோவிலை

## எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்.....

கை நழுவும் சில்லறைகளில்
இன்றாவது கை கூடுமா
முழு பரோட்டாவும் சால்னாவும்
நெஞ்சை நிமிர்த்தி படுத்திருக்கிறார்
அனுமார், ரோட்டில்!
உடைந்த கல் கேள்விக்குறியாய்
புதிதாய் வரையும் கோட்டில்
தன் ஒருவனுக்கு
உணவில்லையெனில்..........
அனுமாரை அழித்துவிட்டு அடுத்த படம்
வரைவான்

## ஊமச்சி அழுத கதை

க்கூட க்கூடின்னு கேவி அழுதா ஊமச்சி!
திண்ணையடியில் அழுது நின்னா
பின்வாசல் முற்றத்தில் அழுது நின்னா
தாழ்வாரத்தில அழுது நின்னா
முன் வாசல்ல அழுது நின்னா
வீதில அழுது நின்னா
கோவிலடித்தல அழுது நின்னா
இப்பெல்லாம் க்கெக்கெக்கேன்னு
சிரிச்சிட்டு சிட்டாட்டம் பறந்து போறா
இப்படி அவகண்ணுல தண்ணி வருது
அழுதாளா சிரிச்சாளான்னு
எனக்குத்தான் தெரியல


- ஜானகி

## அறிவில்லாதவர் கணக்கு

செருப்பு போட மறுக்கும் ஐயனைப்போல
சிறுமியை
"இந்தக் காலத்தில்
இப்படி யாரும் இருப்பார்களா?"
என்றாளே
கையில் பேப்பர் பேனாவைக் கொடுத்து
வீதியில் நிறுத்தி
"செருப்பில்லாமல் வருபவர்கள்
எண்ணிக்கையைக் குறித்து வை"
என்றேன்..
சற்று நேரத்தில் வந்து பார்த்தபோது
பாதையில் இருந்த பூஞ்செடியின்
தளிர்களைக்
கிள்ளியெறிந்து கொண்டிருந்தவளை
"அறிவில்லை உனக்கு?"
எனத் திட்டிச் சென்றேன்..
அரைமணி நேரம் கழித்து வந்து
"ம்ம். எத்தனை பேர்?" என்றேன்
"இருபத்தாறு" என்றாள்
"அட.. இவ்வளவா?" என்றேன்
"இது அறிவில்லாதவர்கள் எண்ணிக்கை"
என்றாள்!

-நாவிஷ் செந்தில்குமார்

### வாழ்த்துகின்றோம்



வளர்ந்து வரும் மலைய எழுத்தாளர் பிரமிளா பிரதீபன் அவர்களினது கனிஷ்ட புத்திரன் 'சந்தோஷ்'சின் முதலாவது பிறந்த நாளையொட்டி, மல்லிகை தனது மனங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்ளுகின்றது.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரச்சினையை நடுநிலையாக அணுகியுள்ள 'அலிமங்கட' திரைப்படம்

**-பிரகலாத ஆனந்த்**

நிஹால் டீ சில்வாவின் ஆங்கில நாவலான The Road from Elephant Pass நூல் இலங்கை அரசின் சாகித்திய விருது பெற்ற அதே வருடம் தான் மல்லிகைப் பந்தல் வெளியீடாக வந்த எனது 'தரைமீன்கள்' சிறுகதைத் தொகுதியும் சாஹித்திய மண்டல விருதினைப் பெற்றது. அன்றைய பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து அப்போதையை கலாச்சார அமைச்சர் ஹேரத், விருது பெற்றவர்களுக்கு ஒரு தேநீர் விருந்தை அளித்தார். அப்போது அறிமுகமானவர் தான் நிஹால் டீ சில்வா. அவர் அன்று என்னிடம் வந்து தனது ஆங்கில நாவல் பிரதி ஒன்றையும் என்னிடம் தந்து, அதைத் தமிழில் மொழி பெயர்க்க முடியுமா? என்றும் கேட்டார். மொழி பெயர்ப்பில் எனக்கு முன் அனுபவம் இல்லா ததைக் குறிப்பிட்டு நான் பின் வாங்கிய போது, முயற்சியுங்கள் நான் பதிப்பிக்கின்றேன் என்று என்னை உற்சாகமூட்டினார்.

குறிப்பிட்ட நாவலை நான் வாசித்த போது, அதில் சில நெருடலான சம்பவங்கள் இருந்தன. நான் இது பற்றி என் மனைவியுடன் கலந்தாலோசித்த போது, அவரும் நான் மொழி பெயர்ப்பதை விரும்பவில்லை. அப்போது நான் வன்னியில் மருத்துவராகப் பணியாற்றியமையினாலும், மனைவி பிள்ளைகள் கொழும்பில் இருந்தமையினாலும், மெல்ல மௌனமானேன். எனினும், நிஹால் எனது மனைவியின் தொலைபேசி எண்ணோடு தொடர்பு கொண்டு மொழி பெயர்ப்புப் பற்றி விசாரித்தார்.

பின்னர் அந்த நாவல் சிங்களத்தில் 'அலிமங்கட' என்ற தலைப்பில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. இப்போது 'அலிமங்கட' என்ற அதே பெயரில் திரைப்படமாக வந்திருக்கிறது. முன்னர் நான் பார்த்த பிரபாகரன் என்ற சிங்களத் திரைப்படத்திலிருந்து வேறு பட்டு, தொடரும் இனப் பிரச்சினையை பாராபட்சமின்றி நடுநிலையில் நோக்கியுள்ளது. இதன் புகழ் நாவலாசிரியரையே சேரும். கதை ஒரு புறமிருக்க காட்சிப் படுத்தலை எடுத்தாலும் இது ஓர் அற்புதமான திரைப்படமாக வடிக்கப்பட்டிருக்கிறது. வன்னியின் வயல்வெளி, களப்பு, முதல் புத்தளம் வரையிலான வடமத்திய மாகாணக் காடு களமாகியுள்ளது. படம் முழுவதும் ஒரு புதிய களத்தைத் தரிசிக்க வைப்பதோடு வனாந்தர இயற்கை எழிலோடு பறவைகளையும், மிருகங்களையும் அவை எழுப்பும் ஒலிகளையும் இயல்பாக சித்தரித்துள்ளார். அழகான பட்சிகளும், பயமூட்டும் எருமையும், சிறுத்தையும், மானும், குரங்கும் என நாமும் காட்டுக்குள்ளேயே பயணிக்கிறோம். பாம்பு படமெடுத்து அச்ச மூட்டுகிறது. இடையிடையே திகி லான காட்சிகள்.

படம் முழுக்க முழுக்க நாயகன், நாயகி இருவரும் காட்டினூடே பயணிக்கிறார்கள். நாமும் அவர்களோடு பயணிப்பதான உணர்வு. நாயகன் பாத்திரம் வசந்த ரண சிங்க ஓர் இராணுவக் காப்டன். நாயகி கமலா வேலாயுதம் என்ற இயக்கத்தி லிருந்து வெளியேறி வரும் விடுதலைப் புலி கள் போராளி. இப்புலி உறுப்பினர், தனது சகோதரனைப் புலி உறுப்பினர்கள் கொலை செய்து விட்ட ஆத்திரத்தில் அவர் கள் பற்றிய முக்கிய தகவல் ஒன்றைக் கொடுக்க வருகிறார். எனினும், இத்தக வலை உயர்மட்ட அதிகாரி ஒருவரிடமே தெரிவிக்க விரும்புகிறார். முகமாலை முன்னரங்கிலிருந்து இவளை ஜீப்பில் ஆனையிறவு முகாமுக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து ஹெலி மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லும் பணி காப்டன் வசந்தவுக்கு ஒப்படைக்கப்படுகி றது. முன்னரங்கிற்கு வந்து கமலாவை அவர் ஆனையிறவுக்கு அழைத்துச் செல்வதற்கு முன்னதாக, ஆனையிற வைப் புலிப் போராளிகள் சுற்றி வளைத்துக் கடும் யுத்தம் மூண்டுவிடுகிறது. ஆனையி றவு நோக்கி வந்து கொண்டிருந்த இவர்கள் பயணித்த இராணுவ வாகனமும் தாக்குத லுக்கு உள்ளாகி, துணைக்கு வந்தோர் இறந்து போக வசந்தவும், கமலாவும் மட் டுமே தப்பிப் பிழைக்கின்றனர். எனினும், அவர்களது ஆவணங்கள் தவறிப் போகின் றன. எனவே, வேறு வழியின்றி கிளாலி கடலேரி தாண்டி, மன்னாருக்குப் பயணிக் கிறார்கள். புலிகளிடமிருந்தும், இராணுவத் தினரிடமும் தப்பிக் காடு வழியாகப் புத்த ளம் வரை பயணித்துப் பின் கொழும்பை அடையும் வரை, கதை சுவாரஷ்யமாக நகர்த்தப்படுகிறது.

முதலில் வெறுப்பும், முரண்பாடுமாகப் பயணத்தை ஆரம்பிக்கும் இருவரும் ஒருவர் மீது ஒருவர் சந்தேகப்பட்டு வார்த்தைகளால் அடிக்கடி மோதுகிறார் கள். எனினும், வேறு வழியின்றிப் பயணத் தைத் தொடர்கிறார்கள். இப் பயணத்தின் போது, இனப் பிரச்சினை பற்றிய இருவரி டையேயான உரையாடல் மூலம் நாற்ற மெடுக்கும் இனவாதம் பற்றியும், அதன் ஆணிவேர் பற்றியும், தற்போதைய யுத்தம் பற்றியும் கட்டம் கட்டமாக உரையாடப் படுகிறது. இனப் பிரச்சனைக்கான முக்கிய காரணமான சிங்கள பேரினவாதத்தை- சிங்களவர் குடியேற்றம், மொழியுரிமைப் பறிப்பு, கல்வி வேலை வாய்ப்பு என்பனவற் றில் புறக்கணிப்பு, சாத்வீகப் போராட்டங் களை ஆயுதம் கொண்டு அடக்கியமை, இனக் கலவரங்களில் அப்பாவித் தமிழ ருக்கு எதிரான வன்முறை எதுவும் மறைக் கப்படாமல் கூறப்படுகிறது. போர் முகிழ்ந்த பின் இராணுவ, மற்றும் விடுதலைப் புலிகளின் அராஜகப் போக்கு, மக்களை மதிக்காத இரு தரப்பினரின் பாசிசப் போக்கு என அனைத்துமே அலசப்படுகின் றன. சிங்களவர் தமிழர்கள் மீது எவ்வளவு குரோதத்தை வைத்திருக்கிறார்கள் என் பதையும், தமிழர்கள் சிங்களவரை எவ்வ ளவு தூரம் வெறுக்கிறார்கள் என்பதையும், இரு தரப்பினரும் இலங்கையரென்றோ,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர் என்றோ சிந்திப்பதில்லை என்பதும், புலப்படுத்தப்படுகிறது. முதலில் தம் தம் இனத்தவரை நியாயப்படுத்திய நாயகனும், நாயகியும் மெல்ல மெல்ல மறு பக்கத்தையும் புரிந்து கொள்கின்றமை இயல்பாகச் சித்திரிக்கப்படுகின்றது. இன்றைய தேவையும் இரு இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வு தானே? அரசியலையும், அரசியல்வாதிகளின் அபத்தமான தீர்க்க தரிசனமற்ற செயற்பாடுகளும் விமர்சிக்கப்படுகின்றன.

காட்டினூடேயான ஆபத்தான பயணத்தின் போது, இடர்மிக்கத் தருணங்களில் நாயகனும் நாயகியும் மாறி மாறி ஒருவரை ஒருவர் காப்பாற்றுகிறார்கள். கமலாவின் ஆற்றல், ஆளுமைகள், சாதுரியம், துணிவு என்பவற்றைக் கண்டு வசந்த வியப்பதும், வசந்தவின் நல்லியல்புகளைக் கண்டு கமலா பூரிப்பதும் இருவருக்குமிடையே ஈர்ப்பினை மெல்ல மெல்ல ஏற்படுத்தி இருவரையும் மனதால் நெருங்க வைக்கிறது.

1983 கலவரத்தில் பாதிக்கப்படும் கமலாவின் குடும்பமும் காப்பாற்றும் சிங்களக் குடும்பமும் பழைய இன உறவையும் தெறிப்பையும் உணர்த்தி நிற்கிறது. வசந்தவின் ஒரே சகோதரி மத்திய வங்கிக் குண்டு வெடிப்பில் பலியான சேதியில் கமலா துடிப்பதும், கமலாவின் அப்பாவின் இனக் கலவரப் பிரிவில் வசந்தவும் அனுதாபப்படுவதும் என பல இயல்பான காட்சிகள். இராணுவ விமானங்கள் கண்மூடித்தனமாகத் தாக்கும் போது அப்பாவிகள் சிதறி மடிவதும் தரிசனமாகிறது.

நாம் ஒருபோதும் ஈழத்தை உங்களுக்குத் தரப் போவதில்லை என வசந்த கூறுவதும், நீங்கள் தரத் தேவையில்லை. நாங்கள் பெறுவோம் எனக் கமலா பதிலடி கொடுப்பதும் சிலிர்ப்பான காட்சி! குறிப்பிட்ட ஒரு திகதியில் நிச்சயமாக விடுதலைப் புலிகளின் தலைவர் ஒரு இடத்திற்கு வந்து தங்குவார் என்ற தகவலைச் சுமந்து வரும் கமலா, கொழும்பில் மேலதிகாரியிடம் சொல்வதாக இருந்த இரகசியத்தை, வசந்த மீது ஏற்பட்ட நம்பிக்கையில் பயணத்தின் இறுதிக் கட்டங்களில் கூறிவிடுகிறார். முரண்பாடுகளுடனும், மோதல்களுடனும் தொடங்கிய பயணம், பின்னர் இருவருக்குமிடையேயான புரிதல்களுடன் தொடர்கையில் இருவர் மனதிலும் காதல் பிறக்கிறது. எனினும், இருவரும் கடைசி வரை பயணத்தின் போது சொல்லவில்லை. இருவரிடையே காதல் ஏற்படுவது வெகு இயல்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

படத்தின் பிரதான பாத்திரங்களோடு நாமும் ஒன்றிப் போகுமளவு அவர்களின் நடிப்பும், இயக்கமும், காட்சியமைப்பு, ஒலி, ஒளி, எடிற்றிங் என்பனவும் கச்சிதமாக வந்துள்ளமை இன்னொரு சிறப்பம்சம். தற்போதெல்லாம் பெண்களைச் சாதுக்களாக, மென்மையாகப் பெண்ணடிமைப் பார்வையோடு சித்திரிப்பது மாறி வருகிறது. பெண் போராளியான கமலாவின் சுறுசுறுப்பும், தைரியமும் அவரது நடிப்பாற்றல் மூலம் வெளிப்படும் போது, பிரமிப்பு ஏற்படுகிறது. பாட்டு இல்லாத படம். ஒரே பாணித் திரைபடங்களின் மசாலாத் தன்மைகளிலிருந்து வேறுபட்டு, ஆடல்,



பாடல், மிகையான காதல் காட்சிகள். கனவுகள் எதுவுமேயின்றி படத்தோடு பார்வையாளர்களை ஒன்ற வைத்துள்ளமை படத்தின் வெற்றியாகும்.

படத்தின் இறுதிக் காட்சிகளில் ஆனையிறவுக் களமுனையிலிருந்து கிடைத்த தகவலுடன் வசந்தவின் வீட்டிற்கு தகவல் கொண்டு வரும்போது, தாயார் கதவைத் திறக்கிறார். மாட்டுக் கொட்டிலிலுள்ள தாய்ப் பசு அலறுகிறது- அருமையான காட்சி.

இனவாதமும், யுத்தமும் முடிவுற வேண்டும் எனவும், சகல வன்முறைகளுக்கும் முடிவு கட்டப்பட்டு, அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டும் என்றும், அநாகரிகமான இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும், கதாசிரியர் விரும்புவதை இத் திரைப்படத்திலும் ஆழமாக உணர்த்தப்பட்டுள்ளது. புலிகளின் ஆனையிறவுத் தகர்ப்போடு படம் முடிவடைகிறது. எனினும், சிங்களத் திரைப்படம், சிங்கள ரசிகர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தினாலோ என்னவோ, ஒன்பது வருடங்களின் பின்னர் 2009ல் இராணுவம் முற்றாக புலிகளை வெற்றி கொள்ளும் செய்தியும் காண்பிக்கப்படுகின்றது.

'பைத்தியமா?' என்று நாயகி முன்னர் காட்டுக்குள் கேட்டது போலவே, இறுதிக் காட்சியில் கேட்கும் போது நன்றாக இருக்கிறது. படத்தில், கமலா கொண்டு வந்த செய்தி பொய்யானது என்று தெரியவரும் இடமும் இருக்கையில் நிமிர்ந்து உட்கார வைக்கிறது. 'எங்களுடைய மக்களுக்காகப் போராடும் எங்கள் தலைவரை நான் காட்டிக் கொடுப்பேன் என நீங்கள் நம்பினீர்களா?' என்கிற இடம் மனதைத் தொடுகிறது. சென்றியில் நிற்கும் புலி உறுப்பினர்கள் மக்களுடன் அநாகரிகமாக நடப்பதாகக் காட்சிப்படுத்தப் படுவதும் சற்று மிகைப்பாக உள்ளது. தகவலைப் பெற்றுக் கொண்டதும், இராணுவ அதிகாரிகள் அவள் கேட்டுக் கொண்டபடி கமலாவைக் கனடாவுக்கு அனுப்பி வைப்பார்களா? அல்லது சித்திரவதை செய்வார்களா? என அவளைக் கையளித்த பின் காப்டன் தவிப்பதும் இயல்பாக உள்ளது.

இறுதியாக ஒரு துயரமான செய்தி. எந்த வன்முறைகளும் இல்லாமல் போக வேண்டும் என்ற ஆதங்கத்துடன் இந்த நாவலை எழுதிய நிஹால் அதே வன்முறைக்குப் பலியானார் என்றால் நம்புவீர்களா? ஒருவிடுமுறை நாளில் அவருக்குப் பிடித்த பறவைகள், விலங்குகள் சரணாலயத்திற்குக் குடும்பத்தவருடனும் நண்பர்களுடனும் சென்ற போது, அங்கு நிலக் கண்ணியில் சிக்குண்டு குடும்பத்தோடு பலியாகிவிட்டார், நண்பர் நிஹால் டீ சில்வா!

2004 சாகித்திய விழாவுக்குப் பின்னர் நிஹாலைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. ஒரு நாளிலேயே நட்புடன் பழகிய அந்த இனிய மனிதனை அநியாயமாக இழந்துவிட்டோம் என மனது வலிக்கிறது. இப்படி எத்தனை அநியாயச் சாவுகள்! அதிலும், வடகிழக்கில் வகை தொகையின்றி நடந்து முடிந்துவிட்டது. இனியாவது தொடராமல் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெகிராவ ஸஹானாவின் ஒரு கூடும் இரு முட்டைகளும்

- 'அக்ஸர்' இப்னு ஆயிஸா

[illegible] இலக்கிய வெளிப்பாட்டில் பெண் [illegible] ஈடுபாடுகள் [illegible] அதிகமாகவே இருந்துள்ளன. பெண்ணியம் என்ற இலக்கியக் கருத்தியலின் வளர்ச்சி [illegible] சமூக தளங்களில் ஏற்படுத்தும் அசைவுகள் பெண் படைப்பாளிகளின் [illegible] ஏற்பட்டு வருவது கண்கூடு.

அநுராதபுர மாவட்டத்தில் கெகிராவ பிரதேசத்தினைச் சேர்ந்த ஸஹானா, கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் என்ற பல்துறை படைப்புகளை இலக்கிய உலகில் தந்து வளர்ந்துள்ளார். மிக எளிமையாக தமது படைப்பியல் துறை முயற்சிகளில் அதிக வாசிப்புடன் இயங்கிவரும் இவரது படைப்புகள் பேசிதம் [illegible] பெற்றுள்ளதை [illegible] பதிவுகள் [illegible] ஸஹானாவின் [illegible] சிறுகதை, கவிதை [illegible] இலக்கிய [illegible] ஆளுமையை [illegible].

[illegible] 'ஒரு கூடும் இரு முட்டைகளும்' என்ற [illegible]

[illegible] ஆசிரியர், அநுராதபுர [illegible] இலங்கை [illegible] சமர்ப்பணம் செய்யப்பட்ட இந்நூலில் [illegible] அவர்களின் அணிந்துரையும், அன்பு ஜவஹர்ஷா அவர்களின் [illegible] பெற்றுள்ளது.

இந்நூலின் முதல் பகுதியில் ஒரு கூடும் இரு முட்டை [illegible] இரண்டாம் பகுதியில் [illegible] உண்மைக் காதல், உள்ளும் புறமும் [illegible] என்ற 5 [illegible] இடம் பெற்றுள்ளன.





[illegible] சொல்ல விடயங்களையே [illegible] இந்த ஸஹானாவின் கதைகள் [illegible] குறிப்பாக இந்தத் [illegible] 5 சிறுகதைகளும் அநுராதபுர [illegible] உள்ள [illegible] ஒரு வகைப் [illegible] முக்கிய [illegible] அழகான [illegible] ஸஹானாவின் கதைகள் [illegible].

[illegible] பெண்களின் [illegible] தேவைகள் [illegible] மிகையாக இருப்பது கவனிக்கத்தக்கது.

இக்கதைகள் ஒவ்வொன்றும் [illegible] வெளிப்படையான [illegible] சமூக [illegible] பெண் உணர்வுகள் மற்றும் பெண் என்ற [illegible] கதைகள் [illegible] பிடிக்கின்றன.

உண்மைக் காதல் என்ற சிறுகதையின் முடிவு [illegible] தெரியவில்லை. ஒரு பெண் [illegible] நிகழ்வுகள் [illegible] குறிப்பிடுகின்றார்.

'உள்ளும் புறமும் போல்' என்ற கதை [illegible]

ஒரு கூடும் இரு முட்டைகளும் என்ற [illegible]

இவ்வாறே [illegible] என்ற கதையும் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெயர்ந்த மக்கள் பற்றி மிகவும் கவலையுடன் சிந்திக்கின்ற ஒரு இளைஞனின் பிரார்த்தனை, மன வேட்கை என்பனவற்றை சமூக நடத்தை தகர்த்தெறிவதை இக்கதை குறிப்பிடுகிறது. பாலியல் உறவு, சமூக கலாசார நிலவரத்தில் அதிலும் இடப் பெயர்வில் எவ்வாறான அநாகரியங்களை ஏற்படுத்துகின்றது என்ற யதார்த்தத்தை இக்கதை துல்லியமாக குறிப்பிடுகின்றது. எந்த ஒரு வாசகனும் எதிர்பார்க்காத திடீர் முடிவு கதையின் கருவை, கட்டமைப்பை, வாசகன் மனதில் ஆழப் பதிக்கிறது. இத்தொகுதியில் உள்ள கதைகளில் மிகவும் சிறப்பான கதையாக இக்கதையை குறிப்பிடலாம்.

'பெண் என்றால்' என்ற கதை, தொழில் செய்கின்ற ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் பதிதாக மலர்கின்ற உறவை அல்லது சிநேகத்தை சொல்லுகின்றது. இக்கதையில் உள்ள தனித்துவம் என்னவெனில் ஏனைய கதைகளை விட நவீன பாங்கில் இக்கதை முடிவதும் மிக எளியைமான கதைக்கருவுடன் உணர்வுகளுக்கான மொழிபெயர்ப்பாக இக்கதை அமைகின்றது. இக்கதையிலும் பெண்ணியம் பற்றிய பிரக்ஞையை ஆசிரியை நிலைநிறுத்துகின்றார்.

விமர்சன ரீதியாக இக்கதைகளை நோக்கினால், கதைகள் சமூகப் பிரச்சினையை அதிலும் குறிப்பாக பெண்களின் பிரச்சினையை அப்பட்டமாக பேசுகின்றன. இதனால் இக்கதைகள் சமூகத்தை காட்டிக் கொடுக்கின்றன எனக்குறிப்பிடலாம். இதனால் வேறுபல புரிதல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அண்மையில் ஸஹானாவின் கதைகள் பற்றிய ஒரு குறிப்பை ஒரு சிறுசஞ்சிகையில் வாசிக்க கிட்டியது. அக்கட்டுரையாசிரியர் இஸ்லாம் பெண்களை அடக்கி ஆளுகின்றது என்ற புரிதலில் விமர்சனத்தை எழுதியிருந்தார். ஆனால், உண்மை அதுவல்ல. மார்க்கம் ஆண் பெண் இருபாலாரையும் சமமாகவே பார்க்கின்றது. இவ்வாறான தவறான புரிதல்களுக்கு சிறுகதைகள் வழிகோலா வண்ணம் அமைவது இன்னும் சிறப்பு எனலாம். அவ்வாறே கதைகளில் பெண் பாத்திர வார்ப்புக்களை அலங்காரம் செய்ய முனையும் போது, விரச உணர்வை வாசகன் கற்பனை பண்ணாத வண்ணம் எழுதியிருப்பின் இன்னும் நல்லம் என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆனால், கதைகளில் யதார்த்தம் என்பதே உண்மை.

எது எப்படி இருப்பினும், பெண் படைப்பாளிகளாலே பெண்கள் பற்றிய நுட்பமான அணுகுமறைகளை எழுத்தில் பதிவு செய்ய முடியும் என்பதனை இக்கதைகள் அடித்துச் சொல்கின்றன. இக்கதைகளில் ஒரு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில், பாத்திரங்க~~ளின்~~ மௌனங்களையும், புன்னகையையும், இன்னும் மிக யதார்த்தமான எளிமையான உணர்வுகளையும் படைப்பாளி தனது துல்லியமனா வசன வியாக்கியானங்கள் மூலம் வாசகன் மனக்கண்முன் நிறுத்தி, கதையை மனத்திரையில் ஓடவிட்டுள்ளார். இக்கதைகளில் அநுராதபுர மாவட்டப் பிரதேச அடையாளங்கள் கதைகளில் இருப்பது இக்கதைகளை பின்னர் ஆய்வு செய்யத் துணியும் ஆய்வாளனுக்கு சிறப்பான உசாத்துணையாக இருக்கும் எனக் கணிக்கிறேன்.

இறுதிய, திக்வெல்லைக் கமால் அவர்கள் குறிப்பிட்டது போன்று கெகிராவ ஸஹானாவின் 'ஒருகூடும் இரு முட்டைகளும்' பெண்களைப் பேசி நிற்கும் ஒரு காத்திரமான தொகுதி என அறுதியிட்டுக் கூறலாம்..



# நோன்மதி தின இலக்கியக் கருத்தாடல்

திருமறைக் கலாமன்றத்தின், கொழும்புக் கிளையின், நோன்மதி தின இலக்கியக் கருத்தாடல் 02.11.2009 ஆம் திகதி, 176, புதுச் செட்டித்தெரு, கொழும்பு- 13 இல், கிளையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. 'நதி' ஆசிரியர் எம். ஐ. லோசன் தலைமை வகித்தார்.

ஜே. வின்ஸ்லோவின் தமிழ் வாழ்த்துப் பாடலோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

## வரவேற்புரை: அம்புறோஸ் பீற்றர் (இயக்குநர் தி. ம. க. மன்றக் கொழும்புக் கிளை)

செம்மொழி மகாநாடு குறித்து இப்போ பரவலாகப் பேசப்படுகின்றது. இது எப்படி ஏற்பட்டதென்பதை இன்றைய சந்ததி அறிந்திருக்க வேண்டும். உலகத் தமிழறிஞர்கள் பங்கு கொள்ளும் இம் மகாநாட்டை யாழ்ப்பாணத்தவரான அருட் தந்தை தனிநாயகம் அடிகளாரே பாரிய தனது உழைப்பைக் கொடுத்து ஆரம்பித்து வைத்தார். 1967 இல் கோலாலம்பூரில் உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு என்ற பெயரில் இம் மாநாடு நடைபெற்றது. தொடர்ந்து சென்னை, பாரிஸ், மதுரை, மொறிஷியஸ், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டு இடையில் தடங்கல் கண்டிருந்தது. 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த மகாநாடு வரலாறு படைத்தது. தற்பொழுது இம் மண்டபத்துக்கு முன் புல்வெளித் தரையில் காணப்படும் நினைவு ஸ்தூபிகள் தக்க அத்தாட்சிகள். 14 ஆண்டுகளுக்குப் பின் இப்போ கோவையில் இம் மகாநாட்டை நடாத்தத் தமிழக முதல்வர் மு. கருணாநிதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். ஈழத்துத் தமிழறிஞர் பேரா. கா. சிவத்தம்பியின் பங்களிப்பையும் கேட்டிருக்கிறார்.

## எம். ஐ. லோசன் தலைமையுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

இப்போ வானொலி குடிசைக் கைத்தொழிலாக மாறி வருகின்றது. வானொலியின் பலத்தைத் தரத்தை மழுங்கடித்து விட்டனர். தேசிய ஒலிபரப்பில் முத்தமிழிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. இலக்கியத் தரமுடையவையாக இருந்தன. அறிவிப்பாளராகத் தேசிய ஒலிபரப்பில் கடமை புரிந்தேன். அச்சு ஊடகங்களைச் சிறப்பாக நடத்துவதுக்குப் பண வசதி தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புருஷோத்தமன் தங்கமயில்: சிறப்புரை: 'ஒரு சாமானியனின் பார்வையில் இவ்வகை இலக்கியமும் ஊடகங்களும்.'

மொழி மாற்ற இலக்கியங்களை வாசித்தேன். கறுப்பின மக்களின் பிரச்சினையைப் புகட்டும் 'மங்கையர் கூடம்' என்ற நாவலை வாசித்தேன். அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கனால் இது புகழப்பட்டது. தமிழகப் படைப்பாளி சாருகானின் '0°' 'தப்புத் தாளங்கள்'-ஈழத் தவரான புகலிட எழுத்தாளர் கருணாகர மூர்த்தியின் 'பேர்ளின் இரவுகள்' நாவலை வாசித்தேன். ஜேர்மானிய ராக்ஸி சாரதிகளின் பிரச்சினைகளை மையப்படுத்திய படைப்பு. வவுனியா மண்ணின் வாழ்வைக் காண வைக்கும் நீ. பி. அருளானந்தத்தின் 'வாழ்க்கையின் நிறங்கள்' நாவலை வாசித்தேன். மன்னார் அமுதனின் எழுத்து களிலும் மூழ்கியிருக்கிறேன். தொடர்ந்து ஆறு மாதங்கள் வாசித்தேன். இப்போது இலக்கியத்துக்கு இணையத்தில் பெருந் தளம் கிடைத்துள்ளது. சம்யுக்தா கீர்த்தி, மன்னார் அமுதன், விஜயரூபன் அதிகமாகப் பங்களிப்புச் செய்கின்றனர். சொல்லப் போனால் இங்கு இலக்கியம் கூண்டுக்குள் மட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றது.

செய்தி வாசிப்போருக்கு நிறையப் பயிற்சி தேவை. குறிப்பிட்ட வாசக மட்டத் துக்குள்ளே தான் சிறு சஞ்சிகைகள் நிற்கின்றன. இந் நிலையை மாற்ற வேண்டும். இவ்வேடுகளின் ஆசிரியர்கள் இதைக் கவனத்துக்கு எடுத்து சகல வாசகர் மட்டத்துக்கும் அவைகள் போவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். 'மல்லிகை' சஞ்சிகையை எத்தனை பேர் வாங்குகிறார்கள். வாசிக்கிறீர்கள்? ஈழத்தின் இலக்கியச் சூழலில் இலக்கியச் சஞ்சிகைகளால் கிடைக்கும் வருமானத்தில் எவருமே வாழ முடியாது. மற்றொரு தொழிலும் வேண்டும்.

இன்று படைக்கப்பட்டுப் படிக்கப்படும் இலக்கியங்கள் நாளைய வாசகனால் தூக்கி எறியப்படும். சமூகத்தை இலக்கியம் மாற்ற வேண்டும். ஏற்கனவே வேறு எழுத்து வடிவங்களில் படித்த விஷயங்களைப் படைப்புகளில் மீண்டும் படிக்க வேண்டி ஏற்படும் போது வாசிப்பு ஆர்வம் குறையும். குறுங் குழுமங்களுள் இன்றைய ஈழத்து இலக்கியம் அமுங்கியுள்ளது. எமது ஆரம்ப எழுத்தாளர்கள் இவைகளுள் சிக்கிக் கொள்ளக் கூடாது. எமது இலக்கியத்தில் பொழுது போக்கு அம்சங்கள் தவிர்க்கப்பட வேண்டும். காத்திரமான பதிவுகளுக்கு இன்று வாய்ப்புக் குறைவு. அதற்காக இலக்கியவாதிகள் சோர்ந்து விடக் கூடாது. காலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு ஊடகங்கள் தமது அம்சங்களை இலகுபடுத்துகின்றன. மொழி இலகு படுத்தப்படுகிறது. இந்த விடயத்தில் சொல்லாட்சியைக் கவனத்துக்கு எடுக்க வேண்டும். கவிதைகள் சொல்லோவியங்களாகி விட்டன. அப்படித் தான் ஊடகங்கள் கவிதையை அறிமுகப் படுத்துவதை அறிகிறோம். ஊடகவியலாளருக்குக் கொஞ்சமாவது இலக்கியமும் தெரிந்திருக்க வேண்டும். ஊடகங்கள் இதை அத்தியாவசியப் படுத்த வேண்டும்.



## கவிஞர் பாடுமீன் விஜயரூபன்:

வவுனியா அகதி முகாமுக்குச் சென்றேன். அங்கு கண்டவைகளை கவிஞனென்ற வகையில் கவிதையாக்கியிருக்கிறேன். அதையே இங்கு வாசிக்கப் போகிறேன்; 'மனிதத்தைத் தேடுகிறேன்' என்ற தலைப்பில்:-

*அகதி முகாம் சென்றேன்/ அல்லலுறும் மக்களை/ அரவணைக்கலாம் என்று தயங்கி நிற்கின்றேன் இங்கு/ தடுப்புக்களைத் தாண்ட முடியாமல் தவிக்கிறது நெஞ்சம்.*

*நெஞ்சிலேறி விளையாட வேண்டிய/ பிஞ்சு உள்ளங்கள் கூட அஞ்சி நிற்கின்றன அறியாத வயதிலே.*

*மஞ்சத்தில் மகிழ்ந்திருக்க வேண்டிய/ மாந்தர் கூட, மரத்துப் போன மனதுடன்/ மறியலான இம்முகாமில்*

*பஞ்சு மெத்தையில் படுத்துறங் வேண்டிய பாட்டன் கூட பனித் தரையில் படுத்துறங்கக் கண்டேன் என் கண்களால் மனிதத்தைத் தேடுகிறேன் இங்கு/ மரணித்து விட்டதோ என்று மதி கலங்குகின்றது.*

*பொங்கியெழ நினைக்கின்றேன்/ புயலாகப் புதைத்து விடக் கூடுமோ புலியென்று எனையும்.*

*வஞ்சகர் செய்யும் வதைகளால் வாடி வதங்குகின்றனர் வன்னி மக்கள்/ வாழ்வா சாவா என்பதறியாமல்/*

## கருத்துக் களத்தில் கவிஞர் மன்னார் அமுதன் சொன்னதாவது:-

கனவுகள் வாழ்வுக்கு உந்து சக்தி. எனவே தான் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தூங்க விடாத கனவுகளைக் காணச் சொன்னார். 'தமிழ் இனிச் சாகும்' என மகாகவி பாரதியார் எதிர்வு கூறவில்லை. 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்- அந்த மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும் என்றெந்தப் பேதை உரைத்தான்' எனத் தான் விழித்தார். இங்கு வந்த வணிகரே அந்த எண்ணத்தில் திளைத்தனர். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பார்' எனப் பாரதி வற்புறுத்தினார். தமிழை வளர்ப்போம். ஆங்கிலம், லத்தீன் மொழியிலிருந்தே தோன்றியது. தொகையல்ல முக்கியம். தரம், வகைதான் முக்கியம். ஆயிரம், இரண்டாயிரமெனக் குவிப்பதால் பயன் வராது. படைப்புகள் தரமாக இருத்தல் வேண்டும். ஆரோக்கியத்தின் மகத்துவம் ஆரோக்கியமற்றிருக்கும் போது தான் உணரப்படும்.

இன்னும் சிலரும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

நாடகச் செயற்பாட்டாளரான இளங் கலைஞர் எஸ். சதீஸ் நன்றியுரை தெரிவித்தார்.

**தொகுப்பு: எம்பியெஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>வாழும் நினைவுகள்: 29</u>

# தொடரும் இலக்கிய நேசம்

**—திக்குவல்லை கமால்**

கடிதத் தலைப்பில் மும்மொழிகளிலும் 'ஜனசங்சதய' என்று பதிக்கப்பட்டிருந்தது. பாணந்துறையில் அலுவலகம் அமைந்திருந்தது.

களுத்துறை மாவட்டத்தில் தமிழில் இலக்கியப் போட்டிகள் நடாத்துவது தொடர்பாகத் தங்களைச் சந்திக்க விரும்புவதாகக் குறிப்பிட்டு வந்து சந்திக்குமாறு நாள், நேரம் ஒதுக்கித் தந்திருந்தனர்.

அப்பொழுது நான் திருமணம், தொழில் காரணமாகக் களுத்துறை மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

சிங்களச் சகோதரர்கள் தமிழ் இலக்கிய நடவடிக்கைக்காக அழைப்பு விடுக்கும் போது, நான் எப்படி பின்வாங்க முடியும்? அந்த உணர்வு என்னை உந்தித் தள்ளியது.

சகல வசதிகளும் கொண்ட கட்டிடத்தில் இவ்வமைப்பு இயங்கியது. பலர் அங்கு வேலை செய்து கொண்டிருந்தனர். என்னைக் கண்டதும் அன்போடு வரவேற்று விசாரித்தனர். அமைப்பின் செயலாளர் ஒரு அலுவலாக வெளியே சென்றுள்ளதாகவும் சற்றுப் பொறுக்குமாறும் வேண்டினர்.

சிறிது நேரத்தில் மொயீன் சமீனும் அங்கு வந்தார். அவருக்கும் இவ்வாறானதொரு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. நாங்கள் இலக்கியம் கதைக்க ஆரம்பித்தோம்.

செயலாளர் வந்து சேர்ந்தார். மிகவும் இங்கிதமான மனிதர். சித்ரால் பெரேரா அவரது பெயர். முன்னை நாள் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் என்பதையும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 'எத்த' பத்திரிகை ஆசிரியர் குழுவில் இருந்தவரென் பதையும் அவரூடாக அறிந்து கொண்டேன்.

நாங்கள் இருவரும் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, அவர்களோடு இணைந்து உழைக்கச் சம்மதித்தோம்.

1993ல் முதற் தடவையாகத் திறந்த சிறுகதை, கவிதைப் போட்டிகளையும் மாணவரிடையே கட்டுரை, பொது அறிவுப் போட்டிகளையும் நடாத்தினோம். சிங்கள மொழி மூலமும் இதே போட்டிகள் நடைபெற்றன.

மண்டபம் நிரம்பி வழியும் பிரமாண்டமான விழா ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ், முஸ்லிம், பாரம்பரிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. தமிழ்ச் சிறப்புப் பேச்சாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்நடைமுறை இடை நிற்காது தொடர்ந்தது. ஆண்டுதோறும் இளம் படைப்பாளிகளும்



பாடசாலை மாணவர்களும் நூற்றுக் கண க்கில் போட்டிகளில் கலந்து கொண்டனர். வருடா வருடம் போட்டியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

எம். எச். எம். சம்ஸ், டொமினிக் ஜீவா, அந்தனி ஜீவா, நீர்வை பொன்னையன், ஆர். சிவகுருநாதன், செ. யோகநாதன், எஸ். ஜே. யோகராஜா....... இப்படிப் பலர் சிறப்பு அதிதிகளாக, பேச்சாளர்களாகக் கலந்து பெருமைப்படுத்தினர்.

இந்த அமைப்புக் கூடாகக் களுத்துறை மாவட்ட எழுத்தாளர்களைப் பலதடவை ஒன்று கூட்டி முழுநாள் நிகழ்ச்சிகளை நடாத்தியிருக்கிறோம்.

'ஒரே கூரையின் கீழ்' என்ற நிகழ்ச்சி மூலம் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஒன்று கூட்டி, இலக்கியப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளோம்.

ஒரு தடவை இந்துக் கலாசாரத் திணை க்களத்தின் கீழ் தமிழ் இலக்கியக் குழு இயங்கும் போது, களுத்துறை மாவட்ட சிங்கள எழுத்தாளர்களோடு ஒரு சந்திப்பை ஏற்படுத்தி, இன உறவை வளர்க்க இலக்கி யத்தை எவ்வாறு பிரயோகிப்பதென ஆலோசித்தோம்.

களுத்துறை மாவட்ட உயர்வகுப்பு மாணவர்களைச் சிறுகதை ஆக்கத்துறை யில் ஊக்கப்படுத்துமுகமாக, களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியில் பயிற்சிப் பட்டறையொன்றை நடாத்தினோம். இதில் தேவகௌரி, சூரியகுமாரி போன்றவர்கள் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினர்.

ஜனசங்சதயவின் இலக்கிய நடவடிக் கைகளை காலரீதியில் மதிப்பீடு செய்யும் போது, களுத்துறை மாவட்டத் தமிழ்பேசும் மக்கள் கணிசமான பயனடைந்துள்ளதை அறியலாம். இந்த அளவுக்கு சேவையாற் றிய இலக்கிய அமைப்புக்கள் எதுவுமே இம் மாவட்டத்தில் கிடையாது.

இன்று தனது செயற்பாடுகளை விரிவு படுத்தி தேசிய மட்டத்தில் இலக்கியப் போட் டிகளையும் விழாக்களையும் நடாத்தி வரு கிறது.

இன மத ஐக்கியத்திற்கு அடையாளமாக ஜனசங்சதய என்று தலை நிமிர்ந்து நிற்கு மென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

<u>வாழும் நினைவுகள்: 30</u>

# விபவி- மாற்றுக் கலாசார மையம்

'விபவி' என்ற பெயரில் பிரபலமாகிய மாற்றுக் கலாசார மையம் 1990ல் நிறுவப் பட்டது. இதுவோர் அரச சார்பற்ற நிறுவ னமாகும்.

மொழி வேறுபாடின்றி பல்கலைக்கழக மட்டத்தைச் சேர்ந்தவர்களே பெரிய திட்டங்கள் போட்டு முதலில் செயற்பட ஆரம்பித்தார்கள்.

இதன் முக்கிய செயற்பாடாக இலக்கிய உலகின் ஆதரவைப் பெற்றது 'சுதந்திர இலக்கிய விழா' தான். சாகித்திய மண்ட லப் பரிசு போல் இதுவும் விருது, பணப்பரிசு என்பவற்றை உள்ளடக்கியது.

சிங்கள இலக்கியச் சூழலில் பெரும் கண்டனத்துக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாகி வந்த சாகித்திய மண்டலத்திற்கு இதுவொரு மாற்று நடவடிக்கையாகவே அமைந்ததெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு துறைசார்ந்த நூல் தேர்வு பற்றிய குழுநிலை அறிக்கை வாசிக்கப்படுவதும், அதுபற்றி சபையோர் கருத்து வெளிப்படுவதுமாக சூடானதும் சுவாரஸ்யமானதுமான நிகழ்வு முன்கூட்டியே நடைபெறும்.

ஒரே மேடையில் இரு மொழி எழுத்தாளர்களும் பரிசு பெற வேண்டும். இருமொழிச் சுவைஞர்களும் சபையில் ஒன்று கலக்க வேண்டுமென்பதும் விபவியின் விருப்பம் இருந்தும் தமிழ் எழுத்தாளர் பரிசுப் பட்டியல் வாசிக்கப்படும் போது பெரும்பாலும் எழுத்தாளர்களின் வரவு சாத்தியப் படவில்லை. யுத்த சூழல், போக்குவரத்து, புலம் பெயர்வு இப்படிப் பல அசௌகரியங்கள்.

ஏனோ தெரியவில்லை சில ஆண்டுகளுக்குப் பிறகு பல்கலைக்கழக மட்டத்தினர் ஒதுங்கிக் கொண்டனர். அதன் பிறகு இன்னொரு வட்டம். அவர்கள் ஓரம்போக இன்னொரு வட்டம். இப்படி வந்து போனார்கள். வந்து போனவர்கள் தத்தம் சார்பு நிலையைப் பலப்படுத்த எத்தனித்ததெல்லாம் அம்பலமாகியது. தமிழ் நூல் பரிசுத் தேர்வு கடும் குழப்பங்களை எதிர்கொண்டது.

காரசாரமான விவாதங்கள் எழுந்தன. மதிப்பீடு செய்தவர்களே சிலவேளை தீர்ப்பைப் பார்த்துத் திகைத்துப் போனார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் நடுவர்களின் தீர்ப்பை விபவி நிறைவேற்றுக் குழுவே நிராகரித்தது.

இந்தக் கட்டத்தில் தான் நீர்வை பொன்னையன் விபவி தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இவரின் வரவுக்குப் பின்பே சரிந்து போயிருந்த நம்பிக்கை மெல்ல மெல்லத் தலை நிமிர்ந்தது.

மாதாந்த இலக்கியக் கூட்டம், விபவி, செய்திமடல், நூல் வெளியீடுகள், இளம் எழுத்தாளர் போட்டி, சிறுகதை ஆக்கப்பட்டறை இப்படி விரிவடைந்தது. இதற்குப் பொருத்தமானவர்களையும் செயலாற்றுகைத் தகைமையுள்ளவர்களையும் அவர் தேடி அரவணைத்தார். இந்தக் கட்டத்திலேயே எனக்கும் விபவியோடு நெருக்கம் ஏற்பட்டது. அதன் மூலமாக விபவி முக்கியஸ்தரும் எழுத்தாளருமான ஜயதிலக கம்மல்லே வீரவின் தொடர்பும் ஏற்பட்டது.

விபவியின் ஏற்பாட்டில் இலக்கியப் பட்டறைகள் 1995 முதல் இடம் பெறலாயின. புத்தளம், சிலாபம், களுத்துறை, திக்குவல்லை, பலாங்கொடை போன்ற இடங்களுக்குப் பயணித்து பயிற்சிப் பட்டறைகள் நடாத்தினர்.

வெள்ளவத்தை பெண் கல்வி ஆய்வு நிலையத்திலேயே மாதாந்தக் கூட்டங்கள் இடம் பெற்றன. கருத்தரங்கு, புத்தக வெளியீடு, நூல் விமர்சனம், வீடியோ காட்சி, சினிமா ரசனை..... இப்படிப் பலதர நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இங்கு பங்கு கொள்வோரின் எண்ணிக்கை முக்கியமாகக் கொள்ளப்படவில்லை.

பத்தாண்டுக்கு மேலாக விபவி ஆற்றிய பணி தமிழ் கலை- இலக்கியத்துக்குப் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளது. இது தொடர்பான தேடற் பதிவுகள் இடம்பெறும் போது அதன் பெறுபேறு தெரியவரும். சிங்கள- தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொள்ளும் பொது நிகழ்வுகளை சில காலமாக விபவி மூலமாகத்தான் பார்க்க முடிந்தது.

நுகேகொடையில் இதன் தலைமையகம் காணப்பட்டது. முற்று முழுதாக அதன் செயற்பாடு இப்பொழுது அற்றுப் போய் விட்டது.

தமிழ்த் தரப்பினர் இவ்வாறான அமைப்புக்களைத் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முயல வேண்டும்.



## மனிதம்!

—வித்யாசன்

எங்கள் ஊரில்-
மழை பெய்தால்
உப்பு-
விளையும்.

எங்கள் ஊரில்
மாடுகள் வளர்ந்தால்
புற்கள்-
முளைக்கும்.

எங்கள் ஊரில்
கிணறுகள் வெட்டினால்
உப்பு-
கரிக்கும்.

எங்கள் ஊரில்
பனையின்-
பழம் உண்டால்
ஒருநாள் புளிக்கும்.

எங்கள் ஊரில்
தேங்காய் வாங்கினால்
இளநீர் கயர்க்கும்.

எங்கள் ஊரில்
கள்ளுக் குடித்தால்
நாளும் வெறிக்கும்

எங்கள் ஊரில்
பயிர்கள் வளர்ந்தால்
வெய்யிலில்
கருகும்.

எங்கள் ஊரில்
வரம்புகள் உயர்ந்தால்
கதிர்கள்
செழிக்கும்.

எங்கள் ஊரில்
மனிதம் வளர்ந்தால்
எல்லாம் இனிக்கும்.

---

## கடுகதி ஆலை

—பெரிய ஐங்கரன்

ஒரு நாள் வண்டு
ஒரு நாள் செண்டு
ஒரு நாள் சோலை
இயங்குகிறது ஆலை
இரவு பகலாய் வேலை.

எரி பொருட்களாய்
குருதியும், இறப்பும், வதந்தியும்!

களஞ்சியம் நிரம்பி வழிகிறது
மிளகாய்த் தூளால்
வேண்டிய இடங்களில்
வேண்டிய நேரங்களில்
வேண்டிய அளவிற்கு
கொடுப்பதற்கும் கொட்டுவதற்கும்

எந்நேரமும்
உயிரின் காதுகளைக் குடைகிறது
உணர்வுகள் அரைபடும் பேரோலம்!

மேலும் மேலும்
கடுகதியில் அரைபடுகின்றன
வெறும் வார்த்தைகளும்-
வார்த்தைகள் அற்ற
வெறும் கோலங்களும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுமே புரியலே உலகத்திலே....

-முருகபூபதி

சிரித்திரன் சிவஞானசுந்தரம், மக்கள் சிரிப்பதற்கும் சிந்திப்பதற்காகவும் அந்த இதழை நடத்தினார் என்பது இலங்கையில் அதன் வாசகர்கள் நன்கறிவார்கள்.

அதில் வெளியான பல சுவாரஸ்யமான நகைச்சுவைத் துணுக்குகளும் மகுடி கேள்வி-பதில் பகுதியும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம்மால் மறக்க முடியாதவை.

தமிழர்களை தட்டி எழுப்பிய பெரியோர்கள் யார்? என்ற கேள்விக்கு மகுடியின் பதில் இப்படி இருக்கும்:- அநுராதபுரத்தில் ரயிலேறும் சிங்களச் சகோதரர்கள்.

ஒரு கார்ட்டூன் நகைச்சுவைத் துணுக்கு இப்படி இருந்தது. ஒரு முதிய யாழ்ப்பாணத் தந்தை இவ்வாறு சொல்வர்:

"எனது மகளுக்கு ஓரிடத்தில் திருமண சம்பந்தம் பேசினேன். நாம் குறைந்த சாதி என்று வேண்டாம் என்றார்கள். இன்னுமொரு இடத்தில் வரன் கேட்டேன். மகளுக்கு படிப்பு போதாது என்றார்கள். இன்னுமொரு இடத்தில் கேட்டேன் சீதனம் போதாது என்ற தட்டிக் கழித்தார்கள். இன்னுமொரு இடத்தில் கேட்டேன் மகள் கறுப்பு, தங்களுக்கு அழகான சிவத்த பெண்தான் வேண்டும் என்றார்கள். இன்னுமொரு இடத்தில் கேட்டேன், மகளுக்கு செவ்வாய்க் குற்றம் என்றார்கள். இப்பொழுது எனது மகள் லண்டன் சீமையில் ஒரு வெள்ளைக்காரனை திருமணம் செய்து மகிழ்ச்சியோடு இருக்கிறாள்."

இந்தத் துணுக்கை வைத்து சிறந்த சிறுகதையை அல்லது ஒரு நாவலைக் கூட எழுத முடியும்.

ஊரில், இனம், சனம், காணி, பூமியை விட்டுவிட்டு அந்நிய தேசங்களுக்கு புலம் பெயர்ந்து நம்மவர்கள் வந்திருந்தாலும் தங்கள் அடையாளங்களை மட்டும் குறிப்பாக சாதி- பிரதேச பாகுபாடு சிந்தனைகளை விட்டுவிட்டு வரவில்லை என்பது கசப்பான உண்மையல்ல, சிரிப்பான உண்மை.

இந்த நாட்டுக்கு 18 வருடங்களுக்கு முன்னர் வந்த ஒரு தமிழ் குடும்பத்து பெண் பிள்ளைக்கு இலங்கையில் திருமணம் பேசினோம். அவுஸ்திரேலியாவுக்கு வரவிரும்பிய மணமகன் வீட்டார் சொன்னார்கள்: "தங்கள் மகன் ஒரு அக்கவுண்டன். அவருக்கு ஒரு டொக்டர் பெண்தான் பார்க்கின்றோம். உங்கள் பிள்ளை கணினி துறையில்தானே பட்டம் பெற்றவர். எங்களுக்கு வேண்டாம். டொக்டர் பெண்தான் வேண்டும்"



இந்தத் தகவலை அந்தப் பிள்ளையிடம் நான் சொன்னேன். "அப்படியா? அந்த மாப்பிள்ளைக்கு ஏதும் சுகவீனமா?" என்று வெகு சாதாரணமாகக் கேட்டாள்.

அவுஸ்திரேலியாவில் நீண்ட காலமாக வசிக்கும் ஒரு தமிழ் குடும்பத்து திருமணமாகாத இளைஞருக்கு, ஒரு டொக்டர் பெண்ணைப் பேசினேன். அதுவும் சரிவரவில்லை. ஏன் தெரியுமா?

அந்த இளைஞரின் பெற்றோர்கள் "டொக்டர் பெண் வேண்டாம்" என்றார்கள்.

"ஏன்?"

"டொக்டர் பெண்ணுக்கு அவ வேலை செய்யும் ஆஸ்பத்திரியில் இரவு நேர டியுட்டியும் வரலாம். குடும்பப் பொண்ணுக்கு அந்தத் தொழில் சரிப்பட்டு வராது."

பூபதி எழுத்தாளர் வேலையும் பார்த்துக் கொண்டு கலியாண புரோக்கர் வேலையும் பார்க்கிறானா? என்று மல்லிகை வாசகர்கள் யோசிக்கவும் கூடும்.

நான் என்ன யோசிக்கின்றேன் தெரியுமா? எனது இனிய எழுத்தாள நண்பர் வேல் அமுதன் இந்தத் தொழிலை எப்படி சகிப்புணர்வோடு (சமாளிக்கிறார்) செய்கிறார்?

நான் ஈழத்தமிழர்கள் சென்ற பல நாடுகளுடனும் தொடர்புகளை வைத்திருப்பதனாலும் சில வெகுஜன அமைப்புகளில் அங்கம் வகிப்பதனாலும் எனக்கு ஏராளமானவர்கள் அறிமுகமாகி இருப்பார்கள் என்ற எண்ணத்தில்தான் அவர்கள் தமது பிள்ளைகளுக்கு ஏதும் நல்ல இடத்தில் பாருங்கள் என்பார்கள்.

அவர்களிடம் ஒரு நிபந்தனையை விதிப்பேன். அதாவது கல்வி, குணம், தொழில் விசாரிப்பேன். ஆனால், சாதியைப் பற்றி மாத்திரம் கேட்க மாட்டேன்.

எனது இந்த நிபந்தனையை அவர்களினால் பெரும்பாலும் ஏற்கமுடியாது போய்விடும். அதன் பிறகு எங்காவது என்னை சந்தித்தாலும் திருமணப பேச்சை எடுக்கமாட்டார்கள். நானும் ஆளை விட்டால் போதும் என்று ஒதுங்கி விடுவேன்.

கனடாவிலிருக்கும் ஒரு முன்னணி எழுத்தாளர் இன்னும் 20 ஆண்டுகளில் இந்த சாதிப் பிரச்சினைகள் வெளிநாடுகளில் வதியும் ஈழத்தமிழர்களை விட்டகன்று விடும் என்று ஒரு வானொலிப்பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

இன்னும் 20 வருடங்களாவது வாழ்ந்து அந்த பொற்காலத்தை தரிசிக்க விரும்புகின்றேன்.

ஒரு இளைஞர் தன்னை புத்திசாலி என நினைத்துக்கொண்டு சொன்னார்:- "மணமகளின் சமீபத்திய படத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவவின் அம்மாவின் படத்தையும் கேட்டு வாங்கித் தாருங்கள்."

"எதற்கு அம்மாக்காரியின் படம்?" எனக் கேட்டேன்.

"மணமகளுக்கு வயது போனால் எப்படி இருப்பாள் என்பதை இப்போழுதே பார்த்துவிடலாம் அல்லவா."

அடடா '21 ஆம் நூற்றாண்டிலும் இப்படியும் எம்மவர்கள் சிந்திக்கின்றார்கள். சிரித்திரன் சிவஞானசுந்தரம் நான் அறிந்தவரையில் இந்தியாவில் படித்தவர் என்பது தெரியும். ஆனால், அவர் கடல் கடந்து எங்களைப்போன்று வெளிநாடுகளுக்கு, அதிலும் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு சென்றாரா என்பது தெரியாது.

அவர் இன்னும் சில காலம் புலம் பெயர்ந்தவர்களுடன் வந்து வாழ்ந்திருப்பாரேயானால். நிச்சயமாக சவாரித் தம்பரையும் சின்னக்குட்டியையும் மைனர் மச்சானையும் மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடிரனையும் தம்மோடு அழைத்துத்தான் வந்திருப்பார். அவர்கள் ஊடாக இந்த சீத்துவக் கேடுகளையும் பதிவு செய்திருப்பார்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. என்று முன்பு சொன்னார்கள். ஆனால், இந்த கணினி யுகத்தில் திருமணங்கள் தற்போது இன்ரநெட்டில்தான் நிச்சயமாகின்றன.

எனது அக்கா 1966 ஆம் ஆண்டு திருமணம் செய்தபோது மணவறையில் தான் மாப்பிள்ளையின் முகத்தை நாணிக் கொண்டு பார்த்தார்கள். முகமோ, குணமோ, அழகோ தெரியாமல் சந்தோசமாக கழுத்தை நீட்டினார்கள். இப்போது பேரப்பிள்ளைகளும் கண்டுவிட்டார்கள்.

காதல் திருமணங்களா பேசிச் செய்யும் திருமணங்களா இல்லறவாழ்வில் வெற்றி பெறும் என்று பட்டி மன்றம் கூட நடத்தலாம். இலங்கையில் ஒரு தமிழ் முன்னணி பத்திரிகையும் சினிமா பக்கத்தில் சினிமா கலைஞர்களுக்கு திருமணம் தேவையா? இல்லையா? என்ற தலைப்பில் வாசகர்களிடம் கருத்துக் கணிப்பு மேற்கொள்கிறது.

மக்கள் திலகம் கட்சி ஆரம்பித்த போது கட்சியில் சேருபவர்கள் இரட்டை இலைச் சின்னத்தை அல்லது அ.தி.மு.க என பச்சை குத்திக் கொள்ளச் சொன்னார். கட்சி மாறினாலும் மாறுபவர்களின் மனச்சாட்சியை அந்தப் பச்சை உறுத்தும் என்ற எண்ணத்தில் அவர் அந்த நிபந்தனையை அன்று விதித்திருக்கக்கூடும்.

இப்பொழுது நடிகை நயன்தாரா தனது காதலன் பிரபுதேவாவின் பெயரை பச்சை குத்திக்கொண்டாராம். தமிழ் மணமக்களும் பரஸ்பரம் பெயர்களை பச்சை குத்திக் கொண்டால் விவாகரத்துக்களை தவிர்க்கலாம் என்று மில்லியன் டொலர் பெறுமதியான ஒரு யோசனையை இங்கே நண்பர் ஒருவர் சொல்கிறார்.



# ஒரு வேதை விருட்சமும், சில விபரீத முடிவுகளும்

–ஆனந்தி

நாதியற்றுத் தெருவுக்கே வந்துவிட்ட, தடம் புரண்டு போன ஒரு தறுதலைச் சமூகத்தின் பெயர் சொல்ல வந்த முதல் வாரிசு போல போதை ஏறித் தள்ளாடிச் சரிந்து விழும் ஒரு பேதையாக அப்போது ஆஷா அவன் காலடியில் கிடந்தாள். திருமண முதல் இரவன்றே கேசவன் முகம் கொடுத்து, எதிர் கொள்ள நேர்ந்த மிகவும் கசப்பான ஒரு கொடிய அனுபவமாய் அது அவனை வதைத்தது. தான் வாழ்கின்ற, இனியும் வாழ விரும்புகின்ற தமிழ்ப் பண்புநிலை தவறாத புனிதமான, சத்திய வாழ்க்கையின் மாசற்ற பெருமைகளுக்கே ஒரு களங்கம் போல, வந்து சேர்ந்த அவளைத் தனது மனைவியென்று ஏற்க முன் வந்த தன் இயலாமையை எண்ணி இப்போது அவன் தன்னையே நொந்து கொண்டான்.

தன்னைக் கஷ்டப்பட்டு ஆளாக்கிய அம்மாவை மனம் குளிர வைக்க வேண்டுமென்ற ஒரே ஒரு காரணத்துக்காகவே ஆஷாவை மணக்க அவன் சம்மதித்தான். சிறு வயதிலிருந்தே, லண்டனில் பணம் காய்க்கும் மரத்தோடு மட்டுமே ஒன்றுபட்டு, அதுவே வாழ்வாக வாழ நேர்ந்ததால், அவளது சுயம் விட்டுப் போன நடத்தைகள், அசல் வெள்ளைக்காரத் தனத்தோடு, அவன் கண்முன்னாலேயே, கொடி கட்டிப் பறப்பதாய் அவன் மிகவும் மனவேதனையோடு நினைவு கூர்ந்தான். அப்படி அவளையறியாமலே, உச்சத்தில் பறக்க நேர்ந்த, கண்மூடித்தனமான அந்த மேலோட்டமான கொடியின் அசுரகதி சுழற்சிக்குப் பின்னால் பரிதாபகரமாக மறைந்து, உயிர்விட்டுக் கிடக்கும் அவளே அறியாமல் போன உண்மையான பெருமைகளை எண்ணித் தானே தீக்குளித்துக் கருகுவதாய் இப்போது அவன் உணர்ந்தான். கறைத் தீட்டுப் படியாத ஒரு புனித உறவாக அவனுக்கு ஆஷாவுடன், ஏற்பட இருந்த ஆத்மார்த்தமான உணர்வும் உடலும் சார்ந்த இனிய அனுபவங்கள் பொருளற்றுப் போன, களை இழந்த வெறும் வரட்டு நாடகமாகவே ஒப்புக்கு நடந்தேறியது. இப்படி நடந்தேறிய இன்னும் நடக்கின்ற அவன் வாழ்வோடு தவிர்க்க முடியாமலே வந்து பொருந்திவிட்ட இந்த உயிர் மரத்து வெறுமை கொண்டிருக்கிற மனம் ஒழிந்து போன வரட்டு அனுபவங்களும் அதைத் தொடர்ந்து வரப் போகிற மிகப் பெரிய சவால் போன்றதொரு வாழ்க்கையும் நிலையும் தனக்கு ஏற்பட்ட ஒரு சாபமாய் தன்னுடனேயே முடிந்து போக வேண்டுமென்று அவன் பிரார்த்தனை செய்தான்.

அம்மாவோ இதையெல்லாம் கண்கூடாகக் கண்ட பிறகு, ஆஷாவை முற்று முழுதாகக் கைகழுவி விலக்கிவிட வேண்டுமென்றே அவனுக்கு யோசனை கூறிய போதிலும், அவன் அதை ஏற்க மறுத்துவிட்டான். சுத்தமான ஒரு தமிழ் வாலிபனைத் தேடி ஆஷாவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் குடும்பத்தாரும் வலை விரித்த போதே, அம்மாவுக்கு இது உறைத்திருக்க வேண்டும். உள்ளூரிலேயே சில சமயம் நன்கு விசாரித்து நடந்தேறுகின்ற திருமணங்கள் சரிவருவதில்லை. இப்படி வரன் தேடி, வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களைத் தீக்குளிக்க வைத்துத்தான், புடம் போட்டுப் பார்க்க வேண்டிய நிலைமையில் அம்மா தான் என்ன செய்வாள்?

பணம் காய்க்கும் மரமொன்றையே பெரிதாக நம்பி, கையில் விசா மட்டுமே கிடைத்தால் போதுமென்ற அவசரபுத்தி அவளுக்கு. இதற்கு கேசவனைப் பலியாக்கி விட்டு, போட்ட விலங்கை அறுத்து விடு என்று சொன்னால் முடிகிற காரியமா? அப்படி அம்மா நினைப்பதற்கு அவனது இந்தக் கல்யாணம் வெறும் விளையாட்டாக நடந்தேறிய ஒன்றல்ல!

மந்திர வேத கோஷங்கள் ஒலிக்க சத்திய நெருப்பென்ற அக்கினி சாட்சியாக, அவனுக்கும் ஆஷாவுக்குமிடையிலான அந்தத் திருமண வேள்வி நடந்தேறியதே. ஆஷாவை இப்படி இனம் கண்டபின் அவளைத் துறந்து விட வேண்டுமென்று மனதால் நினைப்பது கூடப் பாவமென்று அவன் கருதினான்.

இனியென்ன, ஆஷாவுடன் அவன் கப்பலேறக் கைக்கு விசாவும் வந்துவிட்டது. ஒரு காசு மரத்தைத் தேடி, அவன் ஆஷாவுடன் சேர்ந்து லண்டனுக்குப் போவதற்காகக் கால் முளைத்து, இறக்கை விரித்துக் கப்பலில் பறக்கப் போகிறான். புறப்படும் போது, அம்மாவைத்தான் முகம் கொண்டு பார்க்க முடியவில்லை. இப்படிப் பறக்க எழுந்த அவனின் சிறகுகள், இடையில் கருகிப் போகாமல் நல்ல பிடி பிழைக்குமா என்றுதான் அவளுக்குப் புரியவில்லை. அது பற்றி அவள் மனம் குழம்பி யோசித்துக் கொண்டிருந்த போது, அவளை ஆறுதல்படுத்தி அவன் கூறினான்.

''அம்மா, கவலையை விடுங்கோ. எல்லாம் நல்லபடி நடக்கும். எனது சகவாசம் இவளையும் மாற்றும். பொறுத்திருந்து பார்ப்போம். தங்கச்சிமாரைக் கவனமாகப் பாருங்கோ. நான் காசு அனுப்புகிறன்''

அதற்குப் பிறகு அவள் சிரித்துக் கொண்டே, மனம் நிறைந்த ஆசியுடன் அவர்களை வழியனுப்பி வைத்தாள். அப்போது அவனின் சகோதரிகளிருவரும் அவளருகே முகம் களை ஏறி நின்று கொண்டிருந்தனர். அவன் அனுப்பப் போகிற அந்தப் பணமென்ற மாயவிளக்குக் கைக்கு வந்தால், அவர்களும் ஒருநாள் இப்படித்தான் கப்பல் ஏறக்கூடும். அது விரைவில் வருமென்று அவர்கள் நம்பினார்கள். நம்பிக்கைதான் வாழ்க்கையென்றாலும், அது மெய்யாகிவிடவில்லை. கேசவன் அவர்களை விட்டுப் போனபின் அவன் மீது அவர்கள் கொண்ட அந்த நம்பிக்கைக் கவசமே அவர்களைக் காக்கும் ஒரு வரம் போலானது.

அவன் ஆஷாவோடு லண்டனுக்கு வந்து சேர்ந்த பிறகு தான் புரிந்தது. இது காசு மரம் காய்க்கும் இடமல்ல. எல்லாம் ஒழிந்து போன, ஒரு மொட்டை மரத்தினடியின் கீழ் தான் வந்திருப்பதாய் அவன் பெரும் மனவேதனையோடு நினைவு கூர்ந்தான். ஆஷாவை மணக்க நேர்ந்ததால் இனி இது மாறாது என்று தோன்றியது. கொழும்பில் தாய் மண்ணோடு இருந்த வரைக்கும் தான் அவன் சாகாவரப் பெருமைகளுடன் கூடிய ஒரு வேத விருட்ஷம். அந்த மரத்தினடியில் அப்படி வாழ்ந்த நிலையில் கவலைகளேதுமற்ற தெளிந்த



நீரோடை மாதிரி அவன் வாழ்க்கை இருந்ததே!

அவன் ஏ. எல் மட்டுமே படித்திருந்தாலும், நல்ல குரல் வளமும், பேச்சுத் திறனும் இருந்ததால், தனியார் வானொலி நிலையமொன்றில் அறிவிப்பாளனாக அவன் வேலை பார்த்து வந்தான். வானொலியில் அவன் குரல் கணீரென்று கம்பீரமாக ஒலிப்பதைக் கேட்பதற்கென்றே அவனுக்கு நிறைய ரசிகர்கள் கூட, இருந்தார்கள். அதிலும் கூடுதலாகப் பெண் ரசிகைகளே இருந்ததால், அவர்களோடு சலிக்காமல் போனில் உரையாடுவதே ஒரு சுவையான பொழுது போக்கு. அவர்களில் சிலர் அவன் மீது கிறுக்குத்தனமாகக் காதல் வசப்பட்டு அவனுக்குக் கடிதம் கூடப் போடுவதுண்டு. அவற்றுக்கு அவன் பதில் போடுவதில்லை. நீரில் எழுதிய எழுத்தாகவே அவை அவன் மனதில் நிற்காமல் கரைந்து போய்விடும்.

அம்மாவுடனும், உடன் பிறப்புகளுடனுமான அந்த வாழ்க்கையே அவனுக்கொரு தவம் மாதிரி. அதைப் பங்கமின்றி நிறைவேற்றவே அவன் அரை மனதோடு லண்டன் வந்து சேர்ந்தான். அங்கு வந்த பிறகு தான் புரிந்தது, இது வெறும் மொட்டை மரம் தானென்று. ஆஷாவின் தடம் புரண்டு போன, சகதி குளித்து எழும் நடத்தைகளைப் பார்த்த பிறகே அவனுக்கு அது ஒரு வெட்ட வெளிச்ச சூனிய ஞானோதயமாக மனதில் உறைத்தது. அது அவனுக்கு மட்டுமே ஏற்படக் கூடிய ஒன்றாய் மனதைக் கூறு போட்டுப் பிளந்து கொண்டிருப்பதாய் அவன் வேதனை கொண்டான். அவன் எதிர்பார்த்து வந்தபடி, அம்மாவுக்குப் பணம் அனுப்புவதற்கு வசதியாக ஏற்ற வேலையும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அப்படித்தான் ஓரிரண்டு கிடைத்தாலும் அவை கூடத் தற்காலிகமானதாகவே கை நழுவிப் போய்விடுகிற நிலைமைதான்.

ஆஷா இருக்கிற நிலைமையில், அது கூட முக்கியமில்லையென்று அவனுக்குப் படும். அவள் தான் தினம் வேலைக்குப் போய் வருகிறாளே. இது உல்லாசமாக அவள் பொழுதைக் கழிக்க, அவளுக்காக வளர்த்த மாமன் தேடி வைத்த திரண்ட சொத்தே ஒரு தலைமுறைக்குப் போதும். இந்தத் திரண்ட சொத்தின் நடுவில், அவளே குடி முழுகிப் போகிற நிலைமைதான்.

அவள் இப்படியெல்லாம் ஆட்டம் போடச் சொந்தமாகவே ஆடம்பரக் கார், வீடு எல்லாம் உண்டு. இருந்தும் என்ன...? இருபது வயது கூட நிரம்பாத இந்தச் சின்னஞ்சிறு பேதைப் பெண், இப்போது வெறும் செல்லாக் காசு தான். உடல் உளுத்துப் புரையோடிச் செல்லரித்துப் போகுமளவுக்கு, அவளின் குடி போதை, வெறியாட்டம் அவன் கண்முன்னாலேயே அரங்கேறிக் களை கட்டி நிற்கும். அவள் எப்படிக் கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போனால் தானென்ன? லண்டன் மண்ணில் பணமென்ற மாயவிளக்கினால் ஒளி கொண்டு பிரகாசிக்கிற ஒரு துருவ நட்சத்திரம் மாதிரி அவள் இருப்பதாய் உலகம் நம்புகிறது. ஆனால், அவன் அங்கே கண்டது என்ன? வெறும் மொட்டை மரம்தானென்று அவன் சொன்னால், இப்படிச் சொல்கிற உலகம் அவனை அடித்தே கொன்று விடும். அதனால் பேச்சற்ற மௌனநிலையே சிறந்ததென்று நம்பி, அவன் மொட்டை மரத்தினடியில் அதுவே தவமென்று கிடந்தான். இது கூட, ஆஷாவின் மனம் திருந்தி நல் மாற்றங்களின் பொருட்டு அவன் செய்கின்ற தவம். அது கைகூடி வருமா என்று தெரியவில்லை. காலம் பதில் சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவன் காத்திருக்கிறான். காலம் மாறுமென்று காத்திருந்த அவனுக்குத் தான் நெஞ்சு முழுக்க வலி. அதன் உச் சக்கட்ட வேதனையின் சுவடு கூடப் படாத மறுதுருவத்தில் இருப்பது போலவே அவ ளின் உயிர் ஒளி விட்டுப் போன துருப் பிடித்த நடத்தைகளும், அதன் நிலை குலைய வைக்கிற குரூர இருளும், இந்த இருள் விடுபடாத நிலையிலேயே மீண்டும் ஒருநாள் அவள் அலங்கோலமாக அவ னின் காலடிக்கு அவசரமாகவும் அழுகை யோடும் வந்து சேர்ந்தாள். இப்படி ஒருநா ளும் அவள் வந்ததேயில்லை.

இன்று அதிசயமாக அவன் நித்திய இருப்பாக வாழ்கிற களை இழந்த அவனின் அந்த மொட்டை மரத்தினடியின் கீழ் அவ ளும். என்ன நடந்தது அவளுக்கு? அவளின் அழுகைச் சத்தம் கேட்டு, வழக்கமான மோனநிலை கலைந்து திடுக்கிட்டு விழி த்து அவன் பார்த்த போது, அவள் உயிர் மரத்துப் போன வெறும் நடைப்பிணமாக நிலைகுலைந்து எதிரே தள்ளாடிச் சரியும் நிழற் கோலமாக எதிரே நின்று கொண்டி ருந்தாள். அப்படி வந்து நிற்கிற அவளை நேர் கொண்டு பார்க்க மனம் வராமல், எங்கோ மனம் சஞ்சரித்துப் பார்த்தவாறே அவசர தொனியில் குரல் பதற அவன் கேட்டான்.

"என்ன நடந்தது ஆஷா? ஏன் அழுகி றாய், இப்ப?"

"நான் சாகப் போறன்! என்ரை கதை முடிஞ்சு போச்சு.... இனி எதுக்கு நான் இருக்க வேணும்?"

அவனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அவள் என்ன கூறுகிறாளென்று புரிய வில்லை. அவள் வழியில் மிகவும் மோச மாக ஏதோ நடந்திருக்க வேண்டுமென்று அவன் நம்பினான். அவள் வழியில் தவிர் க்க முடியாமல் நேர்கிற இந்தத் தவறுகள் அவளுக்கொன்றும் புதிய அனுபவங்களல் லவே. அதற்காகப் போய் அவள் சாவதா? அப்படிச் சாவதை விட, இப்பாவங்களிலி ருந்து அவள் விடுபட்டு விடுதலையானாலே போதும். அவன் பெரிதாக நம்பி வந்த விருட் சமும் தழைக்கும். அதை வெளிப்படை யாக மனம் திறந்து அவளிடம் கூற, இதுவே கடைசித் தருணமென்று அவனுக்குப் பட் டது. அதை நினைத்து ஆவேசம் கொண்ட வன் போல், அவளின் கைகளை ஸ்பரி சித்து, அன்போடு தடவி விட்டவாறே நெகிழ் ந்த குரலில் அவன் கூறினான்.

"ஆஷா! சாவு உனக்குப் புதிசில்ல. எப்பவோ ஒருநாள் நான் காணாதா நாளில் நீ உன் சுயமிழ்ந்து அடியோடு செத்துப் போனவள் தானே நீ. இப்படிச் செத்துவிட்ட உனக்கு, உயிர் கொடுக்கவே நான் இங்கு வந்து சேர்ந்த தவமெல்லாம். இப்படிக் கழி கிற என்னுடைய ஒவ்வொரு பொழுதும் வீணாகவே கழிந்து போனதை எண்ணி, இப்ப வருத்தப்பட்டுப் பயனில்லை. நீ இனி ஒன்றும் புதிதாகச் சாக வேண்டியதில்லை. எப்பவோ செத்துப் போன உன்னைப் பிழைக்க வைக்கிற மருந்தாக நானிருப்பன். தயவு செய்து அதை மறந்து விடு."

முற்றாகவே உணர்வுகள் மரத்துப் போன நிலையில், அவன் கூறுகிற அந்த வேதம் கூட, அவளுக்குப் பிடிபடவில்லை. அவளின் தீராத நோய்க்குத் தெய்வீக மருந் தளித்துக் காப்பாற்றுகிற ஒரு கடவுளாகவே அவன் இருந்துவிட்டுப் போகட்டும். ஒன்று திரண்ட காசுக் குவியலே கடவுளென்று நம் பிச் சோரம் போய்விட்ட அவள் கண்களு க்கு இனிக் கடவுளாவது, பூதமாவது. அவன் சாட்சியாக இருக்க உயிர்விடுவதே



மேல் என்று நம்பினாள். அடுத்த கணமே அவள் அங்கு நிற்கவில்லை. ஒரே பாய்ச்ச லாய்ப் பாய்ந்து, அவள் பல்கனிச் சுவரேறி உயரத்தில் இருந்து தரையில் குதித்து விழும் போது அதைத் தடுப்பதற்கு அவன் பின்னால் ஓடி வந்து தடுத்தும், பிரயோசன மில்லாமல் போய்விட்டது. இந்தப் பரிதாபச் சாவை எண்ணி ஊரே கூடி அழும் என்று அவனால் நம்பமுடியவில்லை.

அவளது இந்தப் பரிதாபச் சாவை, நேரில் கண்ட பிறகு அதை லேசில் மறந்து போகக் கூடிய ஒரு சாதாரண சம்பவமாக எண்ணி, மறந்து விட அவனால் முடிய வில்லை. அவளை நல்லபடி காப்பாற்றி, வாழ வைக்க முடியாமல் போன, தனது இயலாமையை எண்ணி அவன் தன் னையே நொந்து கொண்டான். அவளது இந்த விபரீத மரணத்தையொட்டி, பொலிஸ் விசாரணையுடன் கூடிய கெடுபிடியெல்லாம் முடிந்து, அவளது தகனக் கிரிகைகளைத் தானே முன்னின்று நடத்திவிட்டுச் சூனிய மாகிப் போன அந்த மொட்டை மர இருப் புலக நிழலை விட்டு, அவன் வெளியே வர வெகுநாள் பிடித்தது.

அதன் பிறகு, லண்டனில் இருக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. பிறந்த மண்ணே கதியென்று வெறும் கையோடு அவன் திரும்பி வந்ததில் அம்மாவுக்குப் பெரும் அதிர்ச்சிதான். அதை வெளிக் காட் டாமலே, போலியாகச் சிரித்தபடி, அவனை வாசலில் கண்டவுடன் அவள் கேட்ட முதல் கேள்வி இதுதான்.

"என்ன தம்பி, சொல்லாமல் கொள் ளாமல் வந்திட்டாய்? ஆஷா எங்கை, அவ ளையும் கூட்டி வந்திருக்கலாம் தானே?"

அதற்கு அவன் கவலை மாறாமலே, மனம் நிம்மதியிழந்து சோகமாகக் கூறினான்.

"அம்மா! காசு மரம் அவளை விழுங்கிப் போட்டுது என்று சொன்னால், நீங்கள் நம்ப மாட்டியள், இது தான் உண்மை. அவள் இப்படிச் செத்தழிந்து போன பாவத்தை, நேரிலே பார்க்க நேர்ந்த பாவக் கறை மட்டும்தான். ஓர் அழியாத கறையயாக என் னோடு ஒட்டிக் கொண்டிருக்கு. இந்தக் கறை நீங்கி, அவளைக் கங்கை குளிக்க வைத்துப் புனிதமாக்கவே விரும்பினேன். எல்லாம் வீணாய் போச்சு. காசு மரம் காய் க்குமென்று நம்பி, ஒரு மொட்டை மரத் தையே காண நேர்ந்த தோஷம் தான். இப்ப என்னிடம் மிஞ்சியிருக்கு!" காசு மரம் தான் வழக்கமான பாஷை, மனிதரெல் லாம் தேடும் இலக்கு. அப்படியிருக்க இதென்ன புதுவேதம் அவன் வாயிலிருந்து.

அப்படியான பிறகு, அவன் தனது உயிராகவே எண்ணிப் பெரிதுபடுத்தி, உணர்ச்சி ஏறிப் பேச்சிழந்த அந்த வேத விருட்சமென்ற புனித இருப்பு நிலையும் வியாபகமான அதன் தெய்வீக ஒளியும், அவன் கண்களில் படாமலே இருள் மூடி மறைந்து போயின. அதன் சாசுவதப் பெரு மைகள் கொண்ட நிழல் கூடப் படாத மறு துருவத்தில் இலைகள் உதிர்ந்து கருகிப் போன வெறும் மொட்டை மரமாகத்தான் எங்கள் மனிதர்களுடைய வாழ்க்கை நிழல் கொண்டு வெறிச்சோடிக் கிடப்பதை அவள் என்றுதான் அறிந்து கொள்ளப் போகிறாள்? அவள் போன்று கண்டதே காட்சி கொண் டதே கோலமென்று ஓடி இப்படிச் சகதி குளித்தே வாழ்ந்து, பெருமையிழந்து நிற் கும் மனிதர்களைப் பொறுத்தவரை மரமாவது மண்ணாவது? அவன் கண்களு க்கு மட்டும் தான், வானளாவ நெடிதுயர்ந்து நிற்கும் அந்த வேத விருட்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

நீங்கள் கணக்கு விஷயத்தில் மிகவும் தவறு செய்வதாக எனக்குப் புலப்படுகிறது. பண வரவு என்பது முக்கியமான ஒரு சமாச்சாரம். செலவும் அப்படித்தான். அச்சிடப்பட்ட புத்தகங்கள் ஒழுங்காக விற்கப்பட்டு பணமும் வர வேண்டும். நீங்கள் அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை. சந்திப்போர்க்கெல்லாம் புத்தகங்களை இலவசமாகக் கொடுக்கிறீர்கள். முத்திரை செலவு அனுப்பினால், புத்தகம் இலவசம். இவை தவறான கொள்கைகள். இலவசமாகப் பெறுபவன் அதன் பெறுமதியை உணரமாட்டான். இனிமேல் எக்கணக்கைக் கொண்டும் எவருக்கேனும் மல்லிகையை இலவசமாகக் கொடுக்க வேண்டாம். இனியாவது உங்கள் கணக்கு வழக்குகளை மகன் திலீபனிடம் ஒப்படைக்கலாம். ஏற்கனவே ஒரு Lab பை அவர் நடத்துகிறார். இனிவரும் காலத்தில் மல்லிகை நடத்தப் போகிறவரும், அவரேதான். எனவே இப்பொழுதிருந்தே அவருடைய திறமையை உபயோகித்து எழுத்துத்துறையில் மேலும் பிரகாசிக்கலாம். இனிவரும் 2010 ஆம் ஆண்டு மலர் விஷயத்திலாவது, திலீபனைக் கேட்டு வெற்றிகரமாகப் பழக்கவும். உங்களில் எனக்கு உள்ள அபிமானத்தாலும் உரிமையாலும் இதைச் சொல்லுகிறேன்.

**எஸ். ஆர். பாலச்சந்திரன். வெள்ளவத்தை.**

மல்லிகையைத் தொடர்ந்து படிக்கும் சந்தர்ப்பம் கிட்டுகிறது. மல்லிகை ஈழத்து இலக்கிய செல்நெறிக்குத் தொடர்ந்து மணம் பரப்ப வருவது மகிழ்ச்சி, மல்லிகையில் வருகின்ற கவிதை, கட்டுரை, சிறுகதை உள்ளிட்ட அனைத்துமே அருமை. படைப்பாளிகளுக்கும், படிப்பாளிகளுக்கும் நல்ல இலக்கிய விருந்து தூண்டில்.

கடந்த மாதம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 'தமிழ் பேசும் முஸ்லிம்களின் மொழி, பண்பாடு, சமூகப் பிரச்சினைகள்' எனும் தலைப்பில் மூன்று நாள் சர்வதேச மாநாடு ஒன்றை வெற்றிகரமாக நடாத்தியது. இதனை ஓர் பதிவுக்காகக் குறிப்பிடுகிறேன்.

45வது ஆண்டு மலரை வரவேற்கக் காத்திருக்கிறேன்.

**எப். சமீனா. ஒலுவில்.**

மல்லிகையின் 45-வது ஆண்டுமலர் தயாரிப்பில் அப்படியே மூழ்கிப் போயிருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியாததல்ல.

கடந்த இரண்டு மாதங்களாக வெளிவந்த மல்லிகை இதழ்களைப் பார்த்துப் பார்த்து, நான் அப்படியே பூரித்துப் போய்விட்டேன். அத்தனை அழகாகவும், வடிவக் கவர்ச்சியாகவும், உள்ளடக்க நேர்த்தியாகவும் இருந்தன, இவ்விரு மாத இதழ்களும்.

இளந் தலைமுறையினரை மல்லிகையில் எழுதத் தூண்டுகள். காரணம் இன்றைய இளவயதினரில் பலர், ஆக்கபூர்வமான ஊக்க உணர்ச்சியுடன் இலக்கிய உலகில் தலை காட்ட முனைந்துள்ளனர்.



அட்டைப் படப் பிரமுகர்களை எப்படித் தான் தேர்ந்தெடுக்கிறீர்களோ, தெரியவில்லை! ஆச்சரியமாக இருக்கின்றது. உண்மையாகவே மல்லிகை தமிழ் மொழியில் வெளிவந்த போதிலும் கூட, அது ஒரு பூரண தேசிய இலக்கியச் சஞ்சிகை என்றே துணிந்து கூறலாம்.

மல்லிகைக்கு ஒரு தடவை வந்து போக, மனசில் கொள்ளை ஆசை. உங்களையும் ஒரு தடவை நேரில் பார்த்துப் பேசியதாகவும் இருக்குமே.

இப்போதைக்குக் கொழும்பு வந்து போகச் சாத்தியம் இல்லை. இருந்தாலும், மல்லிகை விழாவொன்றில் அவசியம் கலந்து கொள்ளக் காத்திருக்கின்றேன்.

ஒன்றை மனசார நம்புங்கள். ஆயிரம் பேர் ஆயிரம் தான் சொல்லட்டுமே! எங்களைப் போன்ற இளந் தலைமுறையினர், ஆழமாகச் சிந்திக்கத் தெரிந்த புதுப் பரம்பரையினர் உங்களது எழுத்தூக்கப் பணியில் பக்கம் பக்கமாக வரிசை கட்டி நிற்கின்றோம் என்பதையும் உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

நாற்பத்தைந்தாவது ஆண்டு மலர் வெளிவரவுள்ளது. இத்தனை ஆண்டுக் காலமாக ஒரு தனிமனித நிறுவனம் ஓர் இலக்கியச் சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதே ஒரு பெரும் இலக்கியச் சாதனைதான்!- அதிலும், இந்த யுத்த கால கட்டச் சூழ்நிலையில், இடம் பெயர்ந்தும் இலக்கிய இதழை வெளியிட்டு வருவது மிகப் பெரும் சாதனையே!

**எஸ். இளம்பூரணி. கொக்குவில்.**

மல்லிகைக்கு நீண்டதொரு கடிதம் எழுத வேண்டும், எழுத வேண்டும் என நீண்ட நாளாகவே யோசித்துக் கொண்டிருந்தேன்.

அந்த நீண்ட நாளைய இலக்கிய ஆவல் இன்று தான் நிறைவேறியுள்ளது. இது எனக்கொரு மன ஆறுதலைத் தருகின்றது.

முப்பது வருஷங்களுக்கு மேலதிகமாகவே நான் மல்லிகையின் நிரந்தர வாசகர்களில் ஒருவன். அதே சமயம் சில இதழ்கள் கையில் கிடைக்காமல் தேடித் தேடி அலைந்து திரிந்து, எப்படியோ மல்லிகை இதழைத் தேடிக் கண்டடைந்து ஆத்ம திருப்தி கொள்பவன்.

உங்களிடம் எனக்குப் பிடித்த மாபெரும் குணம் வைராவித்தனம். எதற்குமே வளைந்து கொடுக்காத அசுர பிடிவாதக் குணம். நிச்சயமாக ஒரு மக்கள் கலைஞனுக்கு இப்படி ஒரு குணம் இயல்பாக அமைவதே ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்தக் கடிதத்தில் நான் குறிப்பிட்டுக் காட்டக் கூடிய செய்தி என்னவென்றால் இந்த வட பிரதேசத்தில் எந்தப் புத்தகக் கடைகளிலுமே மல்லிகை மாதா மாதம் ஒழுங்காக எங்களுக்குக் கிடைப்பதேயில்லை! மொத்தமாகச் சந்தா செலுத்திப் பெற எங்கள் பொருளாதாரத்தில் வக்கேதும் இல்லை. மாதா மாதமென்றால் வாங்கிப் படிக்க அது வசதியாக இருக்கும்.

நிறைய இளம் இலக்கிய நண்பர்கள் எனது மனநிலையில் தான் இருந்து வருகின்றனர். எனவே இந்த இதழ் விற்பனைப் பரிமாற்றத்திற்குத் தக்கதொரு ஏற்பாடுகளைச் செய்து தாருங்கள். இது எதிர்கால இளந் தலைமுறையினருக்குப் பெரிதும் உதவும்.

யாழ்ப்பாணத்து மண்ணில் இருந்து நடப்பட்டது தானே, மல்லிகைச் செடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இன்று இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டு, பலபல சிரமங்களையும் பட்டுக் கொண்டு, வாழ்ந்து வரும் எங்களைப் போன்றவர்களுக்கு உங்களது வருகையும் தொடர்பும் புதுப் புது ஊக்கத்தையும் தரு மல்லவா?

நான் இதை எழுதும் பொழுது அன்று நீங்கள் மல்லிகையை அச்சடித்து வெளி யிடப்பட்ட கஷ்டங்களையும் பாரிய சிரமங் களையும் நான் நினைத்துப் பார்க்கத்தான் செய்கின்றேன். கடைசிக் காலத்தில் பேப் பர் கிடைக்காமல் பள்ளிக் கூடக் கொப்பி யில் அல்லவா மல்லிகை அச்சடித்து வெளிவந்தது! இதுவும் எனக்குத் தெரியும். மல்லிகையின் முழு வரலாறுமே எனக்கு நன்கு தெரியும். இன்று சூழ்நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகின்றது. இந்தக் கால கட்டத்திலாவது எங்களைத் தேடி ஒருதடவை வந்து போங்கள்.

நல்லூர். ஆர். சத்தியநேசன்.

கடிதம் எழுதுவதே ஒரு கலை.

அதிலும், பத்திரிகைகளுக்குப் பொது வாகப் கடிதம் எழுதமுனைவது தனிக் கலை. மேலும் மல்லிகை போன்ற இலக்கி யத் தீநாக்குள்ள மாதச் சஞ்சிகைக்குக் கடிதம் எழுதுவதென்பது- என்னென்றே சொல்லத் தெரியவில்லை!

இலங்கையில் ஒரு புதிய இலக்கிய நடைமுறையை இதுவரை கையாண்டு வந்திருக்கின்றது, மல்லிகை!

இந்த மண்ணில் வேரூன்றித் துளிர்த் துப் பின் சடைத்துத் பெருத்த மா மரக்கன் றைப் போன்ற கனவான்களையும் கலை ஞர்களையும் ஆண்டாண்டுகளாக இதழில் அட்டைப் படத்தில் பதிந்து இந்த மண்ணு க்கே அடையாளம் காட்டி வந்திருக்கிறீர்கள்.

அந்த உருவப் படத் தகைமையாளர் கள் இன்று வரை எத்தனை பேர்கள் மல் லிகையின் இலக்கிய நேர்மை மீது நேசங் கொண்டு, இயங்கி வருகின்றார்களோ? நாமறியோம்.

அட்டைப் படப் பதிவு மாத்திரமல்ல, அட்டையில் பதியப்பட்டவர்களின் தொகு ப்பு நூல்களாக இதுவரை அன்றிலிருந்து இன்றுவரை நான்கு புத்தகத் தொகுப் புக்களையும் வெளியிட்டுள்ளீர்கள்.

இது ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனித் தன்மை வாய்ந்தது!

சம்பந்தப்பட்ட அட்டைப் படப் பதிவாளர் பலருக்கு அதனது வரலாற்றுப் பெறுமதி இன்று விளங்காமல் கூட, இருக்கலாம்.

எப்பவோ நாளை என்றொரு நாள் வந்தே தீரும். இவர்களினது பிற் சந்ததிப் பரம்பரையைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன், ஆய்வுத் தேடலுக்காக நூலகத் தில் புத்தகங்களைத் தேடிக் களைக்கும் போது, தனது மூதாதையைச் சேர்ந்தவரின் அட்டைப் படத் தகவல்களைக் கண்டு, அப்படியே பூரித்துப் புளகாங்கிதம் அடை வான் என்பது திண்ணம்.

எனவே, இனிமேல் அட்டைப் படத்தில் புதிய வைக்கப்படும் பிரமுகர்களின் பதிவை வெகு வெகு நிதானத்துடனும் கூரிய அக்கறையுடனும் கவனமெடுத்துச் செயற்படுத்த வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.

உங்களது நிதானத் தேர்வின் மீது நான் அசாதாரண நம்பிக்கை கொண்ட வன். எனவே சறுக்க மாட்டீர்கள் என நிச்ச யமாக நம்புகின்றேன்.

நீர்கொழும்பு. வை.யோகேஸ்வரன்



# தூண்டில்

- டொமினிக் ஜீவா

➢ எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் படைப்புக்களைப் பற்றிய சில அறிமுகங்களைத் தருவீர்களா?

ஏறாவூர். பஸ்மிலா சாதிக்.

ஆரம்ப கால கட்டங்களில் ரகுநாதனின் சாந்தி இதழில் தான் எனக்கு அவரது பெயர் அறிமுகமானது. இயல்பாகவே இளந் தலைமுறைப் படைப்பாளிகள் தற்காலிகமாகப் பேசிப் புகழ் சம்பாதிக்கும் மார்ஸிசப் பார்வை கொண்டு, எழுத்துலகில் 'ஒரு அரசமரத்தின் கதை' என்ற இவரது நாவல் அந்தக் காலத்திலேயே புகழ் பெற்றது. இவரை, நான் இவரது ஊரான நாகர் கோவிலில் பூங்கா ஒன்றில் சந்தித்துப் பல மணி நேரம் உரையாடினேன்.

நான் மனசில் ஏற்கனவே வரித்துக் கொண்டவரல்ல இவர், என்ற எண்ணமே இறுதியில் என் நெஞ்சில் இடம் பெற்றது. ஒரு வகையான பார்ப்பனப் புத்தி ஜீவிகளுக்கே உரித்தான மிதப்புக் குணம் இவரது பேச்சில் இடையிடையே உட்புகுந்து விளையாடியது.

பின்னரும் இவரது காலச்சுவடு இதழுக்காகச் சென்னையில் நடந்த விழாவிலும் இவரைக் கண்டேன். நேரடியாக இவரிடம் சென்று, பேச்சுத் தொடர என் மனசு இடம் தரவில்லை. எனவே, ஒரு ஓரமாக நின்று, இவரது நடமாட்டத்தை அவதானித்துக் கொண்டேன்.

மறைந்தவர்களைப் பற்றிக் கருத்துச் சொல்வதில் வெகு அவதானமாக இருக்க வேண்டும். எனவே, விரிவாக இவரைப் பற்றி எனது மனக் கருத்துக்களைச் சுருக்கிக் கொள்ளுகின்றேன்.

நான் கடந்த 60 ஆண்டுக் காலங்களுக்கு மேலாகப் பலப் பல தமிழகத்து எழுத்தாளர்களைச் சந்தித்திருக்கின்றேன். பேசிப் பழகியிருக்கின்றேன்.

ஏனோ, இவரது நாமம் என் நெஞ்சில் நெருக்கமாகப் பதியவேயில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ பெண்ணிலை வாதம் பற்றி, உங்களது கருத்து என்ன?

எம். எப். நத்ரா

✍ வரலாற்றில் நடந்த ஓர் உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உலகத்திலேயே முதன் முதலில் ஒரு பெண்ணை முதல்வராக ஒற்றுக் கொண்ட நாடு, இது!

காலாதி காலமாகப் பெண்ணை அடிமைப்படுத்தி வந்திருக்கின்றது, இந்த உலகம். கல்வி, வெகுசன ஊடகப் பரம்பல், ஒவ்வொரு இளம் பெண்களில் இன்று காட்சி தரும் கைத் தொலைபேசியின் பெருக்கம், தானே தனது பொதுக் கடமைகளைச் செய்து முடிக்கும் சுள்ளுச் சுறுப்பு இத்தனையையும் ஒருங்கு சேர்ந்து ஒரு புதிய சர்வதேசப் பெண்குலத்தையே வெகு விரைவில் உருவாக்கப் போகின்றது என நான் மெய்யாகவே நம்புகின்றேன்.

அதே சமயம் பெண்ணிலை வாதம் பேசித் திரியும் சில நவீனரகவாதிகளின் நடவடிக்கைகளைக் கூர்ந்து பார்க்கும் போது. இந்த நியாயமான குரல் தடம் புரண்டு விடுமோ என அச்சமும் ஏற்படுகின்றது.

➤ பேய், பிசாசுகள் பற்றிய அநுபவக் கதை ஒன்றைச் சொல்லுங்கள்?

செங்கலடி கே. சுதர்சினி

✍ எனது அம்மா ரொம்பவே பயந்த சுபாவமுள்ளவர். இருட்டுக் கட்டினால் சிறுவனாகிய என்னை வெளியே போக விடமாட்டார். நான் இயல்பாகவே வெகு துடியாட்டக்காரன். எங்களது வீட்டுக்கு அண்மையில் பிள்ளையார் கோயில். அதன் எல்லையில் ஒரு பெருத்த அரச மரம். அதில் முப்பெரும் முனிகள் வசிப்பதாக அயல் அட்ட முழுக்கப் பிரஸ்தாபம். எனவே பட்டப் பகலில் கூட, அந்தப் பக்கம் மக்கள் நடமாட்டம் அரிதாக இருக்கும்.

நானோ ஒருவகைக் கிறுக்கன்! 'விளக்கு வைத்து இருட்டானதற்குப் பின்னர் துணிந்து போய் அந்த மரத்தைத் தொட்டுப் பார்த்து விட வேண்டும்!' என்ற இளம் வட்டன்களின் சவாலைப் பால பருவத்தில் சவாலாக ஏற்றுக் கொண்டேன்.

அந்த முனி மரத்தைத் தொட்டுப் பார்ப்பது மட்டுமல்ல, சுத்தியல் கொண்டு ஒரு ஆணியும் மரத்தில் பதித்து வைத்துவிட வேண்டுமென்று சவால்.

அந்த வயதில் அந்தச் சவாலை வெற்றிகரமாகச் செய்து முடித்தவன், தான் இந்தக் ஹீரோ!

பிற்காலத்தில் நடு நிசியில் இந்த மரத்தின் அடிப் பாகத்தில் அரசியல் நோட்டீஸ் ஒட்டியவர்களில் நானும் ஒருவன்!

(மேலே கேட்ட கேள்விகள் மூன்றையும் கேட்டவர்கள் கிழக்குப் பல்கலைக்கழக மாணவிகள் மூவர்.)

➤ 'கல்கி' அவர்களை நீங்கள் நேரில் பார்த்திரக்கிறீர்களா? அவருடன் பேசியிருக்கிறீர்களா?

பதுளை. எஸ். சுந்தரேசன்.

✍ நீண்ட நெடுங் காலத்திற்கு முன்னர் கல்கி இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்திருந்தார். வரவேற்புக் கூட்டமொன்று நகரில் ஏற்பாடாகி இருந்தது. நானும் எழுத்தாள நண்பர் என். கே. ரகுநாதனும் அக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். கேள்வி நேரத்தில் நான் எழுந்து நின்று "அறிஞர் அண்ணாவைப் பற்றி, நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?" என நேரிடையாகவே கேட்டேன். அந்தக் கால, மனோநிலை அன்று அவரிடம் இப்படியாகக் கேட்கத் தூண்டியது. அவரும் அன்றையச் சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரிப் பதிலளித்துச் சிரித்து வைத்தார். எனக்கோ மன ஆறுதல். கல்கி ஆசிரியரிடமே கேள்வி கேட்டு விட்டேன் என்ற மனப் பூரிப்பு வேறு. இவைகள் அனைத்துமே வளரும் இளம் பருவத்து மன வெளிப்பாடுகளே!

➤ 45- வது ஆண்டு மல்லிகை மலருக்குச் சிறப்பாக வெளியீட்டு விழா வைக்கும் நோக்கமேதும் உண்டா?

தெஹிவளை ஆர். பத்மநாதன்

✍ ஒவ்வோர் ஆண்டு மல்லிகை மலர் வெளியீடுகளையும் வெகு கோலாகலமாகவே நடத்தி முடிப்பது நமது வருஷாந்த வேலைத் திட்டங்களில் ஒன்று. எனவே, வழமை போல, 45– வது ஆண்டு மலருக்கும் வெளியீட்டு விழா வைத்துத் தானே ஆகவேண்டும்! இல்லாது போனால் சுவைஞர்கள் சும்மா விட்டு விட மாட்டார்களே!

➤ உங்களுடன் அந்தக் காலத்தில் உயிரும் பிராணனுமாகக் கலந்து பழகிய நண்பர்களை இன்றும் நீங்கள் நினைத்துப் பார்ப்பதுண்டா?

சுன்னாகம். எஸ். சிவநேசன்.

✍ வேறெந்த எழுத்தாளனையும் விட, நான் தான் அதிகமதிமாக அந்தக் காலத்து எழுத்தாளர்களையும் அன்னாரது நாமங்களையும் அடிக்கடி நினைவு கூர்ந்து வந்துள்ளேன். மல்லிகை இதழ்களை இதழ் தவறாமல் படித்து வருபவர்கள் இந்த உண்மையை ஒப்புக் கொள்ளவே செய்வார்கள்.

➤ தமிழ்– முஸ்லிம்– சிங்கள மக்கள் சமூகத்தவர்கள் இடையே உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்ப, இலக்கியம் எத்துணை முக்கியத்துவம் வகிக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

அ க்கரைப்பற்று எம். எ'ஸ். கரீமா.

✍ இந்த மாத– நவம்பர் 09– மல்லிகை இதழின் அட்டைப் படத்தை ஒரு தடவை ஊன்றிக் கவனித்துப் பாருங்கள். உங்களது வினாவிற்கு அவ்விதமே தக்க பதில் சொல்வதாக அமையும்.

➤ மல்லிகை ஆரம்பித்த போது, அதனது விற்பனை விலை, என்ன?

பதுளை, ஆர். குமாரன்

✍ இருபது சதம்.

➤ மல்லிகையின் வளர்ச்சியில் ஆரம்ப காலம் தொட்டே, பங்களித்தவர்கள் யார், யார்?

வெள்ளவத்தை. எம். தவேந்திரன்.

✍ பலர்– பலப் பலர். ஆரம்ப கால மல்லிகைக்குப் பங்களிப்புச் செய்த பலர் இன்று உயிருடன் இல்லை. இன்னும் பலர் புலம் பெயர்ந்து, எங்கெங்கோ பல தேசங்களிலும் இன்று வாழ்ந்து வருகின்றனர். அவர்களது வாழ்க்கைச் சூழலே மாறிப் போய்விட்டது. பலர் வயது முதிந்தவர்களாகி, பழைய இலக்கியக் கதைகளைத் தூர தேசங்களில் இருந்து, தமது பிற் சந்ததியினருக்குக் கதை போலச் சொல்லி வருவதாகக் கேள்வி. இருந்த போதிலும் கூட,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கால மல்லிகையின் நட்புத் தொடர்பை இன்னமும் பேணிப் பாதுகாத்து வருகிறேன். மல்லிகையின் மிகப் பெரிய சொத்தாக நான் கருதுகின்றேன்.

➢ உங்களிடம் மனந் திறந்து கேட்கின்றேன். பழைய 'எங்கட யாழ்ப்பாணம்' திரும்பவும் உதயமாகுமா? உண்மையைச் சொல்லுங்கள்!

நல்லூர் ஆர். குணநாயகம்

✍ பயப்படாதீர்கள். நெஞ்சை நிமிர்த்திப் பாருங்கள். அணுகுண்டினால் அழிவை சந்தித்த ஜப்பானிய நாடே இன்று புதுப் பிறவி எடுத்து, புதுப் பொலிவுடன் திகழ்ந்து வருகின்றது. மகத்தான மனிதர்களல்லவா உருவாக்கி புதிய யுகத்திற்குத் தள்ளிட முன்னர் கடந்த காலத் தூசு— மாசுகளையெல்லாம் களைந்தெறிந்து விட்டுப் புதுப் பிரதேசமாக விரைவில் மறு அவதாரம் செய்தே தீரும்! நிச்சயம் நடக்கும் நம்புங்கள். புதியதோர் பிரதேசத்தில் எம் பிற்சந்ததியினர் வாழ்ந்து காட்டி, உலகிற்கே ஒரு புதிய வரலாற்றைப் படைத்துக் காட்டுவார்கள்.

➢ வருங் காலத்தில் மரணித்தும் பேசப் படுபவராக இருக்க விரும்புகின்றீர்கள்?

மானிப்பாய். எஸ். நவேந்திரன்

✍ உண்மையான ஒரு மனிதனாக.

➢ நீங்கள் அடிக்கடி உங்களைப் பற்றி வரும் கேள்விகளுக்குத் தான் பெரும்பாலும் பதில் சொல்லுவதாக இலக்கிய உலகில் ஒரு குற்றச்சாட்டு ஒன்று உண்டு. இதைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

திருகோணமலை. ஆர். சிவகுரு.

✍ உளப் பூர்வமாகவே இந்தக் குற்றச்சாட்டை நீங்கள் நம்புகிறீர்களா? பெரும்பாலான இளந் தலைமுறையினர் இப்படியான சுவையான வழிகளில் தான் தமது பெயர்ப் பதிவுகளை அச்செழுத்தில் காண விரும்புகின்றனர். அதில் ஒரு மகா சந்தோசம். நானும் இளம் வயசில் இந்த வழிகளில் பெயரைப் பதிக்க முனைந்து, எழுத்துலகிற்கு வந்தவன், நான்!

இது ஒரு மனத் தத்துவ அணுகுமுறை. இந்தக் கேள்வி பதிலினால் தான் என் புகழ் மணக்க வேண்டுமென்றால், அத்தகைய பிரபலம் எனக்கு வேண்டவே வேண்டாம்.

➢ தொடர்ந்தும் இந்த வட பகுதி சாதீயச் சிக்கல் மல்லிகை மூலம் வெளிவந்து வெளிச்சம் போடுதல் [illegible], சம்பவங்கள் வந்தால், என்ன? கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்கள்?

கொழும்பு பீ. பவானந்தன்

✍ எழுத்தில் இந்தச் சாதி அகம்பாவத்தின் பின்னணி விளைவுகளைப் படித்து விட்டு நீங்கள் இத்தனை கடிய மனவேதனை அடைந்தால், இந்தச் சாதி வெறிச் சண்டாளர்களின் 'சுத்து மாத்து'ச் செயல்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட எமது மூதாதையர்கள் வாரிசுகள் எத்தனை தூரம் வேதனைப் பட்டிருப்பார்கள் என்பதைச் சற்றாவது யோசித்துப் பார்த்தீர்களா? ஒரு பொறுப்புள்ள சமூகம் தனது கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்பதே எனது மனக் கருத்து.

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13 [illegible] மல்லிகை ஆசிரியரும் வெளியீட்டாளருமான [illegible]
[illegible]
[illegible]


## எமது புதிய வெளியீடுகள்



அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை

### இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்

கலாநிதி குமாரி ஜயவர்த்தன

மொழிபெயர்ப்பு க. சண்முகலிங்கம்

ISBN 978-955-659-205-4

பக்கங்கள் xxvi + 150

விலை 450.00

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் முதலாளித்துவம் வளர்ச்சி பெற்ற வரலாற்றை இந்நூல் கூறுகின்றது. நவீனகால வரலாற்றில் கவனிக்கப் படாத விடயமான இந்த முக்கிய விடயத்தை கூறும் இந்நூல் முதலாளித்துவ வளர்ச்சியின் படிநிலைகளை விளக்குகிறது. இந்நூல் காலனித்துவ வர்க்கம் முதலாளித்துவ மாற்றத்தில் முதன்மை பெறுவதை எடுத்துக் காட்டுகின்றது. பல சாதிகள், பல்வேறு இனக்குழுமங்கள், சமயப் பண்பாடுகளை பின்னணியாகக் கொண்ட அநாமதேயங்களாக இருந்தோர் (NOBODIES) அறியப்பட்டவர்களாக (SOME BODIES) எழுச்சி பெற்றுத் தலையெடுத்த வரலாற்றை இந்நூல் விளக்கிச் செல்கிறது.

1. ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்
   - கலாநிதி நா. சுப்பிரமணியன் 700.00
2. செ. கணேசலிங்கன் நாவல்கள் ஓர் ஆய்வு
   - அமிர்தலிங்கம் பௌநந்தி 500.00
3. நவீன அரசியல் சிந்தனை ஓர் அறிமுகம்
   - க. சண்முகலிங்கம் 350.00
4. ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும்
   - கலாநிதி செ. யோகராசா 250.00
5. ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி
   - பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா 300.00
6. இலங்கையில் அரசியற் கட்சி முறைமை
   - சி. அ. யோதிலிங்கம் 500.00
7. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்
   - பேராசிரியர் கா. சிவத்தம்பி 937.50
8. ஈழத்துப் பழைய இலக்கியங்கள்: வரலாறு தேடல்
   - பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை 300.00
9. தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள்
   - பேராசிரியர் அ. சண்முகதாஸ் 450.00

### குமரன் புத்தக இல்லம்

[illegible], கொழும்பு - 12, தொலைபேசி 2421388 [illegible]

3 மெய்கை விநாயகர் தெரு, குமாரசாமி நகர், வடபழனி சென்னை - 600026

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**OUR PRODUCT**

DATABASE PRINTING, BROCHURES, CATALOGUES, SOUVENIRS, BOOK MARKS, GREETING CARDS, NAME TAGS, CD/DVD COVERS, COLOUR BIO DATA, STICKERS INVITATION CARDS, PROJECT REPORTS, BOOK COVER, MENU CARDS, GARMENT TAGS, THANKING CARDS,CERTIFICATES, BOOKS, POSTERS, CD STOMER, TRANSPARENCY SHEET, PLASTIC CARDS, SCRATCH CARDS, VISITING CARDS.

# HAPPY DIGITAL CENTRE (PVT) LTD

*Digital Colour Lab & Digital Offset Press*

No.75 1/1, Sri Sumanatissa Mawatha, Colombo - 12.
Tel: +94 11 4937336, +94 11 7394590
web: www.hdclk.com, E-mail: happy2002@live.com